Follow us:

# தமிழன்
THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்


மலர் : 01, இதழ் : 47 சார்வரி வருடம், ஆவணி மாதம் 09ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (25.08.2020) ஹிஜ்ரி - 1442, முஹர்ரம் பிறை-05, 0115886187 பக்கங்கள் 12 விலை ரூ.20

## மின்வெட்டு அறிக்கை கையளிப்பு!



நாடுபூராகவும் மேற்கொள்ளப்பட்ட திடீர் மின்வெட்டு குறித்து ஆராயவென நியமிக்கப்பட்ட விசேட குழுவின் அறிக்கை மின்சக்தி அமைச்சர் டலஸ் அலகப்பெருமவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கை நாளைய தினம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

## நக்கல்நமசிவாயம்




## கோமா நிலையில் வடகொரிய ஜனாதிபதி கிம்;
### ஆட்சி அதிகாரத்தில் சகோதரி கிம் யோ ஜங்க்

02



## - தமிழர் சுயநிர்ணய உரிமை குறித்தான -
# விக்கியின் உரை நீக்கப்படும்!
## ஆளுங்கட்சி - எதிர்க்கட்சி எம்.பி.க்கள் கூட்டாக எதிர்ப்பை வெளியிட்டதால் சபாநாயகர் முஸ்தீபு!

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் கன்னியமர்வில் முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சரும் தற்போதைய நாடாளுமன்றத்தின் உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன் ஆற்றிய உரையின் சில பகுதிகள் நாடாளுமன்ற ஹன்ஸார்ட்டிலிருந்து நீக்கப்படலாமென தெரிகிறது.

புதிய சபாநாயகரை வாழ்த்தி ஆற்றிய உரையின்போது தமிழர்களின் சுயநிர்ணய உரிமை குறித்து விக்னேஸ்வரன் தெரிவித்த கருத்துகள் தொடர்பில் , ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார சிறப்புரிமை பிரச்சினை ஒன்றை தொடுத்து கேள்வியெழுப்பினார்.

அதனையடுத்து ஆளுங்கட்சி - எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இது தொடர்பில் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில் நாடாளுமன்றம் வரும் 27 ஆம் திகதி கூடும்போது இது தொடர்பில் சபாநாயகரிடம் கேள்வியெழுப்ப உறுப்பினர்கள் சிலர் தயாராகி வருகின்றனர்.

எவ்வாறாயினும் விக்கினேஸ்வரனின் உரையின் சில பகுதிகளை நாடாளுமன்ற உரையிலிருந்து நீக்கும் முடிவையே சபாநாயகர் எடுப்பாரென நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழரின் சுயநிர்ணய உரிமை குறித்தான விக்கியின் கருத்தை நாடாளுமன்றம் நீக்கினால் அது தொடர்பில் எதிர்ப்பை தெரிவிக்க தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் தயாராகி வருவதாக அறியமுடிந்தது.

## ஐ.தே.க.வின் தலைமைத்துவத்தை பொறுப்பேற்கத் தயார்-உறுதிபடத் தெரிவித்தார் கரு ஜயசூரிய



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தை பொறுப்பேற்க தயாராக இருப்பதாக தெரிவித்துள்ள முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, இதுதொடர்பில் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கும் அறிவித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் விசேட ஊடக அறிக்கையொன்றினூடாக இந்த விடயத்தை தெரிவித்துள்ள அவர், அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

முன்னாள் பிரதமர் டி.எஸ்.சேனாநாயக்கவால் ஸ்தாபிக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியே எமது... 02



## வயது முதிர்ந்தவரின் மூக்கினுள் நுழைந்து துவம்சம்
### நாசியில் இருந்து 11 குளவிகள் மீட்கப்பட்ட சோகம்!

02



## விக்னேஸ்வரனின் கருத்தை எதிர்ப்போர் உண்மை வரலாற்றை நாட்டு மக்களுக்குச் சொல்லத் தயாரா?
### கேள்வி எழுப்புகிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன்



ஒன்பதாவது நாடாளுமன்றத்தில் சபாநாயகரை வாழ்த்திப் பேசுகையில், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனின் உரையை ஹன்சாட்டிலிருந்து நீக்க வேண்டும் என்று கூறுபவர்கள் உண்மையான வரலாற்றை நாட்டு மக்களுக்குச் சொல்லத் தயாரா? - என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் இணைப்பேச்சாளரும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை... 02

## தொலைபேசி இலக்கத்தை மாற்றாமல் மொபைல் சேவை வழங்குநரை மாற்றுவதற்கான சந்தர்ப்பம்!




தொலைபேசி பாவனையாளர்கள் பயன்படுத்துகின்ற கையடக்க தொலைபேசி இலக்கத்தில் மாற்றத்தை ஏற்படுத்தாது, சேவை வழங்குநரை மாற்றுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்க இலங்கை தொலைத்தொடர்பு ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இதன்படி, பாவனையாளர் தமது விருப்பத்திற்கு அமைய 'சிம்' அட்டையை மாற்றாது, தமக்கு விருப்பமான சேவை வழங்கும் நிறுவனத்தை தெரிவுசெய்யும் வகையிலான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழு அறிவித்துள்ளது. 02

## காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு நீதி கோரும் கவனயீர்ப்புப் போராட்டம்!

★ வடக்கு-கிழக்கில் வரும் 30ஆம் திகதி
★ ஆதரவை வெளியிட்டார் விக்கி எம்.பி.



வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள போராட்டத்திற்கு தமிழ் மக்கள் தேசிய கூட்டணியும் ஆதரவு தெரிவித்துள்ளது.

அந்த கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் நேற்று வெளியிட்ட அறிக்கையில்-

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சர்வதேச தினத்தன்று (30) வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் நடத்தப்படும் கவனயீர்ப்புப் போராட்டம் மற்றும் பேரணிகளுக்கு தமிழ் மக்கள் தேசிய கூட்டணி முழுமையான ஆதரவைத் தெரிவித்துக்கொள்வதுடன் பொதுமக்களை இந்த நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறும் வேண்டுகோள் விடுக்கின்றது.

பௌத்த சிங்கள பேரினவாத அரசாங்கம் நாட்டில் அசுர பலத்துடன் ஆட்சி அமைத்துள்ள நிலையில் தமிழ் மக்கள் தமக்கு எதிராக இழைக்கப்பட்ட இனப்படுகொலைகளுக்கான நீதியைப் பெற்றுக்கொள்ளும் போராட்டங்களை தீவிரப்படுத்த.... 02




## அரச நியமனத்தில் நிராகரிக்கப்பட்ட பட்டதாரிகள் வடக்கு ஆளுநரிடம் மகஜர் கையளிப்பு!
### வரும் 2ஆம் திகதிக்குள் தீர்வைத் தரவும் கோரிக்கை



யாழ்ப்பாண மாவட்டத்தில் அரச நியமனங்கள் நிராகரிக்கப்பட்ட பட்டதாரிகள் வடக்கு மாகாண ஆளுநரிடம் மகஜர் ஒன்றை கையளித்தனர்.

அரசாங்கத்தினால் 50 ஆயிரம் பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு நாடு பூராகவும் வழங்கப்படவுள்ளது. பட்டதாரிகளுக்கான அரச நியமன கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ள நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 1,450 க்கும் மேற்பட்ட பட்டதாரிகளுக்கான... 02

## 20 ஆவது அரசியல் யாப்பு திருத்தத்தின்போது ஆணைக்குழுக்களில் விசேட சீர்திருத்தங்கள்
### அமைச்சர் கெஹலிய கண்டியில் கருத்து



20 ஆவது அரசியல் யாப்பு திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்போது தற்பொழுது நடைமுறையில் உள்ள சுயாதீன ஆணைக்குழுக்கள் தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்படவிருப்பதாக வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

சுயாதீனம் என்று தெரிவிக்கப்பட்ட போதிலும் ஆணைக்குழு எந்த வகையிலும் சுயாதீனம் அற்றது என்றும் அமைச்சர் கூறினார். கண்டியில் நடைபெற்ற வைபவம்... 02

| சீட்டிழுப்பு | வாரம் | திகதி | ஆங்கில எழுத்து | இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| அதி கோடீபதி | 1012 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 16ஆம் திகதி | R | 02 29 39 43 |
| சனிதா வாசனா | 3352 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 17ஆம் திகதி | V | 11 23 33 51 |
| சுப்பர் போல் | 1194 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 17ஆம் திகதி | A | 27 44 57 74 |
| அதி கோடீபதி | 1013 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 17ஆம் திகதி | K | 12 36 71 74 |
| கோடீபதி கப்ருக | 613 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 18ஆம் திகதி | A | 09 12 14 43 |
| அதி கோடீபதி | 1014 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 18ஆம் திகதி | S | 24 40 47 59 |
| சனிதா வாசனா | 3353 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 19ஆம் திகதி | T | 38 58 61 62 |
| அதி கோடீபதி | 1015 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 19ஆம் திகதி | E | 04 09 12 75 |
| சுப்பர் போல் | 1195 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 20ஆம் திகதி | L | 30 36 39 77 |
| அதி கோடீபதி | 1016 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 20ஆம் திகதி | A | 18 19 21 62 |
| அதி கோடீபதி | 1017 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 21ஆம் திகதி | R | 12 29 35 49 |
| கோடீபதி கப்ருக | 614 ஆவது வாரம் | 2020 ஒகஸ்ட் 21ஆம் திகதி | I | 05 52 70 71 |
| சுப்பர் போல் | 1197 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 23ஆம் திகதி | U | 11 18 50 73 |
| கோடீபதி கப்ருக | 615 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 23ஆம் திகதி | C | 29 57 68 72 |

## ஐ.தே.க.வின்....

நாட்டின் சுதந்திரத்தை பெற்றுக்கொள்வதற்கு பெரும் பங்களிப்பை வழங்கிய, தேசியத்துவத்தை கொண்ட அரசியல் சக்தியாகும். 21ஆம் நூற்றாண்டின் சவால்களை வெற்றிகொள்வதற்காக முதிர்ச்சிபெற்ற, திறமையுள்ள மற்றும் சர்வதேச வரவேற்புடைய கட்சி ஐக்கிய தேசியக் கட்சியேயாகும். எவ்வாறாயினும், தற்போது இந்தக் கட்சிக்குள் எழுந்துள்ள குழப்பநிலை சகல தரப்பினரதும் ஜனநாயகத்தை வரவேற்கும் குடிமக்களது கவலைக்குரிய விடயமாக மாறியுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்பட்டுள்ள இந்த வீழ்ச்சியை பொருட்படுத்தாமல், அதனை வெற்றிகொண்டு மீண்டும் கட்சியை மாற்றியமைப்பதற்காகவும் இந்தக் கட்சியால் எதிர்காலத்தில் நாட்டுக்குச் செய்யக்கூடிய வேலைத்திட்டங்களுக்காகவும் பங்குகொள்ளுமாறு கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் ஒருசிலர் எனக்கு அழைப்பு விடுத்திருந்தார்கள்.

அதேபோன்று, மகாசங்கத்தினர் உள்ளிட்ட சமய தலைவர்கள், ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவம் செய்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாட்டை நேசிக்கும் புத்திஜீவிகள், ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒத்துழைத்து செயற்படும் கட்சிகளின் தலைவர்கள், மாகாண சபைகள மற்றும் பிரதேச சபை மட்டம் வரையிலான மக்கள் பிரதிநிதிகள், கட்சியுடன் தொடர்புடைய தொழிற்சங்கங்கள், இளைஞர் அமைப்புகள், ஜனநாயகத்தை வரவேற்கும் சிவில் அமைப்புகள் ஆகியனவும் எனக்கு இவ்வாறு அழைப்பு விடுத்திருந்தன.

இதுவே, எதிர்வரும் தேர்தல்களின்போது கட்சியின் தோல்வியை தடுப்பதற்கான இறுதி வாய்ப்பு என்பதையே இந்த சகல தரப்பினரும் எனக்கு தெளிவுபடுத்தினார்கள். எதுஎவ்வாறாயினும், மக்களின் எதிர்பார்ப்புக்கு மதிப்பளித்து உறுப்பினர்களின் நிலைப்பாட்டுக்கமைய தற்போது கட்சிக்குரிய மறுசீரமைப்பு நடவடிக்கைகளை உடனடியாக முன்னெடுத்து, புதிய முகங்களுடைய துரித மறுசீரமைப்பு நடவடிக்கைகளினூடாக ஐக்கிய தேசியக் கட்சிக்குரிய இடத்தை மீண்டும் ஏற்படுத்திக்கொள்ள முடியும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும். 1994ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அந்தக் கட்சியை பொறுப்பேற்றதுடன், கட்சித் தலைமையின் அழைப்பினூடாக கட்சியின் தவிசாளராகவும், பிரதித் தலைவராகவும், தலைமைத்துவ சபையின் தலைவராகவும் இருந்துள்ளேன். இதேவேளை, 2014ஆம் ஆண்டு இடம்பெற்ற ஊவா மாகாண சபைத் தேர்தலுக்கு தலைமைத்துவத்தை வழங்கியிருந்தேன்.

எனது அரசியல் பயணத்தில், நாட்டின் ஜனநாயகம் மற்றும் செயற்திறனை அதிகரிப்பதற்காகவே செயற்பட்டிருந்தேன். 17ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை கொண்டுவந்தமை மற்றும் தகவல் அறியும் உரிமையை மக்களுக்கு பெற்றுகொடுத்தல் ஆகிய விடயங்களில் எனது முழு முயற்சியை வழங்கியிருந்தேன். அதேபோனறு, 1995ஆம் ஆண்டு முதல் இந்த நாட்டுக்கு நன்மை பயக்கும் வகையிலான புதிய ஜனநாயக மறுசீரமைப்புகளை அறிமுகப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்தேன். இந்நிலையில், தற்போது ஏற்பட்டுள்ள குழப்பநிலையை கருத்திற்கொண்டு, அநேகமானவர்களால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோள் தொடர்பில் ஆராய்ந்து பார்த்துள்ளதுடன் , நாட்டில் கட்சியின் அடையாளத்தை தக்கவைத்துக்கொள்வதற்காகவும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தை பொறுப்பேற்றுக்கொள்ள தயாராக இருப்பதாக தற்போதைய கட்சியின் தலைவர் உள்ளிட்ட கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கையின் அடையாளம் மற்றும் மக்களுக்காகவும் இந்த முடிவை எடுத்துள்ளதாகவும் எமது நாட்டில் இடம்பெறவேண்டிய முன்னேற்றங்களுக்கும் ஒத்துழைப்பை வழங்கும் நோக்கிலேயே இந்த தீர்மானம் எடுத்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## தொலைபேசி...

இதற்கு முன்னரும் இந்த நடைமுறையை செயற்படுத்த முயற்சித்த போதிலும், அது வெற்றியளிக்கவில்லை. பாவனையாளர் வசதிக்கு ஏற்பவே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக இலங்கை தொலைத்தொடர்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# அத்துரலிய ரத்தன தேரரை தேடுகிறது பொலிஸ்

## விசாரணைக்கு வராவிட்டால் கைதாகும் சாத்தியம்!

அபே ஜனபல கட்சியின் பொதுச் செயலாளர் வேதினிகம விமலதிஸ்ஸ தேரர் கடத்தப்பட்டதாக செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பில் விசாரணைகளை நடத்த கொழும்பு மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலகத்திற்கு பிரசன்னமாகுமாறு அத்துரலிய ரத்தன தேரருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும், அவர் விசாரணைகளுக்காக பிரசன்னமாகவில்லை என அறிய முடிகின்றது.

வேதினிகம விமலதிஸ்ஸ தேரர், அத்துரலிய ரத்தன தேரரினால் கடத்தப்பட்டதாக விமலதிஸ்ஸ தேரரின் இணைப்புச்செயலாளர் ஹுணுபிட்டிய சந்திரசிறி தேரரினால் கடந்த 19ஆம் திகதி முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டது. இந்த முறைப்பாட்டிற்கு அமைய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர்



அத்துரலியே ரத்தன தேரர் தங்கியுள்ள விகாரைக்கு சென்ற போதிலும், அவர் அங்கு இருக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. அதையடுத்து, குறித்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அத்துரலியே ரத்தன தேரரை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, 23ஆம் திகதி கொழும்பு மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலகத்திற்கு பிரசன்னமாகுமாறு அழைப்பு விடுத்துள்ளார். அபே ஜனபல கட்சியின் பொதுச் செயலாளர் வேதினிகம விமலதிஸ்ஸ தேரரை கடத்தியதாக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள அத்துரலியே ரத்தன தேரர் தற்போது தலைமறைவாகியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

ரத்தன தேரர் தொடர்ந்தும் பொலிஸாரை நிராகரித்துவரும் பட்சத்தில், அவரை கைது செய்யவேண்டிய நிலைமை ஏற்படும் என பொலிஸார் கூறுகின்றனர். நபரொருவர் கடத்தப்பட்டதாக குற்றஞ்சுமத்தப்பட்டுள்ள அத்துரலியே ரத்தன தேரர், வாக்குமூலம் வழங்க பல்வேறு சந்தர்ப்பங்களில் தவறியுள்ளமையை அடிப்படையாகக்கொண்டே அவர் கைது செய்யப்படவுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

## வயது முதிர்ந்தவரின்..

பதுளை பெரியாஸ்பத்திரியில் நேற்று மாலை சேர்க்கப்பட்ட 70 வயது முதியவரின் நாசியிலிருந்து 11 தேன் குளவிகள் வெளியில் எடுக்கப்பட்டன.உடல் பூராகவும் நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் குளவிக் கொட்டியிருந்தமைக்கான இடங்களுக்கு மருந்தும் பூசப்பட்டன .இதற்காக மூன்று டாக்டர்கள், தாதியர் ஆறு பேர் சுமார் மூன்று மணி நேரத்தை செலவிட வேண்டியிருந்தது. பதுளை கலஉட பகுதியை சேர்ந்த இந்த முதியவர் பச்சிலை பறிப்பதற்காக காட்டுக்கு சென்றபோது தேன் குளவிக் கூடொன்று கலைந்ததால் இந்த அனர்த்தம் ஏற்பட்டது.பின்னர் அவர் அபயக் குரல் எழுப்பியதால் அங்கு விரைந்த அயலவர்கள் குளவிகள் கொட்டியபடி இருந்த அவரை பதுளை பெரியாஸ்பத்திரியில் சேர்த்தனர்.

குளவிகள் உடம்பிலிருந்து அகற்றப்பட்டாலும் உடல்நிலை பாதிப்பு காரணமாக அவர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

# போதைப்பொருளுடன் 7 இளைஞர்கள் பதுளையில் கைது!
## -அரசியல்வாதியொருவரின் மகனும் உள்ளடக்கம்-



பதுளை பகுதியைச் சேர்ந்த அரசியல்வாதி ஒருவரது புதல்வன் உள்ளிட்ட ஏழு இளைஞர்கள் போதைவஸ்து தொடர்பான குற்றச்சாட்டொன்றின் பேரில், பதுளை போதைவஸ்து குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவினரால், நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பதுளை போதைவஸ்து குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலொன்றினையடுத்து, விரைந்த பொலிஸ் பிரிவினர், குறிப்பிட்ட ஏழு இளைஞர்களையும் போதைவஸ்து பக்கட்டுக்களுடன் கைதுசெய்துள்ளனர். பதுளைப் பகுதியின் அரசியல்வாதியொருவரது புதல்வனும் கைதுசெய்யப்பட்டவர்களில் அடங்கியுள்ளமை தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்டவர்கள் போதைவஸ்து விற்பனை தொடர்பான செயற்பாடுகளில் நீண்டகாலமாகவே இயங்கியமை ஆரம்ப விசாரணைகளில் தெரிய வந்திருப்பதாக பொலிஸ் பிரிவின் பணிப்பாளர் அசங்க குணரட்ன தெரிவித்தார்.

## விக்னேஸ்வரனின்...

முன்னணியின் தலைவருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

புதிய நாடாளுமன்றத்தில் முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன் முதன்முதலாக ஆற்றிய கன்னி உரை நாடாளுமன்றத்திலும் தென்பகுதியிலும் பலத்த சலசலப்புகளை ஏற்படுத்தியிருக்கின்றது. தமிழ் மிகவும் தொன்மையான மொழி என்றும் இலங்கையில் மூத்த குடிமக்களாக தமிழர்களே இருந்தார்கள் என்றும் அவ்வாறான மக்களுக்கு இறையாண்மை இருப்பதாகவும் அவர் கூறிய கருத்தை சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களால் ஜீரணித்துக்கொள்ள முடியவில்லை.

இதன் காரணமாக ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த மனுஷ நாணயக்கார என்ற நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரனின் உரை சிங்கள மக்களுக்கு எதிரானது என்ற தொனியில் விமர்சித்ததுடன், அவரது உரை ஹன்சாட்டிலிருந்து நீக்கப்படவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

இலங்கையின் வரலாறு என்று கூறப்படும் மகாவம்சத்தில் விஜயன் இந்தியாவிலிருந்து தனது 700 நண்பர்களுடன் இலங்கைக்கு வந்ததாகவும் இவ்வாறு அவன் இலங்கைக்கு வந்து குவேனி என்ற பெண்ணை மணந்ததாகவும் கூறப்படுகின்றது.

விஜயன் இலங்கைக்கு வந்தபோது இலங்கையில் திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், முன்னேஸ்வரம், நகுலேஸ்வரம், தொண்டீஸ்வரம் ஆகிய ஐந்து ஈஸ்வரங்கள் இலங்கையைச் சுற்றிலும் இருந்ததாகவும் இங்கிருந்தோர் சிவனை வழிபட்டு வந்ததாகவும் அவர்கள் பேசியது தொன்மையான தமிழ் மொழி எனவும் சிங்கள, தமிழ் மற்றும் சர்வதேச வரலாற்று ஆய்வாளர்கள் கூறியிருக்கின்றார்கள். இதனைதான் நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரனும் தனது கன்னி உரையில் குறிப்பிட்டு அவ்வாறான தொன்மையானதொரு மக்கள் இனத்துக்கு நீதி கிடைக்கவேண்டும் என்பதை வலியுறுத்தியிருந்தார். இது எந்த விதத்தில் ஓர் இனவாதக் கருத்தாக அமையும் என்பதை கற்றறிந்த சிங்கள மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரனின் கருத்துகளை பாரிய இனவாத கருத்துகளாகவும் இவை அடக்கப்படவேண்டும் எனவும் இந்தக் கருத்துகள் தமிழீழக் கோரிக்கைக்கு ஒப்பானது என்றும் பிரதமர் உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேசுவதானது அவர்களின் உள்நோக்கத்தையே வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது.

போர்த்துக்கேயர் இலங்கையைக் கைப்பற்றியபோது இலங்கை முழுவதிலும் தமிழே நீதிமன்ற மொழியாக இருந்தது என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

தமிழ் மக்களின் மொழி, அதனுடைய தொன்மை, அவர்களது கலாசாரம், பண்பாடு, அவர்களுக்கு உரித்தான அதிகாரங்கள், அவர்களின் பாதுகாப்பு இவை எதனைப் பற்றிப் பேசினாலும் ஒட்டுமொத்த சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இவை இனவாதக் கருத்துகளாகவே தோன்றுகின்றன. இன்னும் சொல்லப்போனால் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது மொழிதொடர்பாகவோ, தமது பிறப்புரிமைகள் தொடர்பாகவோ, அவர்களது பாதுகாப்பு தொடர்பாகவோ பேசக்கூடாது என எதிர்பார்க்கின்றார்கள். அரசாங்கத்தின் காணி அபகரிப்பு, எமது புராதன சின்னங்களை அழித்து ஒழித்தல், தமிழ் மக்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ள மறுத்தல் போன்ற அனைத்தையும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள். தமிழ் இனத்துக்கு எதிரான இனப்படுகொலைகள், யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் மானுடத்திற்கெதிரான குற்றங்கள் தொடர்பாக நாடாளுமன்றத்திலோ, வெளியிலோ தமிழர் தரப்புகள் பேசக்கூடாது என்று எதிர்பார்க்கின்றார்கள். இவ்வாறு பேசுவது எல்லாம் இனவாதக் கருத்துகள் என முத்திரைகுத்த முயற்சிக்கின்றார்கள். நாடாளுமன்றத்தில் இருக்கக்கூடிய சிங்கள பௌத்த இனவாத சக்திகளும் அரசும் இவ்வாறான முயற்சிகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டுவருகின்றார்கள். இவ்வாறான கருத்துகளை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பதை தெளிவாக கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

விக்னேஸ்வரன் கூறிய கருத்துகள் தவறான கருத்துகள் என்று கருதினால் அதில் எந்தவிதமான உண்மையும் இல்லை அவை பாரதூரமான கருத்துகள் என்று கருதினால் சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் உண்மையான கருத்துகளைக் கூறி தங்கள் கருத்து சரி என வாதிட வேண்டுமே தவிர, அவை எதனையும் கூறாமல் அதனை நாடாளுமன்ற குறிப்பேட்டிலிருந்து எடுக்கும்படி வற்புறுத்துவதானது அவர்களது இயலாத் தன்மையை வெளிப்படுத்துகிறது. விக்னேஸ்வரனின் கருத்துகளை சவாலுக்குட்படுத்துவதற்கோ அல்லது அது பொய்யானது என்றோ நிரூபிக்கமுடியாத சூழ்நிலையில் சபாநாயகரைப் பயன்படுத்தி அவரது கருத்தை ஹன்சாட்டிலிருந்து அகற்ற முயற்சிப்பது சரியானதொரு செயற்பாடாகத் தோன்றவில்லை.

நாடாளுமன்றம் என்பது மக்கள் பிரதிநிதிகள் தங்களது மக்களின் குறைநிறைகளை அது தொடர்பான சட்டங்களை பேசுவதற்கும் உருவாக்குவதற்குமான சபையாகவே உள்ளது. அதாவது மக்கள் தமது இறையாண்மையை தமது பிரதிநிதிகள் ஊடாக நாடாளுமன்றத்தில் செயற்படுத்துகின்றார்கள் என்பதே அதன் அர்த்தமாகும். ஆகவே, அந்தவகையில் சிறுபான்மை தேசிய இனமொன்றின் பிரதிநிதிகள் அந்தத் தேசிய இனத்தின் உரிமைகள், இருப்புகள், பாதுகாப்பு தொடர்பாகவும் நாடாளுமன்றத்தில் எடுத்துரைப்பதற்கு உரித்துடையவர்கள். அதற்கான உரித்துகள் அனைத்தும் வரலாற்றுபூர்வமாக அவர்களுக்கு இருக்கிறது என்பதையும் பெரும்பான்மை இனத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் பெரும்பான்மை இனத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசும் புரிந்துகொள்ளவேண்டும்.

புதிய நாடாளுமன்றத்தில் வந்திருக்கக்கூடிய அரச தரப்பினரும் எதிர்தரப்பில் இருக்கக்கூடிய சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களும் தம்மை சிங்கள - பௌத்த பெரும் தேசியவாதிகள் எனக் கருதிக்கொள்வதும் ஏனைய தேசிய இனங்கள் தங்களுக்கு அடிமையாக சேவை செய்யவேண்டும் என்று கருதுவதும் ஏற்றுக்கொள்ளப்படமுடியாத ஒருநிலைப்பாடாகும்.

உண்மையான வரலாற்றைத் திரிபுபடுத்தி, அதனை மறைத்து உண்மைக்கு எந்த விதத்திலும் தொடர்பற்ற கற்பனையில் தோற்றுவிக்கப்பட்ட வரலாற்றை பாடப்புத்தகங்களில் நுழைத்து மக்களை திசைத்திருப்பி விட்டவர்கள் இந்நாட்டில் தொடர்ந்தும் மாறிமாறி ஆட்சி செய்துவரும் சிங்கள - பௌத்த மேலாதிக்கவாத சக்திகளே அன்றி, தமிழ் மக்கள் அல்லர் என்பதை ஆட்சியாளர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

நாட்டின் உண்மையான வரலாற்றை மறைத்து, இந்த நாடு சிங்கள மக்களுக்கு மட்டுமே உரித்தானது என்று நிறுவ முற்படுவதுதான் இனப்பிரச்சினைக்கான ஆணிவேர். இதனைப் புரிந்துகொண்டு இனியாவது உண்மையான வரலாற்றை மக்களிடம் எடுத்துச்சென்று இதுவரைகாலமும் தமிழ் மக்கள்மீது கட்டவிழ்த்துவிடப்படுகின்ற அரச வன்முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து அனைவரும் அவரவர் உரிமைகளுடன் வாழ வழிவகுக்க வேண்டும்.

எனவே, பலமொழிகள், பல மதங்கள், பல இனங்கள் இருக்கக்கூடிய ஒரு நாட்டில் சிங்கள பௌத்தர்கள் மாத்திரம்தான் தீர்மானிக்கும் சக்திகள் எனக் கருதி ஏனையோரை அடக்கி ஒடுக்கும் கருத்துகளை கைவிட்டு இனங்களுக்கிடையில் புரிந்துணர்வை உருவாக்கக்கூடியவகையில் அரசும் சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களும் முன்வரவேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம்.

## கோமா நிலையில்...

வடகொரியா ஜனாதிபதி கிம் ஜோங் உன், கோமா நிலையில் இருப்பதால், அவரது சகோதரியான கிம் யோ ஜங்கிடம் நாட்டின் அனைத்துப் பொறுப்புகளும் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. கிழக்காசிய நாடான வட கொரியாவின் தலைவர், கிம் ஜோங் உன், உடல் நிலை குறித்தும் அவர் கோமா நிலைக்கு சென்றுவிட்டதாகவும், கடந்த சில மாதங்களுக்கு முன் பல்வேறு யூகங்களில் செய்திகள் வெளியான நிலையில் கடந்த மே மாதம் தலைநகர் பியோங்யோங் நகரில் உள்ள சன்ச்சூன் என்ற இடத்தில் பிரம்மாண்ட உர தொழிற்சாலை திறப்பு விழாவில் கிம் ஜாங் உன், தனது சகோதரியுடன் கலந்துகொண்டார்.

இதனிடையே ஆட்சியில் தனது சகோதரி கிம் யோ ஜங்க்கிற்கு முக்கிய பொறுப்புகளை வழங்க முடிவு செய்துள்ளதாகவும், இதற்கான புதிய கொள்கையை அறிவித்து தனக்குள்ள அனைத்து அதிகாரங்களையும் கிம் யோ ஜங்கிற்கு பகிரவும் வடகொரியா தலைவர் முடிவு செய்துள்ளதாகவும் தகவல் வெளியாகின. இந்நிலையில், கிம் ஜோங் உன், கோமா நிலையில் இருப்பதால், அவரது சகோதரியான கிம் யோ ஜங்கிடம் நாட்டின் அனைத்துப் பொறுப்புகளும் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. இது தொடர்பான தகவலை தென்கொரியாவின் முன்னாள் ஜனாதிபதியான கிம் டே ஜங்கின் உதவியாளராக இருந்த சாங் சங் மின் வெளியிட்டுள்ளார். சமூக வலைத்தளப் பக்கத்தில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது: வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் கோமாவில் இருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது. ஆனால், அவர் வாழ்வு இன்னும் முடிவு பெறவில்லை. தற்போதைய நிலவரப்படி வடகொரியாவின் அனைத்து அரசுப் பொறுப்புகளும் (தேசியம் மற்றும் சர்வதேசம் உட்பட) அவரது சகோதரியான கிம் யோ ஜங்கிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. - இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

## காணாமலாக்கப்பட்டவர்களின்...

வேண்டிய அவசியமான ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், எதிர்வரும் 30 ஆம் திகதி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சர்வதேச தின போராட்ட நிகழ்வுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. சர்வதேச சுயாதீன விசாரணை ஒன்று நடத்தப்படும்போது தான் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி கிடைப்பது சாத்தியமாகும். அதனால், சர்வதேச சுயாதீன விசாரணை ஒன்றுக்கான ஏற்பாடுகளை சாத்தியமான எல்லா வழிகளையும் பயன்படுத்தி மேற்கொள்ளுமாறு ஐ.நா மற்றும் சர்வதேச சமூகம் ஆகியவற்றை வலியுறுத்தி நடத்தப்படும் இந்த போராட்டங்களில் பொது அமைப்புக்கள் மற்றும் பொது மக்களை முழுமையான ஆதரவு வழங்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

வட மாகாணத்தில் யாழ். பேரூந்து நிலையத்தில் இருந்து பேரணி ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்த பேரணி யாழ் மாவட்ட செயலகம் வரை சென்று அங்கே ஐ.நா. விடம் கையளிக்கப்படுவதற்கான மகஜர் ஒன்று கொடுக்கப்படவிருக்கின்றது. அதே போல கிழக்கு மாகாணத்தில் கல்லடி பாலத்தில் இருந்து பேரணி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த பேரணி காந்தி பூங்கா வரை சென்று ஐ.நா.வுக்கான மகஜர் ஒன்றைக் கையளிக்கவிருக்கின்றது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. மக்கள் விழிப்புணர்வோடு இருந்து மேற்படி பேரணிகள் பெரு வெற்றியடைய தமது ஆதரவை வழங்குவார்களாக என குறிப்பிடப்பட்டுள்ளது.

## அரச நியமனத்தில்....

நியமனங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக பட்டதாரிகளுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் நேற்றைய தினம் யாழ்ப்பாண மாவட்டத்தில் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட பட்டதாரிகள் ஒன்றிணைந்து கலந்துரையாடியதோடு வடக்கு மாகாண ஆளுநரிடம் தமது நியமனத்தை உறுதிப்படுத்துமாறு கோரி மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளனர்.

குறித்த மகஜரில் நிராகரிக்கப்பட்ட காரணங்களாக குறிப்பிடப்பட்டுள்ள பிரச்சினைகள் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பினை முடித்தவர்களுக்கான விவகாரம், 45 வயதிற்கு மேற்பட்டவர்கள் பிரச்சினை போன்ற மூன்று விடயங்களை உள்ளடக்கி வட மாகாண ஆளுநரிடம் மகஜர் கையளித்துள்ளார்கள்.

குறித்த விடயங்கள் தொடர்பில் உரிய தரப்பினருக்கு அதனை தெளிவுபடுத்தி யாழ்ப்பாண மாவட்டத்தில் நிராகரிக்கப்பட்ட பட்டதாரிகளுக்கான நியமனத்தை வழங்க ஆவண செய்யுமாறு கோரியே இவர்கள் மகஜரினை கையளித்துள்ளனர்.

எனினும் ஏற்கனவே அரசாங்கத்தினால் நியமனக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ள பட்டதாரிகள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 2ஆம் திகதி தமது கடமைகளை ஆரம்பிக்கவுள்ள நிலையில் நிராகரிக்கப்பட்ட பட்டதாரிகளுக்கும் எதிர்வரும் 2 ஆம் திகதிக்குள் உரிய தீர்வு பெற்றுத்தர வேண்டும் என பட்டதாரிகள் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 20 ஆவது...

ஒன்றில் அமைச்சர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

ஆணைக்குழுவில் 10 – 7 பேர் அங்கத்துவம் வகிக்கின்றனர். ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சி தலைவர் ஆகியோர் சார்பில் இவர்கள் பிரதிநிதித்துவம் வகிக்கின்றனர். இதிலும் பிரச்சினை உண்டு. சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவிலும் பிரச்சினை உண்டு.

ஆணைக்குழுவில் இருந்து பொலிஸ்மா அதிபர் வெளியேறிய பின்னர் சட்டத்தை எவ்வாறு வளைப்பது என்று எமக்கு தெரியும் என கூறியுள்ளார்.

அப்படியானால் இதன் சுயாதீன தன்மையிலும் பிரச்சினை உண்டு. தேர்தல் ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. அதில் 3 அங்கத்தவர்கள் உள்ளனர். இதுபோன்ற விடயங்கள் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தவேண்டியது அவசியம் என்றும் அமைச்சர் கூறினார்.

19 ஆவது அரசியல் யாப்பு திருத்தத்தில் உள்ள முக்கிய விடயங்களில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு புதிய அரசியல் யாப்பில் திருத்தங்கள் உள்ளடக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

அமைச்சரவை யாப்பு திருத்தம் தொடர்பில் அமைச்சரவை ஆவணம், குறிப்புக்கள் முதலானவற்றை பரிசோதனை செய்வதற்கும், சிபாரிசுகளை சமர்ப்பிப்பதற்குமாக நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி உள்ளிட்ட அமைச்சரவை உப குழு ஒன்றை நியமிப்பதற்கு அமைச்சரவை சமீபத்தில் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் புதிய அரசியல் யாப்பு அல்லது தற்பொழுது உள்ள அரசியல் யாப்பில் திருத்தத்தை மேற்கொள்வோம் என்று தெரிவித்திருந்தோம்.

இது தொடர்பில் மக்களுக்கு நாம் தெளிவுபடுத்தியிருந்தோம். 19 ஆவது அரசியல் யாப்பு திருத்தம் நாட்டின் முன்னேற்றத்துக்கு தடையாக அமைந்துள்ளது. பொது மக்கள் இதனைப் புரிந்து கொண்டு $^{2}/_{3}$ பெரும்பான்மை ஆணையை அரசாங்கத்துக்கு வழங்கியுள்ளனர். இந்த விடயங்களை நிறைவேற்றுவது அரசாங்கத்தின் பொறுப்பும் கடமையும் அகும்.

புதிய திருத்தத்தில் அல்லது யாப்பில் தகவல் அறியும் உரிமையை உறுதிசெய்வோம். தற்பொழுது உள்ள ஜனாதிபதி பதவி தொடர்பிலான கால எல்லையை 5 வருடமாகவே முன்னெடுப்போம்.

ஜனாதிபதி ஒருவர் 2 முறைக்கு மேற்படாத வகையில் பதவி வகிப்பதற்கான காலத்தை அவ்வாறே செயற்படுத்தப்படுவதை உறுதி செய்வோம் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# நவாஸ் ஷெரீப் தலைமறைவு குற்றவாளி: பாகிஸ்தான் அரசு உத்தியோகபூர்வ அறிவிப்பு!



பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் தலைமறைவு குற்றவாளி என அந்நாட்டு அரசு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. அத்துடன், அவரை நாடு கடத்துமாறும் பிரிட்டன் அரசை கேட்டுக்கொண்டுள்ளது.

பாகிஸ்தான் பிரதமராக மூன்று முறை பதவி வகித்த நவாஸ் ஷெரீப், இலஞ்ச ஊழல் வழக்கில் சிக்கி கடந்த ஆண்டு சிறைத்தண்டனை பெற்றார். இதையடுத்து அவர் மருத்துவ சிகிச்சைக்கு லண்டன் செல்ல விண்ணப்பித்தார். அதற்கு, லாகூர் நீதிமன்றம் அனுமதியளித்தது. அதன்படி அவர் லண்டன் சென்று இதயநோய்க்கு சிகிச்சைபெற்று வந்தார்.

இந்நிலையில், லண்டன் வீதியில் நவாஸ் ஷெரீப், தன் மகனுடன் குடை பிடித்தபடி நடந்து செல்லும் படம், ஊடகங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது. இதனால், ஆத்திரமடைந்த பாகிஸ்தான்அரசு, நவாஸ் ஷெரீப்பை தலைமறைவு குற்றவாளி என உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இது குறித்து, பாகிஸ்தான் பிரதமரின் ஆலோசகர் ஷாசாத் அக்பர் கூறியதாவது;

நவாஸ் ஷெரீப்புக்கு மருத்துவ சிகிச்சைக்காக அளித்த நான்கு வார பரோல், கடந்த ஆண்டு டிசம்பருடன் முடிவடைந்துவிட்டது. கடந்த மாதம் அவர் சார்பில் லாகூர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் கொரோனா அச்சம் காரணமாக நாடு திரும்பவேண்டாம் என மருத்துவர்கள் பரிந்துரைத்ததாக தெரிவிக்கப்பட்டது.

ஆனால், அவர் நலமாக இருப்பது தெரியவந்துள்ளது. அதனால், நவாஸ் ஷெரீப் தலைமறைவாக உள்ளதாக அரசு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. அதனடிப் படையில், லண்டனிலுள்ள அவரை நாடு கடத்துமாறு பிரிட்டன் அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அவரை நாடு கடத்த அனைத்துவிதமான நடவடிக்கைகளை எடுக்க தேசிய பொறுப்புடமை அமைப்பை அரசு கேட்டுக் கொள்ளும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# தமிழகத்தில் நாயக்கர் கால கல்வெட்டு கண்டெடுப்பு



தமிழ்நாடு, சிவகங்கை மாவட்டம், சக்கந்தியில் 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நாயக்கர் கால கல்வெட்டை தொல்லியலாளர்கள் கண்டெடுத்துள்ளனர்.

இக்கல்வெட்டு குறித்து தொல்லியல் ஆய்வாளர் கொல்லங்குடி கா. காளிராசா செய்தியாளர்களிடம் கூறியதாவது:

சக்கந்தியில் பழைமையான எழுத்துகள் பொறிக்கப்பட்ட கல்வெட்டு இருப்பதாக அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் தெரிவித்தனர். அப்போது அதனை படியெடுத்ததில் 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நாயக்கர் கால கல்வெட்டு அது என்பது தெரியவந்தது. இக்கல்வெட்டில் பெருமாளுக்கு இறையிலியாக வழங்கப்படும் நிலத்தின் எல்லையைக் குறிக்கும் வகையில் 4 பக்கங்களிலும் திருவாழிச் சின்னம் படைப்பாக வடிக்கப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டில் 'ஸ்வஸ்திஸ்ரீ' எனும் மங்கலச் சொல்லோடு தொடங்கி 22 வரிகள் இடம்பெற்றுள்ளன. அதில், 'நள வருடம் தை மாதம் 30ஆம் நாள் சுவாமி அழகருக்கு, மகாராசஸ்ரீ புண்ணியமாக விசுவன நாயக்கர், திம்மப்ப நாயக்கர் அழகருக்கு வண்டியூர் திருநாள் பொலியிட்டுக் கொடுத்த இக்கிழக்கு வலசை சக்கை கரிசம்பூர் உள்ள ஏந்தல்களும் அழகார் திருவிடையாட்டம்' என முடிகிறது.

இக்கல்வெட்டில் சிதைந்துள்ள எழுத்துகளை உடைய வரிகள் நாயக்கர் கால அரசின் புகழ்பாடக்கூடிய மெய்கீர்த்திச் சொல்லாக இருக்கலாம். இக்கிழக்கு வலசை சக்கை என்று குறிப்பிட்டு சொல்லப்படுவதால் இன்றைய சக்கந்தியையும், மேற்கு வலசை சக்கை என இன்றைய கோமாளிபட்டியையும் குறித்து இருக்கலாம். கரிசம்பூர் என்பது தற்போது கரிசம்புலி என வழங்கப்படுகிறது.

மதுரை வண்டியூரில் கோயில் கொண்டுள்ள அழகருக்கு இந்த எல்லையைக் குறிக்கும் நிலப்பகுதி தானமாக வழங்கப்பட்ட செய்தியை இக்கல்வெட்டு கூறுவதாகக் கொள்ளலாம். இக்கல்வெட்டில் வரும் தமிழ் வருடம் நள ஆண்டு பொது ஆண்டில் 1556 எனக் குறிப்பிடப்படுகிறது. எனவே, இக்கல்வெட்டு 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை எனலாம்.

நாயக்கர் காலத்தில், மதுரையைச் சுற்றியுள்ள பகுதிகளை 72 பாளையங்களாகப் பிரித்து ஆட்சி நடத்தினர். அவற்றுள் சக்கந்தியும் ஒன்றாகத் திகழ்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும், இதே பகுதியிலுள்ள செங்குளத்தினுள் பழைமையான கல்வட்டம், முதுமக்கள் தாழிகள் இருந்ததற்கான சான்றுகள் காணப்படுகின்றன.

இதுதவிர, பிற்காலப் பாண்டியர்களின் சிவன் கோயில் ஒன்று இருந்து அழிந்துபோயிருக்கலாம். அதற்கான சான்றுகளும் கிடைக்கின்றன. சக்கந்தி கண்மாய் கரையில் நந்தி சிலை மண்ணில் புதையுண்டு உள்ளது. அதே ஊருக்குள் அரண்மனை எதிரே உள்ள பொட்டலில் கோயில் இடிபாட்டில் மிச்சப்பட்ட துண்டுக் கல்வெட்டு ஒன்றும் கிடைத்துள்ளது.

அதில், செழியத்தரைய மற்றும் இன்னா யினாருக்கு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. செழியத்தரைய என்பது பாண்டியர கால அரசு அலுவலரைக் குறிப்பதாகும். இன்னாயினாருக்கு என்பது கடவுள் பெயரைக் குறிப்பதாகும். இக்கல்வெட்டு நிலம் தானம் வழங்கிய செய்தியைச் சொல்வதாகக் கொள்ளலாம். இக்கல்வெட்டின் எழுத்து வடிவங்களின் அடிப்படையில் 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை ஆகும். எனவே, இப்பகுதி வரலாற்றில் சிறப்புடைய பகுதியாக விளங்கியிருக்கலாம் என்றார்.

# கறுப்பின இளைஞர் மீது பொலிஸ் துப்பாக்கிச்சூடு: அமெரிக்காவில் மீண்டும் வெடித்தது போராட்டம்!

அமெரிக்காவின் லூசியானா மாகாணத்தில் கறுப்பினத்தை சேர்ந்த ஒருவர் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து, லபாயெட் நகரில் போராட்டம் வெடித்துள்ளது.

கடந்த மே 25இல் அமெரிக்காவின் மினியா பொலிசை சேர்ந்த ஜோர்ஜ் ப்ளோயிட் என்ற இளைஞர், அமெரிக்க பொலிஸாரால் கழுத்து நெரிக்கப்பட்டு உயிரிழந்தார். பொலிஸாரின் அத்துமீறலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அமெரிக்கா முழுவதும் பெரும் போராட்டங்கள் வெடித்தன.

இந்நிலையில், மற்றொரு கறுப்பின இளைஞர் உயிரிழந்த சம்பவம், தற்போது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. லூசியானா மாகாணத்திலுள்ள லபாயெட் நகரைச் சேர்ந்த ட்ரேபோர்ட் பெல்லரின் என்பவர் கடந்த 21ஆம் திகதி இரவு லபாயெட் நகரிலுள்ள பல்பொருள் அங்காடியில் கத்தியைக் காட்டி, பிரச்சினையில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. பின்னர், அங்கிருந்து ட்ரேபோர்ட் வெளியேறினார். நடந்து சென்றுகொண்டிருந்த அவரை பொலிஸார் பின்தொடர்ந்தனர்.

மீண்டும் மற்றொரு பல்பொருள் அங்காடிக்குள் நுழைய முயன்றவரை கைகளை தலைக்கு பின் வைத்து தரையில் படுக்குமாறு பொலிஸார் எச்சரித்தனர். இதையடுத்து, ட்ரேபோர்ட் தன்னிடமிருந்த கத்தியை எடுக்க முயன்றாக கூறப்படுகிறது. இதையடுத்து பொலிஸார் அவரை துப்பாக்கியால் சுட்டனர். இதில், ட்ரேபோர்ட் பெல்லரின் உயிரிழந்தார். இந்த காட்சிகளை, அங்கிருந்த பெண்ணொருவர் தன் மொபைல் போனில் படம்பிடித்துள்ளார்.

ட்ரேபோர்ட் சுட்டுக்கொல்லப்பட்ட தகவல் பரவியதும் லபாயெட் நகரில் நேற்று முன்தினம், போராட்டம் வெடித்தது. மக்கள் சாலையில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து, பொலிஸார் கண்ணீர்ப் புகை குண்டுகளை வீசி கூட்டத்தைக் கலைத்தனர். பலர் கைதுசெய்யப்பட்டனர். இந்த துப்பாக்கிச்சூடு சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என அமெரிக்க மக்கள் தனியுரிமை சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

# கொரோனா பாதிப்பிலிருந்து மீண்டார் பாடகர் எஸ்.பி.பி.

கொரோனா வைரஸ் தொற்று பாதிப்பிலிருந்து பாடகர் எஸ்.பி.பி. மீண்டுள்ளதாக அவருடைய மகன் எஸ்.பி. சரண் தகவல் தெரிவித்துள்ளார்.

பின்னணிப் பாடகர் எஸ்.பி.பாலசுப்ரமணியத் துக்குக் கடந்த 5ஆம் திகதி கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகி, எம்.ஜி.எம். ஹெல்த்கெயார் மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகிறார். எக்மோ மற்றும் வெண்டிலேட்டர் கருவிகளின் துணையுடன் தீவிர சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது. எஸ்.பி.பி.க்குச் சர்வதேச மருத்துவ நிபுணர்களும், உள்நாட்டு மருத்துவக் குழுவினரும் ஒருங்கிணைந்து சிகிச்சையளித்து வருவதாக எம்.ஜி.எம். ஹெல்த்கெயார் மருத்துவமனை நிர்வாகம் தகவல் வெளியிட்டுள்ளது.



இந்நிலையில், கொரோனா வைரஸ் தொற்று பாதிப்பிலிருந்து பாடகர் எஸ்.பி.பி. மீண்டுள்ளார். என்ற தகவலை எஸ்.பி. சரண் வெளியிட்டுள்ளார். மேலும், தனது தந்தையின் உடல்நிலை சீராக உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

# காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களை சந்திக்க விரும்புகிறார் பிரதமர் மஹிந்த

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களை சந்திக்க விரும்புவதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ என்னிடம் கூறியிருக்கிறார் - என ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் செய்தியாளர் களை சந்தித்தபோது காணாமலாக்கப்பட்டவர்கள் விவகாரம் குறித்து எழுப்பப்பட்ட கேள்வி யொன்றுக்கு பதிலளித்தபோதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளை தான் சந்திக்கவேண்டுமென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ என்னிடம் கேட்டுள்ளார். தற்போது அமைந்துள்ளது பலமான அரசாங்கம் என்றாலும், அவர்கள் பதவியேற்று சில நாட்களேயாவதால், இரண்டு மூன்று கிழமைகளின் பின்னர் இந்த விவகாரத்தை மீண்டும் அமைச்சரவையின் கவனத்திற்கு கொண்டுவருவேன் - என்றார்.

# யாழில் விசர்நாய்க் கடிக்கு இலக்காகி இருவர் பலி!



விசர்நாய்க் கடிக்கு இலக்கான 15 வயதான சிறுவன் ஒருவனும், 39 வயதான தாய் ஒருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவந்த நிலையில் உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் – சங்கரத்தை, வட்டுக் கோட்டையைச் சேர்ந்த தவச்செல்வன் தர்சன் என்ற சிறுவன் சில வாரங்களுக்கு முன்னர் நாய்க்கடிக்கு இலக்காகியுள்ளார். எனினும், அது தொடர்பில் சிறுவன் தமது வீட்டில் தெரிவிக்கவோ தடுப்பூசி போடவோ இல்லை. இந்நிலையில், கடந்த சனிக்கிழமை இரவு சிறுவன் பதற்றமாகவும் பயமாகவும் உள்ளது என்றும் சுவாச பிரச்சினை ஏற்படுள்ளது என்றும் தெரிவித்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் அதிகாலை உயிரிழந்துள்ளான்.

இதேவேளை, மன்னார் – தாழ்வுப்பாட்டைச் சேர்ந்த ஜெபநேசன், கொன்சடியா என்ற தாய்க்கும் மகனுக்கும் கடந்த 13ஆம் திகதி நாய் கடித்துள்ளது. மகனுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டது. தாயார் தடுப்பூசி ஏற்றிக்கொள்ளவில்லை. இந்நிலையில், கடந்த 21ஆம் திகதி குறித்த தாய்க்கு உடல்நிலை பாதிக்கப்பட்டது. மன்னார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் சனிக்கிழமை இரவு உயிரிழந்துள்ளார்.

# மன்னார் மறைமாவட்ட ஆயர் – ரிஷாட் பதியுதீன் சந்திப்பு







(மன்னார் நகர்)

மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவல் பெர்னாண்டோ ஆண்டகையை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் நேற்று முன்தினம் மாலை மன்னார் ஆயர் இல்லத்திற்கு சென்று சந்தித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனுடன் கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர் முஷர்ரப் முது நபீன் சென்றிருந்தார். இதன்போது குறித்த இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் சிநேகபூர்வமாக சந்தித்து பல்வேறு விடயங்கள் தொடர்பாக மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவல் பெர்னாண்டோ ஆண்டகையுடன் கலந்துரையாடினர்.

இக்கலந்துரையாடலின்போது மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# இளம் பெண் கொலை வழக்கில் இரு பெண்களுக்கு விளக்கமறியல்

## பிரதான சந்தேகநபருக்கு வலைவீச்சு

மன்னார் சௌத்பார் உப்பளப் பகுதியில் சடலமாக மீட்கப்பட்ட யுவதியின் கொலை தொடர்பாக பல்வேறு அதிர்ச்சியான செய்திகள் வெளிவந்த நிலையில், கடந்த சில நாட்களுக்கு முன் குறித்த யுவதியுடன் மன்னார் பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட அப்பெண்ணின் சகோதரிகள் என அடையாளம் காணப்பட்ட சந்தேகநபர்கள் மன்னார் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, நேற்று முன்தினம் மன்னார் பொலிஸாரால் நீதவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியிருந்தனர்.

கைதுசெய்யப்பட்ட இரு பெண்கள் சார்பாக முன்னிலையாகியிருந்த சட்டத்தரணி குறித்த கொலைக்கு அந்த இரு பெண்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை எனவும் வெளிநாட்டுக்கு அனுப்புவதற்கென அப்பெண்ணின் தாய்மாமனிடம் பெண்ணை ஒப்படைத்து தாங்கள் சென்றதாகவும் தங்களுக்கும் இக் கொலைக்கும் எவ்வித தொடர்பும் இல்லை எனவும் தெரிவித்திருந்தார்

ஆனாலும், பாதிக்கப்பட்ட பெண் சார்பாக சட்டத்தரணி சர்மிலன் டயஸ் முன்னிலையாகி யிருந்ததுடன், இந்தக் கொலையானது திட்டமிடப் பட்டும் இறந்த பெண்ணின் குடும்ப உறவினர்கள் மத்தியில் காணப்பட்ட முரண்பாடுகள் காரண மாகவுமே இடம்பெற்றுள்ளது. அவ்விரு பெண்களும் பொலிஸாரால் மேற்கொண்ட விசாரணையின்போது தாங்கள் கொலை செய்ததை ஒப்புக்கொண்டுள்ளனர். எனவே, இக்கொலையின் பிரதான சந்தேகநபரான அப்பெண்ணின் தாய்மாமனை கைதுசெய்வதற்கான அறிவுறுத்தலை பொலிஸாருக்கு வழங்குவதுடன் குறித்த இரு பெண்களையும் விளக்கமறியலில் வைத்து விசாரிக்க வேண்டும் எனவும் வாதிட்டார்.

இரு தரப்பு வாதப் பிரதிவாதங்களின் பின்னர் குறித்த பிரதான சந்தேகநபரான - செட்டிகுளத்தைச் சேர்ந்த குறித்த பெண்ணின் தாய்மாமன் இதுவரை கைதுசெய்யப்படாத நிலையில், கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட இரு பெண்களை யும் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்

அதேநேரத்தில், குறித்த கொலையுடன் தொடர்பு டைய பிரதான சந்தேகநபரான அப்பெண்ணின் தாய்மாமனை பொலிஸார் தோடிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உழவு இயந்திரச் சில்லுக்குள் நசியுண்டு இளம் குடும்பஸ்தர் பரிதாப மரணம்!



மணலுடன் சென்ற உழவு இயந்திரத்தின் ''மட்காட்'' பகுதியிலிருந்து பயணித்த குடும்பத்தலைவர் ஒருவர் தவறி வீழ்ந்து சில்லுக்குள் சிக்குண்டு உயிரிழந்தார்.

சங்கானை விழிசிட்டியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. சங்கானை வைத்தியசாலை வீதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான உதயகுமார் சுரேஷ்குமார் (வயது - 32) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

மணல் ஏற்றி வந்த மேற்படி உழவு இயந்திரம் வீதியைவிட்டு விலகி மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியபோதே குறித்த நபர் சில்லுக்குள் சிக்குண்டுள்ளார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.



தமிழன் THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900 / 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilannews@yahoo.com

*2020 ஓகஸ்ட் 25ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை*

# கவனிக்கப்படவேண்டிய கருவின் கருத்துகள்!

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தை இரத்தச்செய்து புதிய அரசியலமைப்பை கொண்டு வருவதென்றால், அது தொடர்பில் அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகள், புத்திஜீவிகள் மற்றும் பொதுமக்கள் ஆகிய அனைத்துத் தரப்பினரின் கருத்துகளையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளமை தற்போதைய அரசியல் சூழ்நிலையில் குறிப்பிட்டு சொல்லக்கூடிய ஒரு முக்கியமான விடயமாகும்.

புதிய அரசியலமைப்புச் சட்டமூலம் அனைத்துத் தரப்பின் பங்குபற்றுதலுடன் தயாரிக்கப்படவேண்டும்.

ஜனநாயகம், சட்டவாதிக்கம் ஆகியவற்றை பாதுகாப்பதற்கான பாரிய பொறுப்பை 19ஆவது திருத்தம் செய்துள்ளது. அதனால் ஜனநாயகம் மற்றும் சட்டவாதிக்கம் ஆகியவற்றை பாதுகாக்கும் எந்தவொரு சரத்தும் இல்லாமல் செய்யப்படக்கூடாது. 19ஆவது திருத்தத்திலுள்ள ஜனநாயக பாதுகாப்பை உறுதிப்படுத்தி, அதிலுள்ள தொழில்நுட்ப சர்ச்சைகளை மாத்திரம் ஆராய்ந்து அவற்றை மாத்திரம் அதிலிருந்து இரத்துச்செய்ய வேண்டும்.

உலகின் தலைசிறந்த நாடாக இலங்கை இருக்க வேண்டும் என்றால், ஜனநாயகம் மற்றும் சட்டவாதிக்கம் ஆகியவற்றுக்கான கௌரவம் வழங்கப்படவேண்டும் என முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இராணுவ அதிகாரியாக, வெளிநாட்டு இராஜதந்திரியாக, அரசியல்வாதியாக இலங்கை உள்நாட்டு விடயங்களில் நன்கு அனுபவம்கொண்ட ஒருவராக காணப்படும் கரு ஜயசூரியவின் இந்த கருத்துகளை இலகுவில் புறந்தள்ளிவிடமுடியாது.

19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை இரத்துச் செய்து 20ஆவது திருத்தத்தைக் கொண்டுவருவதாக ஒரு பக்கம் அரசு கங்கணங்கட்டி நிற்கின்றது. மறுபுறம் தேர்தல் முறைமைகளை மாற்றி மாகாண சபைகளை அரசு இல்லாமலாக்கிவிடுமோ என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சந்தித்த இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே கூட இந்த விடயம் குறித்து தனது கரிசனையை வெளிப்படுத்தியிருந்தார். தமிழர் பிரச்சினைத் தீர்வுக்காக இந்தியா வழங்கிய ஆலோசனையின்படி கொண்டுவரப்பட்ட மாகாண சபை முறைமை, புதிய அரசியலமைப்பு வரும் கையோடு அடிபட்டு போய்விடுமோ என்ற ஆதங்கம் இந்தியாவுக்கு இருந்தாலும் இலங்கையின் உள்நாட்டு விடயத்தில் தலையிட்டு கையை சுட்டுக்கொள்வதா என்ற கவலையும் புதுடில்லி முன் நிற்கிறது. இந்தியாவானது தனது நலன், பிராந்திய பாதுகாப்பு விடயங்களுக்காக இலங்கையுடன் அந்நியோன்யமாக நெருங்கிப் பழகவேண்டிய நிலையில் இருக்கிறது. தமிழர் பிரச்சினையை பேசப்போய் அந்த உறவை கெடுத்துக்கொள்ள புதுடில்லி விரும்புமா என்பதும் தெரியவில்லை.

ஒட்டுமொத்தத்தில் புதிய அரசியலமைப்புத் திருத்தம், அதனூடாக மாகாண சபை முறைமைக்கு ஆபத்து வருமா என்ற அச்சம் பரவலாக பேசுபொருளாகியுள்ள சூழ்நிலையில், முன்னாள் சபாநாயகரின் கருத்து குறித்து சிந்திக்கவேண்டியதாகியுள்ளது.

புதிய அரசியலமைப்பு கொண்டுவரப்படும்போது வெறுமனே அரசியல் தரப்புகளுடன் மாத்திரமன்றி, சமூகத்திலுள்ள இதர முக்கிய தரப்புகளுடனும் அரசு கருத்தறிவது முக்கியம். கடந்த காலங்களில் ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு அரசுகளும் தங்களுக்கு ஏற்றவாறு அரசியலமைப்பை திருத்திக்கொண்டு தத்தமது நலன்களை கவனித்துக்கொண்டனவேயொழிய மக்கள் நலன்களையோ அல்லது நாட்டின் எதிர்கால சுபீட்சத்தையோ அவை கருத்திற்கொள்ளவில்லை. தேர்தலில் பெரும்பான்மை மக்கள் ஆதரவு கிடைத்து விட்டது என்ற ஒரே காரணத்துக்காக மட்டும் எதேச்சதிகாரமாக எதனையும் செய்யத் துணிதல் நல்லதல்ல.

சரியோ பிழையோ, கடந்த நல்லாட்சியில் உருவாக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்களின் சீரான இயக்கம் அவசியம். முன்னாள் சபாநாயகர் கரு கூறுவதுபோல, 19ஆவது திருத்தத்திலுள்ள ஜனநாயக பாதுகாப்பை உறுதிப்படுத்தி, அதிலுள்ள தொழில்நுட்ப சர்ச்சைகளை மாத்திரம் ஆராய்ந்து சீர்தூக்கிப் பார்த்து உரிய நடவடிக்கைகளை ஆட்சியாளர்கள் மேற்கொள்ள வேண்டும்.

நாடொன்றின் அரசியலமைப்பை மாற்றும்போது அதனை உன்னிப்பாக அவதானிப்பது உள்நாட்டு சமூகம் மட்டுமல்ல. சர்வதேச சமூகமும் அதனை கூர்ந்து அவதானித்துக்கொண்டே இருக்கும். முன்னாள் சபாநாயகரின் கருத்தில் இந்த விடயமும் தொக்கிநிற்கின்றது.

ஆனாலும், அவர் கூறிய நல்ல விடயங்களை - ஆலோசனைகளை கவனத்திற்கொள்ளாமல், அந்த கருத்துகளுக்காக அவர் நாட்டின் நலன்களுக்கு எதிரானவர் என்ற சித்திரிப்பு கூட நடக்கலாம். அதுதானே இங்குள்ள சிஸ்டம்..!

“தமிழன்” பத்திரிகை தொடர்பான உங்கள் கருத்துக்களை news@liberty.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

# குவாட் : இரண்டு கடல்கள் நான்கு நாடுகள்

அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கிடையில் பிலிப்பைன்ஸ் கடலில் முத்தரப்பு இராணுவப் பயிற்சியும், இந்தியப் பெருங்கடலில் இந்திய-அமெரிக்கக் கடற்படைப் பயிற்சியும் மேற்கொள்ளப்பட்டதற்கு சில முக்கியத்துவங்கள் உள்ளன. இந்தச் செயற்பாடுகள் இந்த நான்கு நாடுகளின் கப்பற்படைகளுக்கிடையே கூடிய சீக்கிரம் நான்கு தரப்புப் பயிற்சிகள் மேற்கொள்ளப்படும் என்ற சூசகத்துக்கு மேலும் வலுவூட்டுகின்றன.

இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகள் மேற்கொள்ளும் வருடாந்திர மலபார் பயிற்சிகளில் பங்குகொள்ளவேண்டும் என்ற அவுஸ்திரேலியாவின் வேண்டுகோள் நான்கு ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது. இதுகுறித்து என்ன முடிவு எடுக்கப்படும் என்பது குறித்து அனைவரின் பார்வையும் புதுடில்லியின் மீதே உள்ளது.

பசிபிக் பிராந்தியம் மீதான சீனாவின் உரிமை கோரலுக்கும், இந்தியப் பெருங்கடலில் அது நிகழ்த்தும் ஊடுருவலுக்கும் எதிரானதாகப் பார்க்கப்படும் கூட்டணி இது. இந்தக் கூட்டணி இராணுவமயமாக்கப்படுவதற்கு சீனா கடும் எதிர்ப்பைத் தெரிவித்துவருவதை வைத்துப் பார்க்கும்போது, முடிவெடுப்பது இந்தியாவுக்கு எளிதாக இருக்கவில்லை. கூட்டணி என்று புரிந்து கொள்ளப்படுவதற்கு வாய்ப்பிருக்கும் எந்தவொரு செயற்பாட்டிலும் சேர்ந்துகொள்வதில் இந்தியா எச்சரிக்கையாகவே இருக்கிறது. இதைத்தான் வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் இந்தியா ஒருபோதும் அங்கமாக இருக்காது என்று தெரிவித்தார்.

### சீனா எனும் காரணி

இந்தோ-பசிபிக் பிராந்தியத்தை ஒரு ‘புவியியல் ரீதியிலான கருத்துரு’வாகவே இந்தியா பார்க்கிறது என்றும், ஒரு ‘உத்தியாகவோ, குறிப்பிட்ட சில உறுப்பினர்களின் மன்றமாகவோ’ பார்க்கவில்லை என்றும் 2018இல் ஷாங்கிரி-லா பேச்சுவார்த்தையின்போது பிரதமர் மோடி கூறினார். நான்கு நாடுகள் தரப்பில் (குவாட்) இந்தியா மட்டும்தான் சீனாவோடு எல்லையைப் பகிர்ந்துகொள்கிறது. ஆகவே, நான்கு நாடுகள் தரப்பு இராணுவமயமாவது இந்தியா அந்த அச்சுறுத்தலை எதிர்கொள்வதில் உதவாது.

இராணுவக் கூட்டணியால் பிணைக்கப்பட்டிருக்கும் அமெரிக்கா, ஜப்பான், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளைபோல் இல்லாமல் இந்தியா பிற உத்திரீதியிலான அமைப்புகளில் உறுப்பினராக இருக்கிறது. சீனா, ரஷ்யா, மத்திய ஆசிய நாடுகள் அங்கம் வகிக்கும் ஷாங்காய் கூட்டுறவு அமைப்பு, பிரிக்ஸ், ரிக் போன்றவற்றை எடுத்துக்காட்டுகளாகக் கூறலாம். இவையெல்லாம் குவாட் கூட்டணியோடு முரண்படக்கூடியவையாகும்.

அப்போதும்கூட, தென்சீனக் கடலில் சீனாவின் ஆக்கிரமிப்பு, ‘நடைமுறைக் கட்டுப்பாட்டு எல்லைக் கோட்’டில் அது நிகழ்த்திய மீறல்கள், உயிர்பறிக்கும் மோதல்கள் போன்றவை இந்தியாவை ஒரு முடிவெடுக்க வைத்துவிடும் என்று பலரும் நம்புகிறார்கள். இதன்மூலம் நான்கு தரப்புப் பாதுகாப்புக் குழு, சுருக்கமாக குவாட், இராணுவக் கூட்டாக ஆவதற்கும் அதனால் பிராந்திய, உலகளாவிய பாதுகாப்புக்கு மிக மோசமான பாதிப்பு ஏற்படுவதற்கும் வாய்ப்பிருக்கிறது.

தற்போது கடினமான, மெதுவான விவாதங்களில் ஈடுபடும் குவாட் சட்டென்று ஒரு தருணத்தில் பிறந்தது என்பது முரணான ஒன்றுதான். 2004 சுனாமியைத் தொடர்ந்த நெருக்கடியின்போது உருவானது அந்தக் குழு. அந்தப் பேரழிவு நடந்து ஒருசில நாட்களுக்குள் இந்தியா தனது உத்வேகமிக்க கப்பற்படையைச் செயலில் இறக்கியது. இதன்மூலம் தன்னுடைய சொந்த பாதுகாப்பு மட்டுமல்லாமல் இலங்கை, மாலைதீவுகள், இந்தோனேஷியா போன்ற கடல் தாண்டிய அண்டை நாடுகளுக்கும் தன்னால் உதவ முடியும் என்பதை உலகுக்கு நிரூபித்தது.

ஒட்டுமொத்தமாக, 32 இந்தியக் கப்பல்களும் 5,500 துருப்புகளும் இந்தியாவின் சர்வதேச முயற்சிகளில் ஈடுபடுத்தப்பட்டன. மனிதநேய மற்றும் பேரிடர் நிவாரண முயற்சி அடுத்த சில வாரங்கள் ஒருங்கிணைக்கப்பட்டன. அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய மூன்று நாடுகளும் இதில் சேர்ந்துகொண்டன. அப்போதைய வெளியுறவுச் செயலரான ஷ்யாம் சரண் மற்ற நாடுகளின் வெளியுறவுச் செயலர்களுடன் அடுத்து என்ன தேவை என்பது தொடர்பில் தினமும் பேசினார். இறுதியாக, ‘குவாட்’ முயற்சி ஐ.நா.விடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால், இந்தோ-பசிபிக் பிராந்தியம் என்பது பெரிய கடல்சார் உத்திரீதியிலான குழு என்ற சிந்தனையும், அதற்கான திறன்மிக்கக் கருவியாக குவாடும் அந்த நான்கு நாடுகளின் மனதிலும் விதைக்கப்பட்டன.

### இரண்டு கடல்களின் சங்கமம்

2007இல் வருடாந்திர இந்தியா - அமெரிக்கா ‘மலபார்’ பயிற்சிகள் இந்தியப் பெருங்கடலிலும் பசுபிக் பெருங்கடலிலும் நடைபெற்றன. முதலில் ஒகினவா கரைக்கு அருகிலுள்ள கடலிலும், சில மாதங்கள் கழித்து விசாகப்பட்டினம் கரைக்கு அருகிலும் நடைபெற்றன. இந்தப் பயிற்சிகளில் ஜப்பான், அவுஸ்திரேலியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளும் உள்ளடக்கப்பட்டன. ‘இரண்டு கடல்களின் சங்கமம்’ என்று ஜப்பானிய பிரதமர் அபே குறிப்பிட்ட அந்தப் பயிற்சிகளும் உத்திரீதியிலான ஒருங்கிணைப்பும் பீஜிங்கையும் மொஸ்கோவையும் பதற்றத்துக்குள்ளாக்கின. ‘ஆசிய நேட்டோ’வை உருவாக்குவதற்கான முயற்சி என்று அந்த நாடுகள் இதைக் குறிப்பிட்டன.

அந்தச் சமயத்தில், சீனக் கப்பற்படையில் பெரும் நவீனமயமாக்கல் நடவடிக்கைகள் தொடங்கப்படவில்லை (அதன் முதல் விமானந்தாங்கிக் கப்பலான லயோனிங் 2012இல்தான் வாங்கப்பட்டது), குவாட் நாடுகளின் முயற்சிதான் இந்த அவசரத்துக்குக் காரணம். அந்த நேரத்தில் குவாட் நாடுகள் மீதான சீனாவின் அரசியல் நடவடிக்கைகளுக்குப் பலன் கிடைத்தது. பலரும் நம்புவதுபோல அல்லாமல், 2008இல் குவாட் பயிற்சிகளை இரத்துச்செய்தது இந்தியா அல்ல; அமெரிக்காதான் வடகொரியா மீதான ஆறு தரப்பு பேச்சுவார்த்தைகளில் சீனாவின் ஆதரவைப் பெறுவதற்காக அப்படிச் செய்தது. இதனால், குவாட் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் சந்திப்புக்கான உத்வேகம் நமத்துப்போனது. கெவின் ரட் தலைமையிலான அப்போதைய ஆஸ்திரேலிய அரசு இந்தப் பயிற்சிகளிலிருந்து விலகிக்கொண்டது. அடுத்த பத்தாண்டுகளுக்கு குவாட் கிடப்பில் போடப்பட்டது.

2017இல் குவாட் திரும்பி வந்தது; குவாட் 2.0 என்ற பெயருடன். சீனாவிடமிருந்து வந்த சவாலைப் பற்றிய அமெரிக்காவின் மதிப்பீட்டின் மீது செய்யப்பட்ட மீள்பார்வையும், இந்தியா, ஜப்பான், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் செய்த மறுமதிப்பீடுகளும் அதே சமயத்தில் தற்செயலாக நிகழ்ந்தன. 2017 நொவம்பரில், இந்திய இராணுவத்துக்கும் சீன இராணுவத்துக்கும் இடையிலான மோதலுக்குச் சில மாதங்களுக்குள் நான்கு நாடுகளின் அதிகாரிகளும் ‘இந்தியா-அவுஸ்திரேலியா-ஜப்பான்-அமெரிக்கா’ பேச்சுவார்த்தைக்காக மணிலாவில் கூடின. இந்தப் புதிய குவாடின் பெயர் கடுமை குறைந்ததாக இருந்தது. இது ஒரு குழு திரட்டல் என்ற எண்ணம் யாருக்கும் வரக்கூடாது என்பதற்காக அப்படி அவர்கள் கூட்டு அறிக்கையைக்கூட வெளியிடவில்லை. உண்மையில், இந்த அணிக்கு உள்ளே கருத்து வேறுபாடுகள் தீவிரமாகின. ‘இந்தோ-பசுபிக்’ பிராந்தியம் என்பதை ஆபிரிக்காவிலிருந்து அமெரிக்காவின் மேற்குக் கடற்கரை வரை இந்தியா வரையறுத்ததென்றால் அமெரிக்கா அந்த வரையறையை இந்தியக் கடற்கரை அளவில் குறுக்கியது (2020இல் இந்திய வரையறையுடன் அமெரிக்கா ஒத்துப்போனது).

### சீனாவுக்கு குவாடின் சவால்கள்

தொடர்ந்த சந்திப்புகள் அந்தக் குழுவினரிடையே இருந்த பல்வேறு இடைவெளிகளை மூடியது. அதிலிருந்து குவாட் குழு ஆண்டுக்கு இரண்டு முறை கூடியது. ‘தொடர்புத்தன்மை, வளம்குன்றா வளர்ச்சி, பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகள், ஆயுதக் குறைப்பு, கடல் பரப்புப் பாதுகாப்பு, இணையவெளிப் பாதுகாப்பு போன்றவற்றைப் பற்றியும், நாடுகளுக்கிடையே ஒன்றுக்கொன்று தொடர்பு அதிகரித்துவரும் இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் அமைதி, நிலைத்தன்மை, வளம் ஆகியவற்றை மேம்படுத்தல்’ ஆகியவற்றைப் பற்றியும் விவாதித்தார்கள். தொடர்புத்தன்மை மீதான முக்கியத்துவத்தால் சீனாவுக்கு குவாட் வேறு களத்தில் சவால்விட முடிந்தது. பல நாடுகளுக்கும் கடனுதவியும் அடிப்படைக் கட்டமைப்புகளில் உதவியும் வழங்கிய சீனாவின் பி.ஆர்.ஐ.க்கு மாற்றாக நிதியுதவி வழங்கும் ஒருங்கிணைந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இறுதியாக, குவாட்டில் அடுத்த நடவடிக்கையைப் பற்றிய கேள்வி – அதாவது, அடுத்த மலபார் பயிற்சிகளுக்கு அவுஸ்திரேலியாவை இந்தியா அழைக்குமா என்பது இந்தியா தனது சொந்த இராணுவரீதியான உத்தியை எப்படி வளர்த்தெடுக்கப்போகிறது என்பதைவிடக் குறைந்த முக்கியத்துவம் கொண்டதாகத்தான் இருக்கும். குறிப்பாக, சீனாவுடன் இந்தியாவுக்கு ஏற்பட்டிருக்கும் மோதலை வைத்துப் பார்க்கும்போது. சீனா விடுக்கும் அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் முயற்சியில் அதன் நட்பு நாடான ரஷ்யாவையும் ஈடுபடுத்துவதன் மூலம், தனது பழைய அணிசேராக் கொள்கைக்கு இந்தியா திரும்புமா அல்லது இடைப்பட்ட சக்திகளான ஐரோப்பிய ஒன்றியம், இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா மற்றும் பங்குதாரர்களான பிரேசில், ஐக்கிய அரபு அமீரகம், தென்னாபிரிக்கா போன்றவற்றைத் தனது இந்தோ-பசுபிக் உத்திக்குள் கொண்டுவருவதன் மூலம், ‘பல்வேறு அணிகளில் சேருதல்’ உத்தியை இந்தியா பின்பற்றுமா அல்லது சீனாவின் எதிரிகளுடன் நெருக்கமான உறவை வளர்த்துக்கொள்வதில் இந்தியாவின் பாதை இருக்குமா அல்லது அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையே உருவாகிவரும் புதிய பனிப்போரில் தனக்கென்று ஒரு மூலையை இந்தியா தேர்ந்தெடுத்துக்கொள்ளுமா? குவாட்டில் இந்தியாவின் நகர்வுகள் உன்னிப்பாகக் கவனிக்கப்படும். ஏனெனில், தனது உத்திரீதியிலான எதிர்காலத்தை நோக்கிய பாதையில் அந்த நகர்வுகள் மேலும் பொருள் பொதிந்தவையாக இருக்கின்றன.

**தி இந்து, தமிழில்: ஆசை**



## கண்டதும்... கேட்டதும்... பார்த்ததும்...!



கரு ஜயசூரிய தலைவர் பதவிக்கு தயார் என்று பகிரங்கமாகவே அறிவித்துவிட்டார்.

ஆனால் அதனை அங்கீகரிக்க வேண்டியது ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு. செயற்குழுவில் இருப்பது ரணில் நியமித்த ஆட்கள்.

இந்த விடயத்தை ஆராய்ந்து ஒரு முடிவு வருவதற்குள் மாகாண சபை தேர்தலும் வந்துவிடும்... ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில், அம்புலிமாமா புத்தகத்தில் வரும் விக்கிரமாதித்தன் போல தன் முயற்சியில் சற்றும் சளைக்காத ஒருவராக இருந்து கட்சியை ஒரு வழி பண்ணிவிட்டு போவார் என்றே தெரிகிறது.

- சிவா -
siva@liberty.lk

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.



# அறநெறி கல்வியை கற்காதவர்களினாலேயே பெரும்பாலான சீரழிவுகள் ஏற்படுகின்றன

## அறநெறி பாடசாலை தின தேசிய நிகழ்வில் பிரதமர் சாடல்









நாட்டில் இடம்பெறும் பெரும்பாலான சீரழிவுகள் அறநெறி பாடசாலை கல்வியை கற்காதவர்களினாலேயே ஏற்படுகின்றன. இதனால் அறநெறி பாடசாலை கல்வியை கட்டாயப்படுத்த வேண்டியது அவசியம் - என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க கசாகல விகாரையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 125ஆவது அறநெறி பாடசாலை தின தேசிய நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் போன்ற சமீபகாலங்களில் நாட்டில் ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகளை நாட்டிலிருந்து இல்லாதொழிப்பதற்கு, சமயம் சார்ந்த கல்வியே பங்களிப்பு செய்கின்றது என தெரிவித்த அவர், எந்த சமயத்திலும் வன்முறைகள் தொடர்பில் கற்றுக்கொடுக்கப்படுவதில்லை என்றும் தெரிவித்தார்.

அங்கு பிரதமர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பௌத்த அறநெறி பாடசாலைகள் எமது நாட்டில் ஆரம்பிக்கப்பட்டது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். கல்விக்காக எமது நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட மிஷனரி கல்வி முறையே பௌத்த கல்வியின் அழிவுக்கு வழிவகுத்தது. 1956ஆம் ஆண்டு பௌத்த ஆகமத்துக்கு விசேட இடம் வழங்கப்பட்டது. அதன் பின்னர் பௌத்த அறநெறி பாடசாலை வேலைத்திட்டத்தினூடாக, 1985ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 3ஆம் திகதி காலி வெலிவத்த ஸ்ரீ விஜயானந்த அறநெறி பாடசாலை ஆரம்பிக்கப்பட்டமை சிறப்பு அம்சமாகும். அந்த அறநெறி பாடசாலைக்கு அரச அனுசரணையில் அறநெறி பாடசாலை பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டன.

தற்போது அறநெறி பாடசாலைகளில் 22-23 இலட்சம் பிள்ளைகள் கல்விக் கற்று வருகின்றனர். மதிப்புமிகுந்த பிள்ளைகளை நாட்டுக்கு அர்ப்பணிக்க அறநெறி பாடசாலை முறையை எமது நாட்டில் முன்னெடுத்து வருகின்றமைக்கு, மகாசங்கத்தினர் மற்றும் அறநெறி பாடசாலை ஆசிரியர்களின் அர்ப்பணிப்பை பாராட்டவேண்டும். எவ்வித ஊதியமுமின்றி மகாசங்கத்தினர் உள்ளிட்ட அறநெறி பாடசாலை ஆசிரியர்கள் செய்யும் அர்ப்பணிப்பும் பாராட்டத்தக்க விடயமாகும்.

இன்று நம் நாட்டில் இடம்பெறும் பெரும்பாலான சீரழிவுகள் அறநெறி பாடசாலை கல்வியை கற்காதவர்களினாலேயே ஏற்படுகின்றன. எனவே, அறநெறி கல்வி கட்டாயமாக்கப்பட வேண்டும். எமது பிள்ளைகளில் அறநெறி பாடசாலைக்கு செல்வோரின் எண்ணிக்கையை நோக்கும்போது பாரிய எண்ணிக்கையிலானோர் பௌத்த கல்வியை கற்பதில்லை. வாரத்திற்கு 30 அல்லது 45 நிமிடங்கள் பௌத்த கல்வியை கற்பிக்கின்றோம் என நாம் மகிழ்ச்சியடைந்தால் அது தவறாகும்.

பிள்ளைகளை அறநெறி பாடசாலைகளில் இணைப்பதனூடாக நல்லொழுக்கமுள்ள குழந்தைகளை நாட்டுக்கு வழங்கமுடியும். இதைப் பற்றி சிந்திக்கவேண்டியது அவசியம். அறநெறி பாடசாலை முறையை மேலும் மேம்படுத்தும் வகையில் அறநெறி பாடசாலைக் கல்வி, கல்வி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதுடன், அதற்காக தனியான அமைச்சரொருவரும் நியமிக்கப்பட்டுள்ளார். அது அறநெறி பாடசாலையை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான ஒரு படிமுறையாகும். நாட்டின் எதிர்கால அனைத்து நடவடிக்கைகளையும் மகாசங்கத்தினரின் அறிவுறுத்தலுக்கமைய மேற்கொள்ள நடவடிக்கை எடுப்போம். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் இதுதொடர்பில் தெளிவாக குறிப்பிட்டுள்ளார். அறநெறி கல்வியை பிள்ளைகளுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்போம். அதன்மூலம் அறநெறி கல்வி மாத்திரமன்றி நல்லொழுக்கம் கொண்ட குழந்தைச்செல்வங்களை உருவாக்குவதும் எமது பொறுப்பாகும்.

பௌத்த கல்வி மாத்திரமன்றி ஏனைய சமயங்களைச் சேர்ந்த பிள்ளைகளும் தங்களது சமயத்தை கற்பதற்கு ஒத்துழைப்பை வழங்க வேண்டும். அண்மைக்காலங்களில் நாட்டில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் பயங்கரவாதம் போன்ற பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டன. இதுபோன்ற அனைத்தையும் இல்லாதொழிப்பதற்கு சமயக் கல்வியே மிகவும் பங்களிப்பு செலுத்துகிறது. எந்தச் சமயமும் வன்முறையை கற்பிக்கவில்லை. இதேவேளை, இந்நிகழ்வை நடத்துவதற்கு கசாகல தெரிவுசெய்யப்பட்டமை குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன் - என்றார்.

# 9ஆவது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இருநாள் செயலமர்வு இன்றும் நாளையும்

## -பிரதம அதிதியாக பிரதமருக்கு அழைப்பு

நாடாளுமன்றத்துக்கு புதிதாக தெரிவாகியிருக்கும் உறுப்பினர்களுக்கு நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் வகையிலான இரண்டுநாள் செயலமர்வு இன்று ஆரம்பமாகவுள்ளது. சகல உறுப்பினர்களையும் இந்தச் செயலமர்வில் கலந்துகொள்ளுமாறு நாடாளுமன்ற பொதுச் செயலாளர் தம்மிக்க தஸநாயக்க அறிவித்துள்ளார்.

அதற்கமைய, இன்றும் நாளையும் இந்தச் செயலமர்வு இடம்பெறவிருக்கிறது. முற்பகல் 9 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 6 மணிவரை நாடாளுமன்றத்தின் முதலாவது குழு அறையில் நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளையும் நாடாளுமன்ற செயலாளர் காரியாலயம் முன்னெடுத்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நாடாளுமன்றத்தின் நடவடிக்கைகள் தொடர்பில் தெளிவை பெற்றுக்கொடுப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இந்தச் செயலமர்வின் பிரதம அதிதியாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதோடு, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# 2021 வாக்காளர் இடாப்புக்கான திருத்த நடவடிக்கைகள் ஆரம்பம்

## - பெயர் விபரங்களை கிராமசேவை பிரிவுகளுக்கு வழங்குமாறு ஆணைக்குழு வலியுறுத்து




வாக்காளர் இடாப்பில் 2021ஆம் ஆண்டுக்கான திருத்தங்களை மேற்கொள்ளும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளதாவது;

பொதுத் தேர்தல் காரணமாக வாக்காளர் பட்டியல் திருத்தம் மேற்கொள்ளும் நடவடிக்கை பிற்போடப்பட்டிருந்தது. இந்நிலையில், தற்போது பொதுமக்கள் தமது பெயர்ப் பட்டியலை பூர்த்தி செய்து கிராமசேவை அலுவலகரிடம் அதனை சமர்ப்பிக்க முடியும். மேலும், எதிர்வரும் 2021ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் புதிய வாக்காளர் பட்டியலை உறுதிசெய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளன. அதற்மைய, தேசிய அடையாள அட்டை உரித்துடைய அனைத்துப் பிரஜைகளும் தங்களது பெயர்களை தேர்தல் பட்டியலில் இணைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல் அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்துக்குப் பின்னர் நடைபெற்றால் அந்தத் தேர்தலுக்காக இந்த வாக்காளர் இடாப்பு பயன்படுத்தப்படும் என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இதேவேளை, மக்கள் தமது பெயர்களை வழங்குவதற்கான ஆவணம் கிராம உத்தியோகத்தரினால் அனைத்து வீடுகளுக்கும் வழங்கப்படவுள்ளது.

கடந்த 2019 வாக்காளர் பெயர்ப்பட்டியலுக்கு அமைய நாட்டில் ஒரு கோடியே 62 இலட்சத்து 63 ஆயிரத்து 885 பேர் பதிவுசெய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஞாபகார்த்த தபால் முத்திரைகளுக்கான ஆலோசனைகள் கோரப்படுகின்றன

(மாளிகைக்காடு)

2021ஆம் ஆண்டில் வெளியிடப்படவுள்ள ஞாபகார்த்த தபால்மூல முத்திரைகளுக்காக பொருத்தமான ஆலோசனைகளை இலங்கை தபால் திணைக்களம் கோரியுள்ளது.

முத்திரைக் கொள்கையின் 7.1ஆம் பந்தியின் பிரகாரம், தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் நிகழ்ந்த முக்கியமான சம்பவங்கள், ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்கள், மதிப்பிற்குரிய நபர்கள், தேசிய பெருமைகளை வெளிப்படுத்தும் இயற்கை காட்சிகள், விளையாட்டு, தேசிய பெருமைகளை காட்டும் கலாசார விழுமியங்கள் ஆகிய விடயங்களை உள்ளடக்கியதான தலைப்புகளின்கீழ் இதற்கான ஆலோசனைகளை அனுப்பமுடியும்.

சகல ஆலோசனைகளும் அதன் முக்கியத்துவம் குறித்த சுருக்கமான விளக்கத்தையும், திகதிகளை உறுதிப்படுத்துவதற்கான எழுத்துமூலமான ஆவணங்களையும், அனுப்புபவரின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் முகவரி, கையொப்பம் முதலியவற்றையும் உள்ளடக்கியதாகவும் இருக்க வேண்டும் என தபால்மா அதிபரால் விடுக்கப்பட்டுள்ள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சகல ஆலோசனைகளும் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் தபால் திணைக்களத்தின் முத்திரைப் பணியகத்துக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும் எனவும் அவ்வறிவித்தலில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பிரபாகரனைப் பற்றி பௌத்த பிக்குவிடம் சஹ்ரான் சொன்ன தகவல்!

## - ஜனாதிபதி ஆணைக்குழுவில் வெளிவந்த தகவல் -

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணைசெய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் கண்டி நெல்லிகல பௌத்த சர்வதேச மத்திய நிலையத்தின் நிறுவுனர் வத்துருகும்புரே தம்மரத்தன தேரர் கடந்த 22ஆம் திகதி முன்னிலையாகி வாக்குமூலம் வழங்கியிருந்தார்.

கண்டி முருத்தலாவ நகருக்கு அருகிலுள்ள அரசுக்குச் சொந்தமான நிலத்தில் 2014ஆம் ஆண்டு செப்டெம்பர் 23ஆம் திகதி நில ஆணையாளர் நாயகம் திணைக்களத்தின் அனுமதியுடன் நெல்லிகல பௌத்த சர்வதேச மத்திய நிலையத்தின் கட்டுமானப் பணிகள் கடந்த 2014 நொவம்பர் 9ஆம் திகதி ஆரம்பித்ததாக அவர் அங்கு தெரிவித்தார்.

இருப்பினும், அந்த நிலையத்தைச் சுற்றியுள்ள காணிகள் முஸ்லிம்களுக்குச் சொந்தமானது என்றும், எனவே, அங்குள்ள ஏனைய காணிகளுக்கு பணம் செலுத்தியதாகவும், அதன்பின்னரே விகாரையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்ததாகவும் தேரர் தெரிவித்தார்.

கடந்த 2016ஆம் ஆண்டு ஜூன் மாதம் பிரதேச இளைஞர்களுடன் இணைந்து விகாரையின் தாது கோபுரம் அமைக்கும் பணிகளை முன்னெடுக்கும் போது ஐந்து முஸ்லிம் இளைஞர்கள் அங்குள்ள காணியொன்றில் நடமாடியதை கண்டதாகவும், அவர் கூறினார்.

அது தொடர்பான புகைப்படத்தை விகாரையின் சிறிய தேரர் ஒருவர் தனது கைப்பேசியில் புகைப்படம் எடுத்ததாகவும், அவர்கள் சஹ்ரான் ஹாஷிம் அணிந்திருந்த ஆடையை ஒத்த ஆடையை அணிந்திருந்ததாகவும் தேரர் ஆணைக்குழுவில் தெரிவித்தார்.



சிறிதுநேரத்திற்குப் பிறகு, தேரர்கள் அருகே இருந்த குழுவுடன் பேச்சு தொடுத்ததாகவும் அதற்கமைய சஹ்ரான் ஹாசிம், தான் காத்தான்குடியில் இருந்துவந்ததாக கூறியதாகவும் அவர்கள் சிங்களத்தை நன்றாக பேசியதாகவும் கூறினார். அந்தக் குழுவிலிருந்தவர்கள் ஒரே மாதிரியான உடையணிந்திருந்ததாகவும் தேரர் சொன்னார்.

அப்போது காணியை வாங்குவதை நீங்கள் எதிர்க்கிறீர்களா? என சஹ்ரான் தேர்களிடம் வினவியதாகவும் கூறினார்.

ஆம், அதற்கு எதிரானவர் என்று கூறியபோது, தான் ஒருபோதும் அங்கு ஒரு பாடசாலையை கட்ட மாட்டேன் என்றும் மாறாக அங்கு ஒரு நிலையத்தை கட்டவுள்ளதாகவும் சஹ்ரான் கூறியதாக தேரர் குறிப்பிட்டர்.

அந்தக் காணியில் ஒரு சமூக சேவை நிலையம் கட்டப்பட வேண்டும் என்று அப்போது தான் உணர்ந்ததாக தம்மரத்ன தேரர் கூறினார்.

இருப்பினும், சஹ்ரானும் அவரது குழுவும் சென்ற பின்னர் அந்தக் காணியின் முஸ்லிம் உரிமையாளரிடம் இதை விற்கிறீர்களா? என்று அவர் கேட்டபோது, அந்த நிலத்தை விற்கும் எண்ணம் தனக்கு இல்லை என்று அவர் கூறியதாக தேரர் தெரிவித்தார்.

அதன் பின்னர் சஹ்ரான் 2017 மார்ச்சில் இரண்டாவது முறையாகவும், ஒகஸ்ட் 2017 இல் மூன்றாவது முறையாகவும் நெல்லிகல பௌத்த சர்வதேச மத்திய நிலையத்திற்கு வந்ததாகவும் தேரர் குறிப்பிட்டார்.

அப்போது சஹ்ரான் கிறிஸ்தவம் மற்றும் பௌத்த மதம் குறித்தும் அதிலுள்ள விசேட கலாசார விழுமியங்கள் தொடர்பில் விவாதித்தார் எனவும் பாரம்பரிய முஸ்லிம்களுக்கு தலைவர்கள் இல்லை என்று அதன் பின்னர் குற்றஞ்சாட்டியதாகவும் தேரர் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் தலைவர் தமிழ் மக்களுக்காக போராடியபோதிலும் அவருக்கு பெருந்தோட்டத்துறை ஆதரவளிக்கவில்லை எனவும் அவ்வாறு அவர்கள் ஆதரவளித்திருந்தால் பெருந்தோட்ட மக்கள் இன்று பல துன்பங்களை அனுபவிக்க மாட்டார்கள் எனவும் சஹ்ரான் கூறியதாக வத்துருகும்புரே தம்மரத்தன தேரர் தெரிவித்தார்.

பௌத்த சர்வதேச மத்திய நிலைய காணி கொள்வனவை முஸ்லிம்கள் ஒரு தரப்பினர் எதிர்த்ததாகவும், அதில் நேரடியாக தொடர்புபட்ட சிலர் பின்னர் ஆயுதங்களுடன் கைதாகியிருந்ததாகவும் அவர் தெரிவித்தார். பின்னர் தனக்கு ஒரு அச்சுறுத்தல் கடிதம் வந்திருந்ததாகவும் தெரிவித்தார்.

# வேலையில்லாப் பட்டதாரிகள் செப்டெம்பர் 2இல் தொழில் பயிற்சிகளுக்கு இணைத்துக்கொள்ளப்படுவார்கள்!

## அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் அறிவிப்பு

வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு தொழில்வாய்ப்பு வழங்கும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தின்கீழ், தெரிவுசெய்யப்பட்ட சகல பட்டதாரிகளும் தொழில் பயிற்சியாளர்களாக அரச நிறுவனங்களில் இணைத்துக்கொள்ளும் நடவடிக்கைகள் அடுத்த மாதம் 2ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதற்கான பணிகள் பூர்த்திசெய்யப்பட்டிருப்பதாக அரச சேவை மாகாண சபை மற்றும் உள்ளூரட்சி மன்ற அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது;

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தேர்தலின் போது அளித்த வாக்குறுதிக்கமைவாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்திற்காக பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரும் நடவடிக்கைகள் கடந்த பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

2019 டிசம்பர் மாதம் 3 ஆம் திகதியன்று பட்டப்படிப்பை பூர்த்திசெய்த பட்டதாரிகளும் இந்த வேலைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளனர். செப்டெம்பர் மாதம் 2 ஆம் திகதி அவ்வவ் பிரதேச செயலாளர் ஊடாக இவர்களுக்குரிய நியமனக்கடிதங்களை வழங்குவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தெரிவுசெய்யப்பட்ட பட்டதாரிகள் அனைவரதும் விபரங்கள் அதிகாரிகளால் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.



# தொழிலாளர் தேசிய முன்னணியின் உயர்பதவிகள் குறித்து பேராளர் மாநாட்டில் இறுதித் தீர்மானம்:

## -மாநாட்டை விரைவில் நடத்த கட்சியின் நிர்வாகக்குழு முடிவு

(தலவாக்கலை)

தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் தொழிலாளர் தேசிய முன்னணியின் நிர்வாகக் குழு நேற்று முன்தினம் அதன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தலைமையில் ஹட்டனில் கூடியதுடன், பல முக்கியமான தீர்மானங்களும் எடுக்கப்பட்டுள்ளன.

நிர்வாகக் குழுவுக்குள் இரண்டு பேர் புதிதாக உள்வாங்கப்பட்டுள்ளதுடன், தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் தொழிலாளர் தேசிய முன்னணியின் பேராளர் மாநாடு தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

கட்சியின் உயர் பதவிகள் குறித்து, பேராளர் மாநாட்டில் இறுதித் தீர்மானம் எடுக்க ஏகமனதாக முடிவுசெய்யப்பட்டது.



இதன்போது கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம்,

தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் அதன் அரசியல் பிரிவு என்பன ஒரு ஜனநாயக பண்பை பேணும் கட்டமைப்பாகும். அனைவருக்கும் இங்கு சுதந்திரமாக கருத்துகளை வெளியிட முடியும்.

எமது பேராளர் மாநாட்டில் கட்சியின் தலைவர், பொதுச் செயலாளர், தேசிய அமைப்பாளர், நிதி செயலாளர் மற்றும் கட்சியின் ஏனைய உயர் பதவிகளுக்கு நிர்வாகக் குழு உறுப்பினர்கள் யார் வேண்டுமானாலும் போட்டியிடலாம். பேராளர் மாநாட்டில் பதவிகள் குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும் எனச் சுட்டிக்காட்டினார்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 3 ஆம் திகதி மீண்டும் நிர்வாகக் குழு கூடவுள்ளது. அன்று பேராளர் மாநாட்டை எப்போது நடத்துவதென தீர்மானிக்கப்படும் என சங்கத்தின் இளைஞர் அணித் தலைவர் பா.சிவநேசன் தெரிவித்தார்.

# கண்காட்சியை பார்வையிட்டதுடன் கலைஞர்களின் கோரிக்கையையும் ஏற்றார் இராஜாங்க அமைச்சர் ஜீவன்

(தலவாக்கலை)

மலையகத் தமிழர்களின் கலை, கலாசார மற்றும் பண்பாட்டு விழுமியங்களையும், வாழ்வியலையும் பிரதிபலிக்கும் வகையிலான புகைப்பட கண்காட்சி நேற்று முன்தினம் தலவாக்கலை ஸ்ரீ கதிரேசன் கோயில் மண்டபத்தில் நடைபெற்றது.



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானும் புகைப்படக் கண்காட்சியை பார்வையிட்டார்.

மலையக மக்களின் மண் வாசனை தரும் இதுபோன்ற செயற்பாடுகளால் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன் என இதன்போது கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர், கண்காட்சியை ஏற்பாடுசெய்த குழுவினருக்கு வாழ்த்துகளையும் தெரிவித்தார்.

அத்தோடு கண்காட்சியில் கலந்துகொண்ட இளைஞர், யுவதிகள் தங்களுடைய திறமையை விருத்திசெய்ய புகைப்படக் கருவியொன்றை வழங்குமாறு அமைச்சருக்கு கோரிக்கை வைத்தனர். அவர்களுடைய கோரிக்கையை ஏற்று இன்னும் ஓரிரு மாதங்களில் அவர்களுக்கான புகைப்படக் கருவியை பெற்றுத்தருவதாக அமைச்சர் தெரிவித்தார்.




# கொழும்பிலிருந்து பதுளை நோக்கிச்சென்ற பஸ் விபத்தில் ஐவர் படுகாயம்!

(பதுளை)

கொழும்பிலிருந்து பதுளையை நோக்கி சென்றுக்கொண்டிருந்த தனியார் பஸ் ஸொன்று வீடொன்றின் மீது மோதி விபத்துக் குள்ளாகியதில், பயணிகள் ஐவர் படுகாய மடைந்தனர். இவ்விபத்து, நேற்றுக் காலை ஹல்துமுல்ல நகரில் இடம்பெற்றுள்ளது.



இவ்விபத்தில் காயமடைந்தவர்களில் நான்கு பேர் தியத்தலாவை அரசினர் மருத்துவமனையிலும் மற்றவர் ஹல்துமுல்ல அரசினர் மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்றுவருகின்றனர்.

காயமுற்ற ஐவரும், விபத்துக்குள்ளான பஸ்ஸில் பயணித்தவர்களாவர். பஸ் மோதிய வீட்டில் யாரும் இல்லாதலால் யாருக்கும் பாதிப்பு ஏற்படாதபோதும், குறிப்பிட்ட வீட்டுக்கு பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

பஸ்ஸின் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் போனமையாலேயே இவ்விபத்து இடம்பெற்றதாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் தெரிவித்தனர்.

# 'நிழல் ஓவியம்' புகைப்படக் கண்காட்சி

**புகைப்படக் கலையில் பயிற்சியை முடித்துக்கொண்ட நாற்பது மலையக இளைஞர், யுவதிகளால் பதிவுசெய்யப்பட்ட புகைப்படங்களின் கண்காட்சி "நிழல் ஓவியம்" என்ற தொனிப்பொருளில் நடைபெறவுள்ளது.**

**இக்கண்காட்சி எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை பண்டாரவளை கல்வி வலயத்தில் அமைந்துள்ள ஊவா ஹைலண்ட்ஸ் தமிழ் மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளதாக ஊவா சக்தி பவுண்டேஷன் அமைப்பின் தலைவர் சுரேஷ் நடேசன் தெரிவிக்கின்றார்.**

**மலையக இளைஞர், யுவதிகளின் புகைப்படக் கலை ஆர்வத்தைத் தூண்டும் வகையில் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள இரண்டாவது கண்காட்சி இதுவாகும். இக்கண்காட்சிக்கு மாற்றுக்கொள்கை நிலையம், ஊவா சக்தி பவுண்டேஷன் மற்றும் ஜி.டீ.ஸ்ஸட் என்பவை அனுசரணை வழங்குகின்றன.**

# கஹவத்த ஆதார வைத்தியசாலையின் ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டம்

(பலாங்கொடை)

கஹவத்த ஆதார வைத்தியசாலையின் ஊழியர்கள் மேலதிக நேரக் கொடுப்பனவு கிடைக்கப்பெறாமை மற்றும் விடுமுறை பெறுவதில் பிரச்சினை எனத் தெரிவித்து நேற்று வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பணிப்பாளரின் பணிப்புரை, 2018 ஆண்டு செப்டெம்பர் மாதம் கிடைத்துள்ளபோதிலும் இதுவரையில் தங்களுக்கான மேலதிக நேர கொடுப்பனவு வழங்கப்படவில்லை என ஊழியர்கள் மேலும் தெரிவித்தனர்.

மேலும், கஹவத்த ஆதார வைத்தியசாலையின் மேலதிக நேரக் கொடுப்பனவு கிடைக்கப்பெறாமை, விடுமுறை பெறுவதில் சிக்கல் மற்றும் பல கோரிக்கைகளை முன்வைத்து இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஊழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டத்தால், கஹவத்த ஆதார வைத்தியசாலையின் நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்தன.





கடந்த 21ஆம் திகதி முதல் கஹவத்த ஆதார வைத்தியசாலையின் ஊழியர்கள் தமது கோரிக்கைகளை முன்வைத்து மாலையில் மூன்று மணிநேர வேலைநிறுத்தம் செய்துள்ளார்கள்.

இருந்தும் இது தொடர்பில் மேலதிகாரிகள் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதால் நேற்று முதல் தொடர்ச்சியான வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாக கஹவத்த ஆதார வைத்தியசாலையின் ஊழியர்கள் தெரிவித்தனர்.

இவர்களுக்கான மேலதிக நேர கொடுப்பனவு களை வழங்க, சப்ரகமுவ மாகாண சுகாதார ஊழியர்களின் ஓய்வு அறையை வைத்தியர் களுக்கு வழங்கியுள்ளதாகவும் இவர்களுக்கு வேறெந்த ஓய்வு அறைகளையும் வழங்கவில்லை எனவும் விடுமுறைக்கு கட்டுப்பாடுகள் விதிப்பதாகவும் இவர்கள் தெரிவித்ததுடன், உரிய அதிகாரிகள் இது தொடர்பில் கவனம் செலுத்துமாறும் கோரிக்கை முன்வைத்தனர்.

122 ஊழியர்கள் இன்று வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டதால் மருத்துவமனையில் பல சேவைகள் ஸ்தம்பிதமடைந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# எந்த கொம்பன் வந்தாலும் தமிழ் முற்போக்கு கூட்டணியை அசைக்கமுடியாது – இராதா இறுமாப்பு

(ஹட்டன்)

"எந்த கொம்பன் வந்தாலும் மலையக மக்களின் மாபெரும் அரசியல் இயக்கமான தமிழ் முற்போக்குக் கூட்டணியை அழிக்கவே முடியாது" - என்று கூட்டணியின் பிரதித் தலைவரும், மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா, பதுளை, கண்டி, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்றவர்களுக்கான வரவேற்பு நிகழ்வு நேற்று முன்தினம் மதியம் ஹட்டன் நகரில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

"2015ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழ் முற்போக்குக் கூட்டணியாகவே நாம் போட்டியிட்டோம். அதில் வெற்றிபெற்று ஐந்து ஆண்டுகளாக எமது மக்களுக்கு பல சேவைகளை முன்னெடுத்தோம். அவற்றை முன்னிலைப்படுத்தியே பிரசாரம் செய்தோம். எமது சேவையை அங்கீகரித்திருப்பதாலேயே இரண்டாவது முறையும் முற்போக்குக் கூட்டணி உறுப்பினர்களை மக்கள் வெற்றிபெற வைத்துள்ளனர்.

கொழும்பிலும், கண்டியிலும், பதுளையிலும், நுவரெலியாவிலும் வாக்குகளை சிதறடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அப்படி இருந்தும் தமிழ் முற்போக்குக் கூட்டணி நூறுவீத வெற்றியை பெற்றுள்ளது. எம்.பி.யாக இருந்த எவரும் தோல்வியடையவில்லை. எனவே, எமது மக்களை நாம் ஒருபோதும் மறக்கமாட்டோம். அடுத்த ஐந்தாண்டு காலப்பகுதிக்கு உரிய வகையில் சேவைகள் தொடரும்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியாக பயணித்து எமது மக்களுக்கான உரிமைகளை வென்றெடுப்போம். எந்த கொம்பன் வந்தாலும் தமிழ் முற்போக்குக் கூட்டணியை அசைக்கமுடியாது" - என்றார்.

# போலி நாணயத்தாளுடன் எல்லயில் இருவர் கைது!

(பதுளை)

எரிபொருள் நிலையமொன்றில் போலி ஐயாயிரம் ரூபா நோட்டைக் கொடுத்த இரு இளைஞர்களை எல்ல பொலிஸார் நேற்று கைதுசெய்துள்ளனர்.

எல்ல பொலிஸ் பிரிவைச் சேர்ந்த ஹெலஹல்பே எரிபொருள் நிலையத்தில், மோட்டார் சைக்கிளொன்றுக்கு எரிபொருளை நிரப்பிக்கொண்டு, குறித்த மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் இருவர் தம்மிடமிருந்த ஐயாயிரம் ரூபா நோட்டை எரிபொருள் நிலையத்திற்கு வழங்கினர்.

பணத்தைப் பெற்ற எரிபொருள் நிலையத்தினர், அந்நோட்டில் மாற்றமொன்றைக் கண்டு, அது குறித்து எல்ல பொலிஸாருக்கு அறிவித்தனர். உடனடியாக அங்கு விரைந்த பொலிஸார் பணநோட்டை பரிசீலனை செய்தபோது பணநோட்டு போலியென்பதை உறுதிப்படுத்தி, அந்நோட்டை வழங்கிய இரு இளைஞர்களையும் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரும், விசாரணையின் பின்னர் பண்டாரவளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்படுவரென்று, எல்ல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.கே.எம்.அலகியவன்ன தெரிவித்தார்.

# கண்டி – குருநாகல் பிரதான வீதியில் விபத்து; இரண்டு வயதுக் குழந்தையும் தந்தையும் உயிரிழப்பு

(கண்டி)

கண்டி – குருநாகல் பிரதான வீதியின் கொஸ்கொட பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.





இந்த விபத்து நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் இடம்பெற்றதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கொள்கலன் லொறியொன்றுடன் மோதிய கார் பின்னர் மேலும் ஒரு கார் மீது கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது இரு கார்களில் பயணித்த ஐவர் உட்பட லொறியின் சாரதியும் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில், கலகெதர மற்றும் பேராதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த நிலையில், 2 வயது பெண் குழந்தையும் அவரது தந்தையும் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் நிலம்பா பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய தந்தை மற்றும் இரண்டு வயதுப் பெண் குழந்தை என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், இந்த விபத்தில் காயமடைந்த ஏனையவர்கள் தொடர்ந்தும் வைத்தியசாலை களில் சிகிச்சைபெற்றுவருகின்ற நிலையில், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருள் குற்றவாளிகள் 17 பேருக்கு ஒரு இலட்சத்து 25 ஆயிரத்து 500 ரூபா அபராதம்

(இரத்தினபுரி)

போதைப்பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனை செய்த 17 பேருக்கு எம்பிலிப்பிட்டிய நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஒரு இலட்சத்து 25 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

எம்பிலிபிட்டிய பொதுச் சுகாதார காரியாலய பிரதேசத்தில் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது இவர்கள் கைதுசெய்யப்பட்டனர். கசிப்பு தயாரித்தல் கசிப்பு விற்பனை செய்தல், தடைசெய்யப்பட்ட சிகரெட் வகைகளை விற்பனைசெய்தல், விற்பனைக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள பியர் மற்றும் வெளிநாட்டு மதுபான வகைகளை அனுமதியின்றி விற்பனை செய்தல் ஆகிய குற்றச்சாட்டுகளின்பேரில் இவர்கள் கைதுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# கல்கிஸ்ஸ கடலில் மூழ்கி இளைஞர்கள் இருவர் மரணம்

கல்கிஸ்ஸ கடற்பகுதியில் நீராடிக் கொண்டிருந்த இளைஞர்களில், ஏழு பேர் கடலில் அடித்துச் செல்லப்பட்டதைத் தொடர்ந்து, இருவர் காணாமல்போயுள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில், காணாமல்போயுள்ள இருவரையும் தேடும் நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக் கப்பட்ட நிலையில், நேற்றைய தினம் இளைஞர் கள் இருவரில் ஒருவரின் சடலம் கரை யொதுங்கியுள்ளது.

இவ்வாறு அலையில் அடித்துச் செல் லப்பட்டு காணாமல்போன, பூண்டுலோயா ஹெரோ தோட்டத்தைச் சேர்ந்த இளங் கோவன் ஜீவகன், சுரேஷ்குமார் திலக்ஷன் ஆகிய இருவருமே நேற்று முன்தினம் அலையில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல்போயிருந்தனர். குறித்த இருவரும் 18 மற்றும் 19 வயதுடையவர்களாவர்.





கல்கிஸ்ஸ பகுதியிலுள்ள தனியார் நிறுவன ஊழியர்கள் சிலர் நேற்று முன்தினம் பிற்பகல் 2.45 மணியளவில் கடலில் குளிக்கச் சென்றுள்ளனர். 13 பேர் கொண்ட குழுவில் 7 இளைஞர்கள் கடலில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில், அவர்களில் 5 இளைஞர்கள் நேற்று முன்தினமே காப்பாற்றப்பட்டிருந்தனர்.

சம்பவம் அறிந்த பூண்டுலோயா பிரதேச மக்கள் ஆழ்ந்த துயரத்தில் இருக்கின்றனர்.

# பொருளாதாரத்தை வலுப்படுத்த முயற்சியுங்கள் கணக்காளர் சேவை சங்கத்தினருக்கு பசில் அழைப்பு



வீண் விரயம் மற்றும் ஊழலை இல்லாதொழித்து அதிக திறனுடைய கொள்முதல் செயற்பாடு அவசியம் என்றும் ஒரு நிறுவனத்தின் தலைமை மாறினாலும் அதன் திட்டங்கள் தொடர்ந்து முன்னெடுக்கும் வகையிலான ஒரு திட்டவட்டமான மாற்றம் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இலங்கை கணக்காளர்கள் சேவை சங்கத்தினருக்கும் பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷவுக்கும் இடையிலான கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தேசத்தைக் கட்டியெழுப்பும் திட்டத்தில் நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான செயலணி முன்னெடுத்துவரும் வேலைத்திட்டத்திற்கு பங்களிக்குமாறு பசில் ராஜபக்ஷ, கணக்காளர்கள் சேவை சங்கத்தின் பிரதிநிதிகளுக்கு அழைப்புவிடுத்துள்ளார்.

இதன்போது, கணக்கியல்துறையிலுள்ள சிக்கல்கள் குறித்து பசில் ராஜபக்ஷவிடம் எடுத்துரைத்ததுடன், அவர்களின் பிரச்சினைகள் மற்றும் திட்டங்கள் குறித்தும் விரிவாக கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பில் இலங்கை கணக்காளர் சேவை சங்கத்தின் தலைவர் எம்.எஸ்.அனுருத்த உள்ளிட்ட அதன் பிரதிநிதிகள் குழுவினரும் கலந்துகொண்டுள்ளனர்.

# விளையாட்டுகளில் ஊழலை தடுக்க புதிய சட்டம் தேவை

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு



விளையாட்டுகளில் இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுக்கும் விதமாக நவீன முறையிலான புதிய சட்ட வரைபொன்று காணப்படவேண்டுமென விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது;

ஊழல் எதிர்ப்பு மற்றும் இலஞ்சம் தொடர்பான ஏற்பாடுகள் புதிய விளையாட்டுச் சட்டத்தில் பெரிதும் இடம்பெறும். மேலும், இந்தச் சட்டத்தை வகுப்பது குறித்து ஆராய ஒரு குழுவை தேசிய விளையாட்டுச் சபை நியமிக்கவுள்ளது.

இந்தக் குழு, விளையாட்டுச் சபையால் நியமிக்கப்படும். நாங்கள் அதை நீதி அமைச்சருடன் கலந்துரையாடுவோம். பொதுக் கருத்தும் கோரப்படும். அதாவது, சட்டத்தில் என்ன சேர்க்கப்படலாம் என்பது குறித்து பொதுக் கருத்துகள் சேகரிக்கப்படும் என குறிப்பிட்டுள்ளார்.

# சட்டவிரோத கடற்றொழிலுக்கு பயன்படும் வெடிபொருட்களின் பாகங்கள் மீட்பு!






சட்டவிரோத கடற்றொழிலுக்காக பயன்படுத்தப்படும் வெடிபொருட்களின் சில பாகங்கள், திருகோணமலை எரக்கண்டி கடற் பிரதேசத்தில் மிதந்துக்கொண்டிருந்த நிலையில், கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கிழக்கு கடற்படை கட்டளை பிரிவுக்குட்பட்ட கடற்படை அதிகாரிகளால் திருகோணமலை, எரக்கண்டி மற்றும் புறாத்தீவுக்கு அருகில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படை அறிவித்துள்ளது.

16 வோட்டர் ஜெல் குச்சிகள், 8 மின்சாரமற்ற டேட்டனேட்டர்கள், சுமார் 4, 8 மற்றும் 10 அங்குலமுடைய சேப்டி பியூஸ் 7 மற்றும் 5 அடியுடைய சேப்டி பியூஸ் ஆகிய பொருட்களே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன.







செட்டிக்குளம் விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகளும் புனேவ கடற்படை முகாம் அதிகாரிகளும் இணைந்து மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உயிலங்குளம் பிரதேசத்தில் முன்னெடுத்த சுற்றிவளைப்பின்போது 4 கிலோ 16 கிராம் நிறையுடைய கேரள கஞ்சா பொதிகளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேலும், அம்பலாந்தோட்ட விசேட அதிரடிப்படை முகாமின் அதிகாரிகளால் அம்பாந்தோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஹவெல பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட 2 துப்பாக்கிகள், 13 ரவைகளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, கஹாவத்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புங்கிரிய பிரதேசத்தில் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது 101 லீட்டர் சட்டவிரோத போதைப்பொருள், 1 செப்பு சுருளை, 1 எறிவாயு சிலின்டர் மற்றும் 1எறிவாயு அடுப்பு ஆகியவற்றுடன் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# செய்தித் துளிகள்

பல்கலைக்கழகங்களுக்கு சேர்ப்பதற்கான தேர்ச்சிப் பரீட்சைகளின் பெறுபேறுகள் கிடைத்ததும் பல்கலைக்கழக வெட்டுப்புள்ளி விபரம் வெளியிடப்படும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

★★★★★★★★

அடுத்த மாதம் முதல் வழமைபோன்று பாடசாலைகளை நடத்த தீர்மானிக்கப் பட்டிருப்பதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

★★★★★★★★

நேற்று 24 மணிநேரங்கள் மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்புகளில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 477 பேர் அடங்கலாக 1,141 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

★★★★★★★★

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையின் வளாகத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கைகளின்போது புதைக்கப்பட்ட 19 கையடக்கத்தொலைபேசிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

★★★★★★★★

பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய கஞ்சிப்பானை இம்ரானின் உதவியாளர் ஒருவர், பியகம – பேரகஸ் சந்தி பகுதியில் ஹெரோயினுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட 33 வயதான சந்தேக நபரிடமிருந்து 5 கிராம் 780 மில்லிகிராம் நிறையுடைய ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

★★★★★★★★

குருநாகல் நகர முதல்வர் உள்ளிட்ட 5 பேர் மீதான பிடியாணை தொடர்பான தீர்ப்பு இன்று.

★★★★★★★★

பஹ்ரேனிலிருந்து மேலும் 180 இலங்கையர்கள் நாடு திரும்பினர்.

# இலங்கை உணவை விரும்பி சமைத்த அவுஸ்திரேலிய பிரதமர்!







தனது கைகளினாலேயே இலங்கை உணவை சமைக்கும் விதத்திலான புகைப்படங்கள் சிலவற்றை தனது பேஸ்புக் தளத்தில் அவுஸ்திரேலிய பிரதமர் ஸ்கொட் மொரிசன் வெளியிட்டுள்ளார்.

தனது இரண்டு மகள்கள், மனைவி ஆகியோருக்கு இலங்கை உணவு மிகவும் விருப்பம் என அவர் தனது பேஸ்புக் தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

உணவு சமைக்கும் சந்தர்ப்பத்தில் அந்த இடத்தில் கறிவேப்பிலை, வெங்காயம், ரம்பை இலை உள்ளிட்டவையை காணமுடிகின்றது.

சனிக்கிழமை இரவு கறி சமைக்கும் தினம். அனைத்தும் இலங்கை உணவு.

"இரண்டு மகள்களும், மனைவியும் இந்த உணவுக்கு விருப்பம். நான் மெல்பேர்ன் நகரிலுள்ள அனைவர் குறித்தும் சிந்திக்கின்றேன். நாடு முடக்கப்பட்டுள்ள நிலையில், அனைவரும் தம்மால் முடிந்த உணவை சமைத்திருப்பார்கள் என நினைக்கின்றேன்" என அவுஸ்திரேலிய பிரதமர் தனது பேஸ்புக் தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

புதிய கொரோனா வைரஸ் மீண்டும் வேகமாக மெல்பேர்ன் நகரில் பரவி வருகின்ற நிலையில், மெல்பேர்ன் நகர் முடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள்

**25.08.2020 (செவ்வாய்க்கிழமை)**

**வித்வ கலாபூஷணம் ஜோதிட திலகம்**
**சிவஸ்ரீ வெங்கட சுப்ரமணிய குருக்கள்**

| | | |
|---|---|---|
| மேஷம் | - | பக்தி |
| ரிஷபம் | - | பயம் |
| மிதுனம் | - | துணிவு |
| கடகம் | - | பாசம் |
| சிம்மம் | - | நட்பு |
| கன்னி | - | அன்பு |
| துலாம் | - | வெற்றி |
| விருச்சிகம் | - | நம்பிக்கை |
| தனுசு | - | பரிவு |
| மகரம் | - | ஏக்கம் |
| கும்பம் | - | கனிவு |
| மீனம் | - | வீரம் |

**சுப நேரம்**
காலை: 10.35 -12.05
காலை: 03.15 - 05.30

**இராகு காலம்**
03.05
04.35

**எம கண்டம்**
09.05
10.35



# எனது மூச்சு இருக்கும் வரையிலும் மக்களுக்கான அரசியல் பயணம் தொடரும்

## கிழக்கு முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா தெரிவிப்பு



(ஓட்டமாவடி )

"ஒவ்வொரு வேட்பாளரும் தான் தேர்தலில் வெற்றி பெறவேண்டும் என்ற முயற்சியிலும் அதனைத்தொடர்ந்த நம்பிக்கையிலுமே பிரசாரத்தில் ஈடுபடுவர். ஆனால், சில நேரங்களில் இறைவன் அதற்கு மாற்றமான முடிவுகளையே நமக்காக வைத்திருப்பான். வெற்றி குறித்து வைக்கும் நம்பிக்கையை வேட்பாளர்கள் தோல்வியிலும் ஏற்றுக்கொள்ள வேண்டும். எனது மூச்சு இருக்கும் வரையிலும் மக்களுக்கான எனது அரசியல் பயணம் தொடரும்."

- இவ்வாறு முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

தேர்தல் நிறைவுக்கு வந்ததன் பின்னர் முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் முதன்முதலாக கல்குடா தொகுதிக்கு கடந்த ஞாயிறன்று வருகை தந்திருந்தார். கல்குடா தேர்தல் தொகுதியிலுள்ள மீள்குடியேற்ற கிராமமான சுடுபத்தினசேனையில் தனது ஆதாரவாளர்களால் ஏற்பாடுசெய்யப்பட்ட பகல் போசனத்தில் கலந்துகொண்டு ஆதரவாளர்களுக்கு நன்றி செலுத்தும் முகமாக உரையாற்றும்போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார். இணைப்பாளர் அஷ்ஷெய்க் ஹாரூன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றும்போது,

"நான் தேர்தலில் வேண்டுமென்றே தோல்வியை தழுவியதாகவும், எனது பல்கலைக் கழகத்தைப் பாதுகாக்கவே நாடாளுமன்ற உறுப்புரிமையை விட்டுக்கொடுத்ததாகவும் சிலர் சமூகவலைத்தளங்களில் தவறான பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர். இது முற்றிலும் பொய்யானதாகும். யாராவது இந்த நாட்டில் தனது வெற்றியை விட்டுக்கொடுத்த வரலாறுகள் காணப்படுகின்றதா? சிறுபிள்ளைத்தனமான சந்தேகங்களை மக்கள் மத்தியில் விதைப்பவர்கள் எனக்கெதிரான பொய்யான இட்டுக்கட்டுதல்களை ஏன் இவ்வாறு செய்கின்றனர்?

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் மக்கள் மிகவும் புத்திசாதுரியமான முறையில் தங்கள் வாக்குகளை அளித்ததால் வழமையாக வரவேண்டிய இரண்டு முஸ்லிம் பிரதிநிதிகளில் ஒரு முஸ்லிம் பிரதிநிதி இல்லாமல் ஆக்கப்பட்டார். உரிமைக்கென்று தமிழ்க் கூட்டமைப்புக்கும், அபிவிருத்திக்கென்று தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிக்கும் அவர்கள் வாக்களித்ததால் இந்த நிலைமை உண்டாயிற்று.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பல முஸ்லிம் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செய்யத் அலிசாஹிர் மௌலானா மற்றும் அமீர் அலி ஆகியோரும் இந்தத் தேர்தலில் என்னைப்போலவே தோல்வியடைந்துள்ளனர். அவர்களது தோல்வியையும் நாங்கள் பெருந்துயரமாகவே கருதவேண்டும். சிரேஷ்ட முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களை இழந்த மாவட்டமாக மட்டக்களப்பு இப்போது காணப்படுகின்றது. தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களால் மக்களுக்கு நன்மைகள் அதிகமிருப்பின் இறைவன் அவர்களை ஏற்றுக்கொள்வான். அல்லது எம்மைப்போல் ஆளுமைகளின் தேவை அரசுக்கு வேண்டும் எனக் கருதினால் அதனையும் இறைவன் பொருந்தி நமக்கான வாசலை அதிகாரத்தில் திறந்துவைப்பான்.

தற்போது நான் கிழக்கு மாகாண ஆளுநராக அல்லது நாடாளுமன்ற உறுப்பினராக அல்லது உயர்ஸ்தானிகராக நியமிக்கப்படலாம் என்று எனது ஆதரவாளர்கள் நம்பிக்கை கொண்டு வருகின்றனர். அது எனது தோல்வியை தாங்கமுடியாமல் மனஉளைச்சலுக்கு உள்ளாகியுள்ள ஆதரவாளர்களின் நம்பிக்கையாகும். ஒரு விடயத்தை இப்போது சொல்கிறேன். இந்த அரசு பயணிக்கும் பயணப்பாதையை பொறுத்தே அதனைப் பெற்றுக்கொள்வதா? இல்லையா? என்பது குறித்து தீர்மானம் எடுக்கப்படும்.

முஸ்லிம்களின் ஷரீஆ சட்ட விடயங்களில் கடும்போக்குவாதத்தை இந்த அரசு கடைப்பிடிக்குமென்றால் இந்த நாட்டு முஸ்லிம் சமூகம் அதனை ஏற்றுக்கொள்ளுமா? அதிலும் குறிப்பாக, எனது காத்தான்குடி மக்கள் அந்த விடயங்களில் மிகக் கவனமாக இருப்பவர்கள். எனது அரசியல் பயணம் குறித்த சிறந்த தீர்மானங்களை மேற்கொள்வதற்கு மூன்று மாத காலமாவது தேவைப்படும். அதுவரையிலும் அரசியல் அதிகாரம் எனக்கு வந்தாலும் வராவிட்டாலும் எனக்குரிய சுயாதீனமான அதிகாரங்களை பயன்படுத்தி எனது மூச்சு இருக்கும் வரை இந்த மக்களுக்காக சேவை செய்வேன் - என்றார்.




## ஏழு வயதுச் சிறுவன் கிணற்றில் விழுந்து பரிதாப மரணம்

(கிண்ணியா)

திருகோணமலை - கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பூவரசன்தீவு பகுதியில் 7 வயதுச் சிறுவன் கிணற்றில் விழுந்து உயிரிழந்துள்ள சம்பவமொன்று நிகழ்ந்துள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த சிறுவன் கிண்ணியா - பூவரசன்தீவு பகுதியைச் சேர்ந்தவன் என பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் குறித்து தெரியவருவதாவது;

கிண்ணியா பூவரசன்தீவு எனும் கிராமத்தில் வழமைபோன்று மாலைவேளையில் சக நண்பர்களுடன் நிஜாம் அஸ்னி எனும் இந்தச் சிறுவன் விளையாடிக் கொண்டிருந்தபோது, அங்கே காணப்பட்ட பாவனையில் இல்லாத கிணற்றில் இச்சிறுவன் தவறுதலாக விழுந்ததில் இம்மரணம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆழமான இக்கிணறு மக்கள் பாவனையின்மையால் அசுத்தமடைந்து இருந்துள்ள நிலையில் இக்கிணற்றின் பாதுகாப்புச் சுவர் மிகவும் தாழ்ந்த நிலையில் அமையப் பெற்றிருந்தது.

இம்மாணவன் கிண்ணியா பூவரசன்தீவு யூசுப் வித்தியாலயத்தில் தரம்-2 இல் கல்வி பயின்று வந்தவராவார். இவரின் தாய் ஒரு ஆசிரியை என்பதும் தந்தை கடை வியாபாரி என்பதும் குறிப்பிடத்தக்கது.

மரணமான இம்மாணவனின் உடல் கிண்ணியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணையை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## காட்டுயானை தாக்கியதில் பள்ளிவாசலுக்கு சேதம்

(ஓட்டமாவடி)

கிரான் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்டதும் ஓட்டமாவடி பிரதேச சபையின் நிர்வாக ஆளுகைக்குட்பட்ட பிரதேசமுமான கள்ளிச்சை கிராமத்திலுள்ள ஜும்ஆ



பள்ளிவாசல் காட்டு யானையால் தாக்கப்பட்டு கடுமையான சேதத்துக்குள்ளாக்கப்பட்டிருப்பதாக பள்ளிவாசல் பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

கள்ளிச்சை கிராமமானது மட்டக்களப்பு மாவட்டத்தின் பழம்பெரும் கிராமம் என்பதுடன், யுத்த காலப்பகுதியில் இராணுவ கட்டுப்பாட்டுக்குள் இருந்துவந்த இந்த கிராமத்தில் அண்மைக்காலத்தில்தான் மக்கள் மீளக்குடியமர்ந்து வந்தனர்.

இந்நிலையில், அமைக்கப்பட்ட புதிய ஜும்ஆ



பள்ளிவாசலின் ஜன்னல் கண்ணாடிகள் சேதமாக்கப்பட்டுள்ளதுடன் தொடர்ந்தும் இந்த பள்ளிவாசலுக்கும் குடியேறியுள்ள மக்களுக்கும் யானையின் அச்சுறுத்தல் தொடர்ந்து இருந்து வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.



அம்பாறை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் போட்டியிட்டு வெற்றிபெற்று நாடாளுமன்றத்துக்கு தெரிவான டொக்டர் திலக் ராஜபக்ஷவை வரவேற்கும் நிகழ்வு மிகவும் எளிமையான முறையில் நேற்று அம்பாறையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பொதுஜன பெரமுன ஆதரவுக் கட்சியான உலமா கட்சித் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் மௌலவி கலந்து சிறப்பித்ததுடன், டொக்டர் திலக் ராஜபக்ஷவை பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

## ஊடகவியலாளர் ஒன்றியத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு

(பாண்டிருப்பு )

அம்பாறை மாவட்டத்தை தளமாகக்கொண்டு இயங்கிவரும் தமிழர் ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிரேஷ்ட ஊடகவியலாளர் இ.கோபாலசிங்கம் தலைமையில் காரைதீவில் நடைபெற்றது .

இதன்போது ஊடகவியலாளர் ஒன்றியத்தின் கடந்தகால செயற்பாடுகள் தொடர்பில் ஆராயப்பட்டது. ஒன்றியம் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்துவிட்ட நிலையில், அதனை பதிவுசெய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என உறுப்பினர்களால் வலியுறுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பின்வருவோர் புதிய நிர்வாகிகளாக தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் - கோபாலசிங்கம், செயலாளர் - செல்வி, பொருளாளர் - எஸ்.நாகராஜா, உப தலைவர் - எல்.கஜரூபன், உப செயலாளர்- வி.டினேஸ், இணைப்பாளர் - கே.கிலசன். இவர்களுடன் நிர்வாக சபை உறுப்பினர்களாக ரி.தர்மேந்திரா, எஸ்.துஜியந்தன், எஸ்.கஜேந்திரன், பி.மோகனதாஸ், என்.கரன், நடராஜா, சுதாகரன், கதுர்சன், நர்த்தனன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## அம்பாறை மாவட்டத்தின் மீள்குடியேற்ற கிராமங்களில் பாம்புத் தொல்லை அதிகரிப்பு

(பாண்டிருப்பு)

அம்பாறை மாவட்டத்தில் மக்கள் மீளக்குடியேறி வசித்துவரும் கிராமங்களிலும் எல்லைக் கிராமங்களிலும் பாம்புத் தொல்லை அதிகரித்துள்ளதனால் பலர் பாம்புக்கடிக்கும் இலக்காகிவருவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் சாகாமம், அலிகம்பை, சாந்திபுரம், தங்கவேலாயுதபுரம், கஞ்சிகுடியாறு ஆகிய கிராமங்களிலேயே இவ்வாறு பாம்புகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் அங்குள்ள மக்கள் பாம்புக்கடிக்கு இலக்காகிவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது;

தற்போது அதிகரித்த வெப்பம் காரணமாக பல இடங்களிலும் பாம்புகள் நடமாட்டம் அதிகரித்துள்ளது. பாம்புகள் அதன் வசிப்பிடத்தில் இருக்கமுடியாது மக்கள் குடியிருப்புகளையும், குளிர்ந்த இடங்களையும் தேடிவருகின்றன.

இங்கு நாகபாம்பு, வீரியன் புடையன், வளலைப் பாம்பு, சுருட்டைப் புடையன், கருவளலை போன்ற பாம்பு வகைகளே அதிகம் நடமாடுகின்றன. இதனால் அங்கு அச்சமான சூழ்நிலை நிலவுகின்றது.

வீடுகளில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள வாகனங்களிலும் பாம்புகள் சுருண்டு காணப்படுகின்றன. இதனால் வாகனங்களை எடுப்பவர்கள் நன்கு பரிசோதித்த பின்னரே வாகனங்களை ஓட்டுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

தற்போது நிலவும் வெப்பத்தினால் பாம்புக்கடிக்கு இலக்காகுபவர்களின் வீதம் அதிகரித்துள்ளதாகவும் இவ்வாறு பாம்புக்கடிக்கு இலக்காகி அதிகமானோர் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## தென்கிழக்குப் பல்கலைக்கழக இதழியல் கற்கைநெறி மீண்டும் ஆரம்பம்

கொரோனா நோய் தாக்கம் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த இதழியல் கற்கைநெறியின் இரண்டாம் பருவ கால வகுப்புகள் எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மொழித்துறை தலைவர் பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ் தெரிவித்தார்.

மேற்படி இதழியல் கற்கைநெறிக்கு சமூகம் தரவுள்ள மாணவர்கள் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி வகுப்புகளில் கலந்துகொள்ளுமாறு பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை, ஒரு வருடகாலப் பகுதியைக் கொண்ட இந்த பயிற்சிநெறியானது கடந்த 2018ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன், ஏப்ரல் குண்டுத்தாக்குதல் மற்றும் கொரோனா நோய்த் தொற்று போன்ற காரணங்களால் தடைப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## வாகன விபத்தில் தந்தை பலி; மகன் மருத்துவமனையில் அனுமதி!

தெஹியத்தகண்டிய பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொருவர்படுகாயமடைந்துள்ள சம்பவமொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

ஓட்டமாவடி – காவத்தமுனையிலிருந்து மீன் கொள்வனவுக்காக ஓட்டோவொன்றில் தெஹியத்தகண்டிக்குச் சென்ற தந்தையும் மகனுமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளனர்.


இருவரும் ஓட்டோவில் செல்லும்போது எதிரே வந்த கூலர் வாகனத்துடன் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

குறித்த விபத்தில் ஓட்டோவில் பயணித்த ஓட்டமாவடி – காவத்தமுனையைச் சேர்ந்த எஸ்.எம்.சின்னத்தம்பி (வயது 60) என்பவர் உயிரிழந்துள்ளதுடன், ஓட்டோவை செலுத்திச் சென்ற அவரது மகன் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்தில் உயிரிழந்தவரின் சடலம் பிரேதப் பரிசோதனைக்காக தெஹியத்தகண்டிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர்.

## நவீன இயந்திரங்களின் வருகையால் மாட்டுவண்டித் தொழிலாளர்கள் பாதிப்பு

### நிவாரணங்களைத் தருமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை



(மாளிகைக்காடு)

நவீன இயந்திர சாதனங்கள் மற்றும் வாகனங்களின் பயன்பாடுகள் அதிகரித்து வருவதன் காரணமாக தமது நாளாந்த ஜீவனோபாயம் பாதிக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண மாட்டுவண்டித் தொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

விவசாயம், குறுகியதூர ஏற்றி இறக்கல் உள்ளிட்ட பல தொழிற்றுறைகளில் மிகப் பிரதான பங்கை வகித்துவந்த தாம், இதன்மூலமாக நல்ல சம்பாத்தியத்தைப் பெற்று குடும்ப பொருளாதாரத்தை தொய்வடையாத நிலையில் பேணி வந்ததாகவும், அண்மைக்காலமாக நவீன இயந்திரசாதனங்களின் வருகை அதிகரித்ததையடுத்து தாம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இவர்கள் வருத்தம் தெரிவிக்கின்றனர்.

வேறு தொழிற்றுறைகள் தொடர்பான அனுபவமோ, பயிற்சியோ இல்லாத தாம், பாரம்பரியமாக மாட்டுவண்டித் தொழிலையே நம்பி வாழவேண்டியிருப்பதாகவும் இத்தொழிலூடான வருமானம் வீழ்ச்சியடைந்துவரும் சூழ்நிலையில் தமது அன்றாட குடும்ப வாழ்க்கை பெரும் கேள்விக் குறியாக மாறிவருவதாகவும், நாளாந்த ஜீவனோபாயத்திற்காக கடுமையாகப் போராட வேண்டியிருப்பதாகவும் இவர்கள் குறிப்பிடுகின்றனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மட்டுமன்றி, கிராமிய பொருளாதாரத்தை பிரதானமாகக் கொண்டுள்ள ஏனைய சில மாகாணங்களிலுள்ள மாட்டுவண்டித் தொழிலாளர்களும் இவ்வாறான பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள் என்று சுட்டிக்காட்டும் இவர்கள், நாட்டிலுள்ள அனைத்து மாட்டுவண்டித் தொழிலாளர்களதும் நன்மை கருதி பொருத்தமான மாற்றுத் திட்டங்களை அறிமுகப்படுத்தி, உரிய நிவாரணங்களைப் பெற்றுத்தர புதிய அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.






கிழக்கு மாகாணத்தில் தற்போது நிலவும் கடும் வெப்பநிலை காரணமாக அம்பாறை மாவட்டத்தில் பிரதான வீதியோரங்களிலுள்ள கடைகளில் வெப்பத்தை தணிப்பதற்காக பொதுமக்கள் பழங்களை அதிகமாக கொள்வனவு செய்து வருவதை காணமுடிகின்றது. கொரோனா அனர்த்தத்தின் பின்னர் பழ விற்பனையாளர்கள் வருமானமின்றி பெரும் சிரமங்களை எதிர்கொண்டிருந்த நிலையில் தற்போதைய பழவிற்பனையின் மூலம் அந்த சிரமங்களிலிருந்து அவர்கள் மீண்டு வருவதாகவும் குறிப்பிடுகின்றனர்.

# மொட்டுக் கட்சியில் என்னை வெற்றிபெற வைத்து கூட்டமைப்புக்கு மக்கள் பாடம் புகட்டியுள்ளனர்

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவிப்பு



(மட்டக்களப்பு)

நடந்துமுடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஆளும் தரப்பான இலங்கை பொதுஜன முன்னணி கட்சியில் வடக்கு, கிழக்கில் போட்டியிட்டவர்களில் வெற்றிபெற்ற ஒரேயொரு தமிழ் வேட்பாளராக நான் இருக்கின்றேன் - என்று தபால் சேவைகள் மற்றும் வெகுசன ஊடக தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

எனது வெற்றியென்பது ஒரு சாதாரண வெற்றியல்ல. ஏனென்றால், வடக்கு மற்றும் கிழக்கில் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்று கூறிக்கொண்டு தமிழ் மக்களுக்கு உரிமையும் பெற்றுக்கொடுக்காமல், அபிவிருத்திகளையும் பெற்றுக்கொடுக்காமல், தீர்வுகளையும் பெற்றுக் கொடுக்காமல் தொடர்ந்தேர்ச்சியாக பல தசாப்தங்களாக மக்களை ஏமாற்றிக்கொண்டு வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எனது வெற்றியின் ஊடாக மக்கள் பாடம் புகட்டியுள்ளனர்.

நானும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் வழியில் சென்றவன்தான். ஆனால், அப்போது எங்களுக்கு வாக்களித்து எங்களை நாடாளுமன்றம் அனுப்பிய மக்களுக்கு அந்த மக்கள் எதிர்பார்த்த தீர்வையோ, அபிவிருத்தியையோ அந்தக் கட்சி ஊடாக எதையும் பெற்றுக்கொடுக்கவில்லை வெறுமனே அரசாங்கத்தை அந்நாட்களில் பாதுகாத்தது ஒன்றுதான் மிச்சம். அதனால் அந்தவழி பிழையான வழி என்பதை உணர்ந்து, ஆளும் தரப்போடு சில நிபந்தனைகளை - ஒப்பந்தங்களை நாங்கள் முன்வைத்து கடந்த ஜனாதிபதித் தேர்தலிலே ஜனாதிபதி கோட்டாபயவுக்கு ஆதரவளித்தோம். அதன் பிரகாரம் வடக்கு, கிழக்கிலுள்ள சிறுபான்மை மக்களின் ஆதரவுடனும் நாட்டிலுள்ள பெரும்பான்மை மக்களின் ஆதரவுடனும் கோட்டபாய ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டார். அதற்குப் பிறகு கிழக்கு மாகாணத்தில் எங்களுடைய அரசியல் பயணத்தை ஒரு தனித்துவமான பாதையில் கட்டியெழுப்பினோம்.

எழுபது வருடங்களுக்கு மேற்பட்ட அரசியல் வரலாற்று பின்னணியைக்கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் நீண்டகால வரலாற்றைக்கொண்ட அரசியல் கட்சிகளோடு போட்டியிட்டு நாங்கள் பொதுத் தேர்தலில் வெற்றிபெற்றுள்ளோம்.

அத்தோடு, எங்களுக்கு நாடாளுமன்றப் பிரதிநிதி இல்லை என்று அம்பாறை தமிழ் மக்களுக்கு கவலை இருக்கிறது. அவர்களுக்கு ஒரு செய்தியை நான் இந்த இடத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். நீங்கள் ஒன்றை விளங்கிக் கொள்ளுங்கள். எப்பொழுதுமே அம்பாறை - மட்டக்களப்பு - திருகோணமலை என்று நாங்கள் பிரித்துப் பேசியதே இல்லை. அம்பாறை, திருகோணமலை தமிழ் மக்களுக்காக நான் இருபத்திநான்கு மணித்தியாலமும் என்னுடைய உயிரைக் கொடுத்து சேவையாற்ற தயாராக இருக்கின்றேன் என்பதை கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

மட்டக்களப்புக்கு மாத்திரமல்ல, ஒட்டுமொத்த நாட்டுக்கும் நான் சேவையாற்றுவேன். நீண்டகாலமாக கிழக்கில் புரையோடிக் காணப்படுகின்ற எமது மக்களுக்குரிய பிரச்சினைகளை தீர்த்துவைப்பதற்கு இந்த நாட்டிலுள்ள அமைச்சுகளின் உதவியுடன் நான் சேவையாற்ற தயாராகவுள்ளேன்.

எனது அரசியல் பயணத்தில் இந்தப் பொறுப்பை நாங்கள் கண்ணியமாகவும் கௌரவமாகவும் பாதுகாக்கவேண்டும். இதனை மக்கள் எங்களுக்குத் தந்த பிச்சையாகத்தான் நான் பார்க்கின்றேன்.

நிச்சயமாக நாகரீகமான, பண்பானதோர் அரசியல் கலாசாரத்தை இந்த மாகாணத்தில் கட்டியெழுப்பி மக்களுக்கு நல்ல சேவையாளர்களாக நாங்கள் ஒவ்வொருவரும் மாறவேண்டும். நாடாளுமன்றத் தேர்தலில் நாங்கள் சாதித்தது போன்று வருகின்ற காலங்களில் மாகாண சபை, உள்ளூராட்சி சபை தேர்தல்களில் சரியான கட்டமைப்புகளை உருவாக்கி அந்த மட்டங்களிலும் நாங்கள் சேவைகளை செய்ய திட்டங்களை வகுத்துள்ளோம் - என்றார்.



பெரியநீலாவணை விஷ்ணு மகா வித்தியாலயத்தில் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையை எதிர்நோக்கும் மாணவர்களுக்கான கணித பாடத்துக்கான வழிகாட்டல் கையேடு நூல் வழங்கும் நிகழ்வு பல்கலைக்கழக மாணவன் நீலாவணை இந்திரா தலைமையில் நடைபெற்றபோது பாடசாலை அதிபர் கமலதாசன் மாணவன் ஒருவனுக்கு நூலை வழங்குவதை காணலாம். (படம் :-பாண்டிருப்பு)

# அம்பாறை மாவட்டத்தில் வெடிபொருட்கள் மீட்பு





திருக்கோவில் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாவட்டாய் என்னும் பிரதேசத்தில் கடந்த ஓகஸ்ட் 20ஆம் திகதியன்று காணியொன்றில் புதையுண்டிருந்த ரி-81 மோட்டார் குண்டொன்று மீட்கப்பட்டு விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் செயலிழக்க செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, இன்னுமொரு சம்பவத்தில் கடந்த காலங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசமாக இருந்த கஞ்சிக்குடிச்சாறு பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவலொன்றையடுத்து யுத்த காலங்களில் உபயோகிக்கப்பட்ட வெடிபொருள் ஒன்றின் பகுதியொன்றும் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த வெடிபொருளை ஆராய்ந்து அதனை செயழிலக்கச் செய்ய பாதுகாப்பு அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டிருந்தனர்.

# கல்வி முதுமானி பட்டப்படிப்பு பூர்த்தி



மட்டக்களப்பு மாவட்டம், வாழைச்சேனையைச் சேர்ந்த கலீல் ரகுமான் முகம்மட் இர்ஷாத் கல்வி முதுமானி பட்டப்படிப்பை பூர்த்திசெய்துள்ளார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானப் பட்டப்படிப்பை முடித்துக்கொண்ட இவர் 2013ஆம் ஆண்டு தொடக்கம் ஆசிரியர் சேவையில் இணைந்து தனது கல்விச் சேவையை முன்னெடுத்து வருகிறார்.

அத்தோடு, இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறியை (PGDE) படிப்பை பூர்த்திசெய்த இவர், மட்டக்களப்பு புளூ ஸ்கை (Blue Sky) கெம்பஸ் ஊடாக தாய்லாந்து பத்தும்தானி பல்கலைக்கழகத்தின் கல்வி முதுமானி பட்டத்தை பூர்த்திசெய்துள்ளார்.

கற்பித்தல் மற்றும் புறக்கீர்த்திய செயற்பாடுகளில் மிகவும் ஆர்வம்கொண்ட இவர், ஓட்டமாவடி பாத்திமா மகளிர் மகா வித்தியாலயத்தில் கடமையாற்றியதோடு, தற்போது வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்தில் கணிதப் பாட ஆசிரியராகவும் கடமை புரிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு மாவட்டம் வெள்ளத்தில் மூழ்குவதை தவிர்ப்பதற்கு தோணாக்களைத் தூர் வார வேண்டும்

## மாவட்ட கமநல அமைப்புகளின் தலைவர் யோகவேள்

மட்டக்களப்பு மாவட்டம் வெள்ளத்தில் மூழ்குவதைத் தவிர்ப்பதற்கு இந்த மாவட்டத்திலுள்ள அனைத்துத் தோணாக்களையும் தூர் வாரவேண்டும் - என மாவட்ட கமநல அமைப்புகளின் தலைவர் கே.யோகவேள் தெரிவித்தார்.

பருவப்பெயர்ச்சி மழை பருவகாலத்தில் மட்டக்களப்பு மாவட்டம் வெள்ளத்தில் மூழ்குவது சம்பந்தமான கவனயீர்ப்பை அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இது விடயமாக நேற்று திங்கட்கிழமை அவர் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

மட்டக்களப்பு மாவட்டம் பருவ மழைக் காலங்களில் வெள்ளத்தில் மூழ்குவது வழமையான, அதேவேளை அழிவும் அச்சமும் தரக்கூடிய ஒன்றாக மாறிவிட்டிருக்கின்றது.

இந்த இடர் நிலைமையை எதிர்கொள்ள ஏற்றதான நிபுணத்துவத் திட்டங்களை - துறைசார்ந்தவர்களை உருவாக்கவேண்டும்.

முதற்கட்டமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனை தொடக்கம் அம்பாறை மாவட்டத்தில் கல்முனை கிட்டங்கி வரையுள்ள தோணாக்கள் அனைத்தையும் தூர் வாரி நீர் வழிந்தோடக்கூடியதாக ஆக்கவேண்டும்.

இவ்வாறு சுமார் 30இற்கு மேற்பட்ட தோணாக்கள் மட்டக்களப்பு தொடங்கி கிட்டங்கி வரையிலும் எந்தவொரு காலத்திலும் பராமரிப்பு மேற்கொள்ளப்படாது காணப்படுகின்றன.

எனவே, முதன்முறையாக இப்படிப்பட்ட தோணாக்களைத் தூர்வாரி அவற்றை மழை நீர், வெள்ள நீர், கழிவு நீர் வழிந்தோடக்கூடிய வகையில் பராமரித்தால் மட்டக்களப்பு மாவட்டம் காலாகாலமாக எதிர்கொள்ளும் வெள்ளத்தில் மூழ்கும் அபாய அழிவு தரும் நிலைமையைத் தவிர்க்க வழியேற்படும்.

இந்த விடயத்தில் அதிகாரிகளும், துறைசார்ந்தவர்களும், அரசியல்வாதிகளும் இணைந்து திட்டங்களை வகுப்பது விமோசனமளிக்கும்" - என்றார்.




# கூலித்தொழிலில் ஈடுபட்டு விபத்தில் சிக்கி மட்டக்களப்பில் உயிரிழந்த பட்டதாரி மாணவன்:

## அரச நியமனம் கிடைத்தும் பெற முடியாத சோகம்

மட்டக்களப்பு – முனைக்காடு பகுதியில் கட்டட வேலை உதவியாளராக செயற்பட்டு வந்த பட்டதாரி இளைஞர், கட்டட வேலையின்போது மேல் மாடியிலிருந்து தவறி வீழ்ந்து உயிரிழந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

29 வயதுடைய சச்சிதானந்தம் விக்னேஸ்வரன் அரச நியமனம் கிடைக்கும் வரை காத்திருக்காது, குடும்ப வறுமையை போக்குவதற்காக மட்டக்களப்பு – முனைக்காடு பகுதியில் கட்டடவேலை உதவியாளராக செயற்பட்டு வந்த நிலையில், மேல் மாடியிலிருந்து கீழே வீழ்ந்து உயிரிழந்த சம்பவம் பிரதேசத்தையே சோகத்தில் ஆழ்த்தியது.

கடந்த புதன்கிழமை விபத்துக்குள்ளான விக்னேஸ்வரன், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைப்பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பேராதனை பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தில் பயின்ற இவர் 2014ஆம் ஆண்டு பட்டம் பெற்றிருந்த பட்டதாரி ஆவார்.

அரச நியமனம் என்ற கனவு பல வருடங்களாக சாத்தியமடையாத நிலையில் குடும்ப வறுமை காரணமாக இவர் கூலித்தொழிலை செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருந்தார்.

எத்தனையோ எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் உயர்கல்வியை பூர்த்திசெய்தும் உரிய தொழில் கிடைக்காமையே இத்தகைய துரதிஷ்டவசமான சம்பவத்துக்கு காரணமாக அமைந்துள்ளது.

சுமார் 6 வருட காத்திருப்பின் பின்னர் விக்னேஸ்வரனது பெயரும் எதிர்வரும் 2 ஆம் திகதி அரச தொழில் கிடைக்கவுள்ள பட்டதாரிகள் பட்டியலில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 17 வயது யுவதியை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய நபருக்கு விளக்கமறியல்

( திருகோணமலை)

திருகோணமலை, சம்பூரில் 17 வயதுடைய யுவதி ஒருவரை அழைத்துச்சென்று துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய 2 பிள்ளைகளின் தந்தை ஒருவரை அடுத்த செப்டெம்பர் மாதம் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மூதூர் நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம். சம்சுதீன் நேற்று உத்தரவிட்டார்.

சீதனவெளி, சேனையூர் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய நபரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் தனது வீட்டுக்கு அயல் வீட்டில் வசித்துவந்த 17 வயதுடைய மேற்படி யுவதியுடன் இரகசியத் தொடர்புகொண்டிருந்த நிலையிலேயே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

சம்பூர், சூரநகர் பகுதியில் உறவினர் ஒருவரின் வீட்டில் இவர்கள் தங்கியிருந்த நிலையில், சந்தேகநபரின் மனைவி சம்பூர் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கு அமையவே நேற்றுமுன்தினம் குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபரை மூதூர் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோதே, விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

17 வயதுடைய யுவதி மருத்துவ பரிசோதனைக்காக மூதூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சம்பூர் பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர்.

# வாகரை மக்களுக்கு பிரான்ஸ் தனவந்தரின் நிதியுதவி



(ஓட்டமாவடி )

மட்டக்களப்பு மாவட்டம் கோறளைப்பற்று வடக்கு, வாகரை பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட 4ஆம் கட்டை பிரதேசத்தில் வாழும் மக்களின் நன்மை கருதி அவர்களது குடிநீர் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை பெற்றுக்கொடுக்கும் முகமாக பிரான்ஸில் வாழும் தனவந்தரொருவர் கிணறொன்றை அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். குறித்த பிரதேசத்தில் வாழும் மக்கள் கோடை காலத்தில் குடிநீருக்கான தட்டுப்பாட்டு பிரச்சினையை எதிர்நோக்குவதாக தெரிவித்துவந்த கோரிக்கைக்கு தீர்வுகளை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் இந்த கிணறு அமைக்கப்பட்டதாக வாகரை அன்பாலய அமைப்பின் உறுப்பினர்கள் தெரிவித்தனர். தனவந்தரின் நிதியுதவி மூலமாக கிடைக்கப்பெற்ற கிணறு அண்மையில் மக்கள் பாவனைக்காக அவர்களிடம் கையளிக்கப்பட்டது.

# ஆதார வைத்தியசாலையின் ஏற்பாட்டில் இரத்ததான நிகழ்வு



அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் ஏற்பாட்டில் அட்டாளைச்சேனை அல்-நஜா விளையாட்டுக் கழகம் மற்றும் அல்-நஜா சமூகசேவை அமைப்பு இணைந்து நடத்திய மாபெரும் இரத்ததான நிகழ்வு கடந்த சனிக்கிழமையன்று கழகத்தின் தலைவர் எஸ்.எம்.இத்ரீஸ் தலைமையில் அல்-நாஜா விளையாட்டுக் கழகத்தின் அட்டாளைச்சேனை காரியாலயத்தில் இடம்பெற்றது.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கியில் கடமையாற்றும் டொக்டர் எம்.ஏ.எம்.அஜ்ஹரின் வழிநடத்தலில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி டொக்டர் எஸ்.எம்.முனாஸ்தீன், முன்னாள் பிரதேச சபையின் உறுப்பினர் எஸ்.எல்.முனாஸ், அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கியில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இதன்போது ஊடகவியலாளர்கள், விளையாட்டுக் கழக வீரர்கள், பொது அமைப்புகளின் உறுப்பினர்கள், சமூக சேவை தொண்டு நிறுவனங்களின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு இரத்ததானம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனை பிரதேச செயலகத்தில் சந்தை கண்காட்சி திறந்துவைப்பு

கல்முனை பிரதேச செயலகத்தில் (வடக்கு) வர்த்தக சந்தை நேற்று முற்பகல் ஆரம்பமாகியது. இந்த வர்த்தக சந்தை கண்காட்சியை பிரதேச செயலாளர் ஜே.அதிசயராஜ் ஆரம்பித்துவைத்தார்.

இரண்டு நாட்களாக இவ்வர்த்தக சந்தை இடம்பெறுவதுடன், காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை இச் சந்தை கண்காட்சி இயங்கும் என ஏற்பாட்டாளர்கள் குறிப்பிட்டனர்.

இவ்வர்த்தக சந்தையை கல்முனை பிரதேச செயலகத்தின் சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சுப் பிரிவு ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும், இவ்வர்த்தக சந்தையில் உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் காட்சிப் படுத்தப்பட்டுள்ளதுடன், உற்பத்தியாளர்களும் பார்வையாளர்களுக்கு இது தொடர்பில் பல்வேறு விளக்கங்களை அளித்துவருகின்றனர்.




# அமானா வங்கியின் தலைவராக அஸ்கி அக்பரலி



அலி அஸ்கர் (அஸ்கி) அக்பரலி அமானா வங்கியின் பணிப்பாளர் சபையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். வங்கியின் ஸ்தாபகத் தலைவரான ஒஸ்மான் காசிம் தனது கடமைகளிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்திருந்ததைத் தொடர்ந்து இந்தப் புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக வங்கி அறிவித்துள்ளது. அங்கீகாரம் பெற்ற வணிக வங்கியொன்றில் பணிப்பாளர் சபையில் பணியாற்றும் உயரதிகாரியொருவர் ஆகக்கூடியது 9 வருடங்கள் வரை மாத்திரமே பணிப்பாளர் சபையில் அங்கம் வகிக்கலாம் என்ற இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டல்களின் பிரகாரம், இலங்கையில் இஸ்லாமிய வங்கியியல் துறையில் நீண்டகால அனுபவத்தைக் கொண்டுள்ள ஒஸ்மான் காசிம், அமானா வங்கியில் பணிப்பாளர் சபையில் ஒன்பது வருட காலமாக பணியாற்றியிருந்ததைத் தொடர்ந்து, ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். வங்கியிலிருந்து ஓய்வுபெற்றாலும், வங்கியின் முதல் 10 பங்குதாரர்களில் ஒருவராக அவர் தொடர்ந்து திகழ்கிறார்.

அக்பர் பிரதர்ஸ் நிறுவனத்திலிருந்து பிரேரிக்கப்பட்ட பணிப்பாளராக அஸ்கி அக்பரலி அமானா வங்கியுடன் 2020 ஜூலை மாதத்தில் இணைந்தார். வங்கியில் சட்டபூர்வமாக 9 வருடங்கள் பணிப்பாளராக கடமையாற்றி, ஓய்வுபெற்ற தயீப் அக்பரலியின் பொறுப்புகளை இவர் ஏற்றிருந்தார்.

உலகளாவிய ரீதியில் தேயிலை ஏற்றுமதிக்காகப் புகழ்பெற்றுள்ள இலங்கையின் முன்னணி பன்முகப்படுத்தப்பட்ட கூட்டாண்மை நிறுவனங்களில் ஒன்றான அக்பர் பிரதர்ஸ் (பிரைவேட்) லிமிடெட்டின் நிறைவேற்றுப் பணிப்பாளராகவும் அக்பர் குரூப் நிறுவனத்தின் உற்பத்தி, சொத்துகள் விருத்தி, ஹோட்டல்கள் மற்றும் விருந்தோம்பல், சுகாதாரப் பராமரிப்பு, வலுப் பிறப்பாக்கல், பொதியிடல் மற்றும் அச்சிடல், சரக்குக் கையாளல் மற்றும் சூழல் சேவைகள் போன்ற பிரிவுகளில் இயங்கும் துணை நிறுவனங்களில் பணிப்பாளர் சபை அங்கத்தவராகவும் Renewgen (Pvt) Ltd இன் முகாமைத்துவப் பணிப்பாளராக திகழ்வதுடன், Windforce (Pvt) Ltd, Hermitage Resorts (Pvt) Ltd, Uthurumaafaru Holding (Pvt) Ltd Maldives, Lhaviyani Holdings (Pvt) Ltd மற்றும் Cocoon Investments (Pvt) Ltd Maldives ஆகியவற்றின் தலைவராகவும் Alumex PLC இன் பணிப்பாளராகவும் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# பியகமவில் பாடசாலை மாணவர்களுக்கு பாதுகாப்பாக மீள் கல்விச் செயற்பாடுகளை ஆரம்பிக்க அங்கர் அணியின் உதவி

தொற்றுநோய் பரவுகின்ற காலகட்டத்தில் வாழ்க்கை என்பது பெற்றோருக்கும், பிள்ளைகளுக்கும் என இரு தரப்பினருக்குமே சவால் மிக்கது. பாடசாலை கற்றல் செயற்பாடுகளை தற்போது மீள ஆரம்பித்துள்ளமை ஒரு முக்கியமான மற்றும் வரவேற்கத்தக்கபடியாகும், ஆனால், பிள்ளைகள் தங்கள் கற்றலை மீண்டும் தொடங்க பாதுகாப்பான மற்றும் சுகாதாரமான வழிமுறைகளை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பது முக்கியம்.

பியகமவில் பாடசாலை மாணவர்களுக்கு அவர்கள் பாதுகாப்பாக தமது கற்றல் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதற்கு உதவும் வகையில், ஃபொன்டெரா பிரான்ட்ஸ் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் முதன்மை பால் வர்த்தகநாமமான அங்கருக்குப் பொறுப்பான அணி சமீபத்தில் பியகம மத்திய கல்லூரி



மற்றும் பியகம ஆரம்ப பாடசாலையின் மைதானங்கள் மற்றும் வகுப்பறைகளை சுத்தம்செய்யும் ஒரு சிரமதான பணி மற்றும் விழிப்புணர்வு நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

இந்த முயற்சி தொடர்பில் பியகம மத்திய கல்லூரியின் அதிபரான யு.வி. குணரத்ன கருத்து வெளியிடுகையில், "தற்போது பரவி வருகின்ற தொற்றுநோய் நம் அனைவருக்கும் முன்னெப்போதும் அனுபவிக்காத ஒரு சவாலாக இருக்கின்ற போதிலும், பற்றைகள், செடி கொடிகள் வளர்வதன் காரணமாக ஏற்படும் நுளம்பு பெருக்கம் போன்ற பிற ஆபத்துகளையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த ஆபத்தைப் போக்க தேவையான நடவடிக்கைகளை நாம் முன்னெடுக்க வேண்டும்" என்று குறிப்பிட்டார். "எங்கள் பாடசாலையின் கல்வி பயிலும் 2,000இற்கும் மேற்பட்ட பிள்ளைகளுக்கு இந்தச் சூழலை பாதுகாப்பானதாகவும், சுத்தமாகவும் மாற்றும் முயற்சியில் உள்நாட்டு சுகாதார அதிகாரிகளின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி, பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் அங்கர் அணி ஒன்றிணைந்து பணியாற்றியமைக்கு நான் நன்றி கூறவிரும்புகிறேன்" என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

# மாணவர்களை போட்டிக்கு அழைக்கும் துறைமுக நகரம்

கொழும்புத் துறைமுக நகரம் அதன் அடுத்த கட்ட வளர்ச்சியில் நாட்டின் மற்றொரு சாதனை நிகழ்வை முன்னிறுத்தியுள்ளது. இந்த செயற்றிட்டம் சமீபத்தில் 'Envision the Future' எனப்படும் ஒரு கடற்கரை சிற்ப போட்டி மற்றும் வளர்ந்து வரும் உள்நாட்டு வடிவமைப்பாளர்களை இலக்காகக்கொண்ட ஒரு அர்த்தபூர்வமான கருத்தியல் வெளிப்பாட்டு சுவரை வடிவமைக்கும் ஒரு சிற்ப வடிவமைப்பு போட்டியை அறிமுகப்படுத்தியுள்ளது. நாட்டின் மிகப்பெரிய சாதனை அபிவிருத்தி மேம்பாட்டுத் திட்டமான கொழும்புத் துறைமுக நகரத்தை அலங்கரிக்கும் சின்னமான சிற்பங்களும், இந்த வகையில் முதன்முதலான கருத்தியல் வெளிப்பாட்டுச் சுவரும் உலகளவில் அடையாளம் காணப்படும் உள்நாட்டு நினைவுச்சின்னங்களாக மாறவுள்ளன.

இந்த வடிவமைப்புப் போட்டி கொழும்புத் துறைமுக நகர திறப்பு விழா சார்ந்த முயற்சிகளின் ஒரு பகுதியாக காணப்படுவதுடன், மேலும், இந்தத் திட்டம் உலகளவில் அடையாளம் காணப்படும்போது ஊக்குவிப்பு உதாரணங்களாக செயற்படும் பல மூலோபாய நினைவுச்சின்னங்கள் மூலம் இலங்கையின் உற்சாக உணர்வை வசப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பொதுமக்களுக்கான கடற்கரை மற்றும் பூங்காக்கள் என செயற்றிட்டத்தின் பல கட்டங்கள் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், சிற்பங்கள் மற்றும் கருத்தியல் வெளிப்பாட்டுச் சுவர் அதன் அடுத்த கட்ட வளர்ச்சியின் ஓர் அங்கமாக இருக்கும். கொவிட்19 'புதிய இயல்பு வாழ்க்கை' சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக, ஒட்டுமொத்த போட்டியும் www.envisionthefuture.lk என்ற டிஜிட்டல் தளமேடை வழியாக நடத்தப்படும் போட்டியில் வடிவமைப்பு கருத்தாக்கங்களை வழிநடத்த Academy of Design உம், ARTRA சஞ்சிகை உத்தியோகபூர்வ ART பங்காளராகவும் இணைந்துள்ளதுடன், இந்த நினைவுச்சின்ன செயற்றிட்டத்தின் வடிவமைப்பில் பங்களிக்க தனது பங்குதாரர்களான அடுத்த தலைமுறையினரை கொழும்புத் துறைமுக நகரம் அழைக்கிறது.

# எண்ணெய்த்தன்மையான சருமத்துக்கு புத்துயிரூட்டும் The Body Shop இன் Tea Tree தெரிவுகள்

எண்ணெய்த்தன்மையான சருமம் என்பது எண்ணெய்ச் சுரப்பிகளினால் சருமத்தில் எண்ணெய்த்தன்மை சுரப்பதால் ஏற்படுத்துவதாகும். இதனால் சருமத்தில் வெக்ஸ், எண்ணெய்த்தன்மை ஏற்படுகின்றது. எண்ணெய்ச் சுரப்பி என்பது சருமப் பாதுகாப்புக்கு அவசியமான போதிலும், அளவுக்கதிகமான எண்ணெய்ச் சுரப்பினால் எண்ணெய்த்தன்மை வாய்ந்த சருமம், துவாரங்கள் அடைபடல் மற்றும் பருக்கள் போன்றன தோன்றுகின்றன.

எண்ணெய் மற்றும் நீர் ஆகிய இரு வேறு அம்சங்கள் என்பதை தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும். எமது சருமம் ஆரோக்கியமாக திகழவேண்டும். எண்ணெய்த்தன்மையான சருமத்தைக் கொண்டிருப்பவர் சௌகரியமாக உணர்வதற்கு சருமப் பராமரிப்பு மந்திரமான ஈரப்பதனான சருமம் என்பது ஆரோக்கியமான சருமம் எனப் பொருள்படும் என்பதற்கமைய அமைந்துள்ளது. பலர் எண்ணெய்த்தன்மையை ஈரப்பதன் என்பதுடன்




குழப்பிக்கொள்கின்றனர். ஆனாலும், ஈரப்பதனூட்டிகள் என்பதன் செயற்பாடு, அதற்கு நீர்த்தன்மையை சேர்ப்பதாக அமைந்துள்ளது.

போதியளவு நீர் இன்மையால், சருமம் உலர்ந்த நிலையை அடையும்போது, உடலிலிருந்து அதிகளவு எண்ணெய் சுரக்கப்படுகின்றது. இந்த அளவுக்கதிகமான எண்ணெய்த்தன்மையான துவாரங்கள் அடைபடல் ஏற்பட்டு, மாசுபடும் நிலையை எய்துகின்றது.

துரதிர்ஷ்டவசமாக எண்ணெய்த்தன்மையை சுரக்கும் எண்ணெய்ச் சுரப்பிகள் காரணமாக சருமங்கள் பளபளப்பாக காணப்படுவதுடன், ஹோர்மோன் மாற்றங்கள் காரணமாகவும் இந்நிலை எழுகின்றது. தொடர்ச்சியான சருமப்பராமரிப்பு செயற்பாடுகளினூடாக மாசுகளை கட்டுப்படுத்திக்கொள்ளலாம்.

The Body Shop எப்போதும் சருமத்தை சிறந்த சமநிலையில் பேணுவதற்கு முயற்சிக்கின்றது. சகலவிதமான சருமங்களுடனும் செயலாற்றி, அவற்றை ஆரோக்கியமாகவும் சிறப்பாகவும் உணரச் செய்ய முயற்சிக்கின்றன.

Tea Tree சருமப் பராமரிப்பு தெரிவுகளினூடாக, சருமப் பராமரிப்பு வழங்கப்படுவதுடன், குணமாக்கல் மற்றும் ஈரப்பதனூட்டல் போன்ற அம்சங்கள் காணப்படுகின்றன.

# RDB வங்கியின் 'புனர்ஜீவன கடன் திட்டம்" மூலம் வாடிக்கையாளர்களுக்கு சலுகைகள்

அண்மைய வரலாற்றில் இலங்கை வாழ் மக்கள் பல்வேறு இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்துள்ளார்கள். அண்மையில் முழு உலகமும் முகங்கொடுத்த கொவிட் தொற்று மட்டுமன்றி நாட்டின் பொருளாதாரத்தில் பல்வேறு பிரிவுகளை கட்டுப்படுத்தியுள்ள 2019ஆம் ஆண்டின் உயிர்த்த ஞாயிறு தாக்குதல், பல வருடங்களாக அனுபவிக்கும் வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கையான இன்னல்கள் காரணமாக மக்களின் பொருளாதார செயற்பாடுகள் ஆட்டம் கண்டுள்ளன. உள்ளூர் தொழில் முயற்சியாளர்கள் மட்டுமன்றி கமத்தொழிலாளர்கள், விவசாயிகள், உற்பத்தி மற்றும் பல்வேறு சேவைகளில் ஈடுபட்டுள்ளவர்களும் இதனால் துன்பத்துக்கு ஆளாகியுள்ளனர். அதன் காரணமாக வியாபார மற்றும் வேறு தேவைகளுக்காக வங்கிகளில் நிதி வசதிகளை பெற்றுக் கொண்ட பல வாடிக்கையாளர்கள் கடன்களை மீளச் செலுத்துவதற்காக சிரமப்படுகின்றனர்.

35 வருட கௌரவமான வரலாற்றைக் கொண்டுள்ள பிரதேச அபிவிருத்தி வங்கி (RDB வங்கி) யானது அன்று முதல் இன்று வரை மக்களின் துயரங்களைக் களையும் வங்கியாக அடையாளப்படுத்தப்படுகின்றது. RDB வங்கிவரலாற்றில் பல சந்தர்ப்பங்களில் தமது வாடிக்கையாளர்களுக்கு பல்வேறு சலுகைகளை வழங்கிய வங்கியாகும்.

ஆகையினால், தற்போதைய சமூக பொருளாதார நிலைமையில் வங்கி வாடிக்கையாளர்களுக்கு சலுகைகளை வழங்குவதற்காக இலங்கை மத்திய வங்கியினால்




அறிமுகம் செய்யப்பட்ட சலுகை திட்டங்களை செயற்படுத்துவதுடன், அதற்கப்பால் மேலும் வாடிக்கையாளர்களுக்கு தேவையான சலுகைகளை இந்த கடினமான சந்தர்ப்பத்தில் வழங்குவதற்கு அவர்களுக்கு ஆதரவாக புதிய நிதி வசதிகளை வழங்கும் வேலைத் திட்டத்தை 'RDB புனர்வாழ்வு' என்ற பெயரில் வங்கியினால் செயற்படுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.

அந்த கடன் வேலைத்திட்டத்தின் கீழ் தமது வாடிக்கையாளர் மற்றும் அவர்களது வியாபாரங்கள் முகங்கொடுத்துள்ள வியாபாரச்சரிவுகள், செயற்பாட்டு மூலதன குறைபாடுகள் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதில் உள்ள சிக்கல்கள், தடைப்பட்டுள்ள வியாபாரத்தை மீள ஆரம்பிப்பதற்கு நிதி வசதிகள் இல்லாமை, வேறு வியாபாரங்களுக்கு மாறிச் செல்வதற்கு நிதி வசதிகள் இல்லாமை போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வாக மட்டுமன்றி பெற்றுக் கொண்டுள்ள கடன்களை செலுத்துவதில் ஏற்பட்டுள்ள தாமதத்திற்கான சலுகைகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# "COVID-19 பாதுகாப்பு ஒழுங்குமுறை நிர்வாக சான்றிதழ்" பெற்ற முதல் உணவு தயாரிப்பு நிறுவனமாக மலிபன்




பிஸ்கட் தயாரிப்பில் முன்னோடியான வரையறுக்கப்பட்ட (தனியார்) மலிபன் பிஸ்கட் உற்பத்திகள் நிறுவனத்திற்கு "COVID-19 பாதுகாப்பு ஒழுங்குமுறை நிர்வாகத்திற்கான சான்றிதழ்" இனை இலங்கை தர நிர்ணய நிறுவனம் (SLSI) அண்மையில் வழங்கியது. இது SLSIயின் நிகழ்கால தர நிர்ணயங்களுக்கு ஏற்ப தொழிற்சாலைகளை மேம்படுத்துவதில் மலிபன் நிறுவனத்தின் நிலைப்பாட்டை தெளிவாக நிரூபிக்கின்றது. அதன் பிரதிபலனாக இச்சான்றிதழை பெற்ற முதல் உணவு உற்பத்தி நிறுவனம் என்ற பெருமையை மலிபன் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# 'நென திரிய' கடன் திட்டத்தை அறிமுகப்படுத்தும் சர்வோதய டிவலொப்மன்ட் ஃபைனான்ஸ்




சர்வோதய டிவலொப்மன்ட் ஃபைனான்ஸ் மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட, உரிமம்பெற்ற ஒரு நிதி நிறுவனமாகும். இது இலங்கையின் புறநகர்ப் பகுதிகள் மற்றும் கிராமப்புறங்களிலுள்ள பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்திடும் நோக்கில் 'நென திரிய' நுண்ணிய லீசிங் கடன் வசதிகளை அறிமுகப்படுத்தியது. இக்கடன் வசதியின் மூலம் சலுகை விலையில் மடிக்கணினிகளை வாங்குவதற்கான வசதி பெற்றுக்கொடுக்கப்படுகிறது. இதன் அறிமுக நிகழ்வு கம்புறுப்பிட்டிய கிளையில் சர்வோதய டிவலொப்மன்ட் ஃபைனான்ஸின் தலைவர் சன்ன டி சில்வா மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரி நிலந்த ஜயனெட்டி ஆகியோரின் தலைமையில் இடம்பெற்றது.

மார்ச் மாதம் கொவிட் – 19 தொற்று நோயின் பரவலுடன் நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்ட பொது முடக்கத்துடன் பிள்ளைகளுக்கு பாடசாலைகளுக்கும் கல்வி நிலையங்களுக்கும் செல்லமுடியாததால் பிள்ளைகளின் கல்வி நிலை கணிசமாக பாதிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக பல பாடசாலைகள் ஒன்லைன் கருவிகளைப் பயன்படுத்தி வகுப்புகளை நடத்துவதற்கு முடிவுசெய்தன. பெரும்பாலும் நகர்ப்புறப் பகுதிகளில் வாழும் மாணவர்களில் குறைந்த எண்ணிக்கையிலானோருக்கு ஒன்லைன் கல்விக்கான கணினி மற்றும் மடிக்கணினிகளுக்கு இலகுவான அணுகல் இருந்தது. அதேவேளை, புறநகர்ப் பகுதிகளில் மற்றும் கிராமப்புறங்களில் மடிக்கணினிகளை கொள்வனவு செய்வதற்கான நிதிச்சிக்கல்கள் காணப்படுதல் காரணமாக அவர்கள் கைவிடப்பட்டனர். சமுதாயத்தின் அனைத்துப் பிரிவுகளிலும் அக்கறை கொள்ளும் ஒரு பொறுப்புள்ள நிறுவனம் என்றவகையில் அனைத்து விதங்களிலும் வளர்ச்சியடைவதற்கான சந்தர்ப்பங்களை நாம் எப்பொழுதும் வழங்குகிறோம்."

– என்றார்.

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.



# சீத்துவக்கேடு 56



காரைக்கவி
கந்தையா பத்மானந்தன்

இன்னொரு விசயம் உனக்கு நான் சொல்லவேணும். என்னண்டால் தேனிலை செய்த கள்ளை எங்கட ஆக்கள் அந்தக் காலத்தில நிறையக் குடிச்சிருக்கினம் எண்டதை 'ஹவேய்பெயல் விளையுள் தேக்கட்டேறல் குறைவின்றிப் பருகி நறவு மகிழ்ந்து'.

(மலைபடு கடாம் 171–172)

'திருந்தமை விளைந்த தேக்கட்டேறல்' (மலைபடு கடாம் 523), 'நிலம் புதைப் பழுநிய மட்டின் தேறல்' (புறம், 120 : 12), 'வாங்கு அமைப் பழுநிய தேறல், (புறம், 129:2) 'ஆம்பணை விளைந்த தேக்கட்டேறல்' (அகம், 368 : 14) 'அமை விளை தேறல் மாந்திய கானவன்' (சிலம்பு, 27 : 217) 'நிலம் புதைப் பழுநிய மட்டின் தேறல்' (புறம், 120) எண்ட பாட்டுகளிலை இருந்து அறியலாம் விளங்கிச்சா எண்டு ஆச்சியிட்டை அப்பு சொல்லுவார் .

தேனிலை இருந்து எடுத்த கள்ளை நிறையக் குடிச்சாலும் எங்கட ஆக்கள் பெண்ணைப் பிழி எண்டிற பனங்கள்ளுத்தான் நல்ல தாராளமா விருப்பத்தோட குடிச்சவை எண்ட விசயத்தை "இரும்பனந் தீம்பிழி யுண்போர் மகிழும் ஆர்கலி யாணர்த் தாயினுந் தோடுகெழு" எண்டு உலோச்சனார் நற்றிணையிலும் "பிணர் பெண்ணை பிழி மாந்தியும்" எண்டு பட்டினப்பாலையிலும்

"ஓங்கித் தோன்றும் தீங்கள் பெண்ணை நடுவண் அதுவே" எண்டு வடமவண்ணக்கன் பேரிசாத்தனார் நற்றிணையிலும் "நுளை மகள் அரித்த பழம்படு தேறல்" எண்டு இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் சிறு பாணாற்றுப் படையிலும் சொல்லி இருக்கினம் கண்டியோ எண்டுவார் அப்பு.

"பொதுவா ஆக்களை வாழ்த்தேக்கை எல்லாச் செல்வங்களும் பெற்று நோய் நொடி இல்லாம பல்லாண்டு வாழ்க எண்டு வாழ்த்துறதுதானே வழக்கம். ஆனால், எங்கட பழைய புலவர்மார் மன்னர்களை வாழ்த்தேக்கை, அட மக்கள் நீங்க நல்லாக் கள்ளுக் குடிச்சு வாழுங்கோ எண்டுதான் வாழ்த்தி இருக்கினம் கண்டியோ. நீ என்னை வாழ்த்தாட்டாலும் சும்மா சத்தம் போடாமதன்னும் இருக்கலாம்தானே" எண்டு ஆச்சியிட்டை சொல்லுவார் அப்பு.

உடன அவங்கள் மன்னர்மார் வேற வேலை வெட்டி இல்லையெண்டு குடிச்சாங்கள் எண்டு நீ ஒண்டுக்கும் வழியில்லாத சுருட்டுக்காரன் குடிக்கலாமோ எண்டுவா ஆச்சி.

"அடியே என்னை முதல்ல இந்தக் கதையை முடிக்க விடு. பிறகு மறந்து போவன். அதுக்குப் பிறகு நீ உன்ரை உந்த சீலம்பாய் கதையைச் சொல்லு" எண்டு போட்டு அப்பு இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய பாண்டியன் நன்மாறனை நக்கீரர் வாழ்த்தேக்கை அடேயப்பா நீ உந்த யவனர் கொண்டுவந்து தந்த தேறலை நல்லாக் குடிச்சு உண்டு மகிழ்ச்சியா இரு எண்டு வாழ்த்தி இருக்கிறார்.

"யவனர் நன்கலந் தந்த தண்கமழ் தேறல்
பொன்செய் புனைகலத் தேந்தி, நாளும்
ஒண்டொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்து
ஆங்கினிது ஒழுகுமதி ஓங்குவாள் மாற."

(புறம். 56)

உதமாதிரி தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை மாங்குடி மருதனார் வாழ்த்தேக்கை. அட நீ உந்த ஹமணங்கமழ் தேறலை நல்லாக் குடிச்சு சந்தோசமா இரு எண்டு வாழ்த்தி இருக்கிறார்.

"இலங்கிழை மகளிர்
பொலங்கலத் தேந்திய
மணங்கமழ் தேறல் மடுப்ப
நாளும்
மகிழ்ந்தினிது உறைமதி பெரும"

(மதுரைக் காஞ்சி.779–81)

உவர் உந்த மாங்குடி மருதனார் இன்னொரு பாட்டிலையும் அந்தப் பாண்டியனை உப்பிடித்தான் குடியும் குடித்தனமுமா நல்லா இரு எண்டு வாழ்த்தி இருக்கிறார் .

"ஒண்டொடி மகளிர்
பொலங்கலத் தேந்திய
தண்கமழ் தேறல் மடுப்ப
மகிழ்சிறந்து
ஆங்கினி தொழுகுமதி பெரும"

(புறம். 24: 31–33)

உது பரவாயில்லை சேரமான் மாவெண்கோவும் பாண்டியன் கானப் பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதியும் சோழன் இராசசூயம் வேட்ட பெருங்கிள்ளியும் ஒண்டா இருந்த நேரம் பார்த்து அவ்வையார் அடே நீங்கள் மூண்டு பேரும் நல்லா குடிச்சு சந்தோசமா "பாசிழை மகளிர் பொலங்கலத் தேந்திய நாரரி தேறல் மாந்தி மகிழ்சிறந்து" (புறம் 367) இருங்கடா எண்டு வாழ்த்திப் பாடுறா கண்டியோ எண்டார் அப்பு.

சோம பானம் எண்டு ஒருவிதமான கள்ளும் வேத காலத்தில இருந்து இருந்ததாக பல புத்தகங்களிலை இருக்குது. சந்திரக்கடவுளாகிய சோமன் வருகிற நள்ளிரவில் சோம தாவரம் எண்ட தாவரத்தில இருந்து சோமபானம் தயாரிக்கப்பட்டதாக பழைய புத்தகங்களில் இருக்குது கண்டியோ.

இதை தயாரிக்கிற முறைகள் பற்றி இருக்கு வேதம் சாம வேதத்திலும் சொல்லப்பட்டிருக்குது எண்டு உதைப் பற்றிப் படிச்ச ஆக்கள் சொல்லி இருக்கினம் . பின்னேரங்களிலை உவங்கள் அரசர்களும், அரச பிரதானிகளும் சோமபானம் குடிச்சிருக்கினம். அதேமாதிரி சண்டைக்குப் போகேக்கை படைத் தலைவர்கள், அணித்தலைவர்கள் எல்லாம் சோம பானம் குடிச்சிருக்கினம் எண்டு உந்தப் புத்தகங்களிலை கிடக்கு.

இந்த சோமபானம் உடலுக்கு குளிர்ச்சியை தாறதோட உடம்புக்கும் நரம்புகளுக்கும் புத்துணர்ச்சியும் குடுக்கும் எண்டதாலயும், உடம்பு நோவை இல்லாமல் பண்ணும் எண்டதாலயும் முனிவர்கள் வேள்விகள் செய்யேக்கையும் படைத்தலைவர்கள், வீரர்கள் போர் நடக்கேக்கையும் உடம்பு தளர்ச்சி அடையாமல் தொடர்ந்து சுறுசுறுப்பாகவும், மனவுறுதியுடன் செயல்பட குடிச்சினமாம் எண்டு எழுதப்பட்டிருக்குது கண்டியோ எண்டுவார் அப்பு .

அதுமட்டுமில்லை பக்தி இலக்கிய காலத்தில தமிழ்நாட்டில பிராமணர்களும் சோமபானத்தைப் பருகி சோமயாகம் செய்தவை எண்டு நிறைய பாண்டியர் பல்லவர் காலச் செப்பேடுகள்(தளவாய்ப்புரச் செப்பேடு, வரி, 138) சொல்லுதாம் எண்டு உதைப் பற்றி ஆராய்ச்சி செய்த ஆக்கள் சொல்லுகினம் .

இப்பிடி சமய யாகம் செய்யிறவையை சோமயாஜி பிராமணர் எண்டு சொல்லுறது எண்டும் உவை சோம பானம் குடிச்சு குடிச்சு தங்கடை மனசை சுத்தம் செய்தவை எண்டு அதாவது மனோ அத்தர் ஆகியதாக உந்தச் செப்பெடுகளிலை இருக்கெண்டு உது சம்பந்தமா ஆராச்சி செய்த ஆக்கள் சொல்லுகினம் கண்டியோ எண்டுவார் அப்பு.

(தொடரும்)



---

# வாழை மரம் என்ற பெயர் எப்படி வந்தது?

வாழையை மரம் என்று சொல்வதா? இல்லை செடி என்று சொல்லுவதா? ஒரே திகைப்பைக் கொடுக்கிறது வாழை.

வாழையைப் பார்த்தால் போதும். அப்படியே கையெடுத்து வணங்கத் தோன்றும். வாழையை மூன்று சுற்று சுற்றி வந்து அதன் காலில் விழுந்து வணங்கவும் தோன்றும்.

ஓங்கி ஒரு தள்ளு தள்ளினால் போதும் சுடக்கென்று முறிந்து ஒடிந்துவிடும். வாழை மரம் அவ்வளவு மென்மையானது. அவ்வளவு இளமை குளுமையானது.

ஆனாலும் அதனிடமிருந்து கிளைத்து முளைத்து வருகின்ற இலையைப் பார்த்தால் வியப்பாக இருக்கிறது. எவ்வளவு நீளம், எவ்வளவு அகலம். அவ்வளவையும் மடக்கி சுருட்டி வைத்திருக்கிறது. பிறகு அது மெல்ல மெல்ல விரிகின்ற அழகைப் பார்க்கப் பார்க்க அதிசயம்தான்.

புளியமரம், வேப்ப மரம் ஆகியன பெரிய மரங்கள். அதன் இலைகளோ பொடிப் பொடியாகவே உள்ளன. ஆனால், சின்னஞ்சிறிய வாழையின் இலையோ நான்கு அடி ஐந்து அடி நீளம் என்றுள்ளது. ஒரு அடி ஒன்றரை அகலமும் இருக்கிறது.



வாழையை தமிழர்கள் அரம்பை, கதலி, குமரி என்றெல்லாம் அன்புப் பெயர் களில் அழைத்தார்கள். அரம்பை என்றால் அழகிய பெண் தெய்வம் என்று பொருள். விஞ்ஞானம் வளர்ச்சியடையாத காலத்தில் அன்று குறைமாதத்தில் குழந்தைகள் பிறந்தால் அதன் உயிரை காப்பாற்றுவதற்காக வாழை இலையையும் வாழை மட்டையையும் பயன்படுத்தினார்கள். குறைமாதக் குழந்தைகளின் உயிரைக் காப்பாற்ற காரணமாக இருந்தது வாழை மட்டையும் வாழை இலையுமே. வாழை மட்டை மேல் வாழை இலையை போட்டு அதன் மேல் குழந்தையை படுக்கவைத்து சிகிச்சை செய்து குழந்தையை காப்பாற்றினார்கள் நம் தமிழ் மூதாதையர்கள். குறைமாதக் குழந்தையின் உயிரைக் காப்பாற்றும் எங்கிபேட்டர் இயந்திரமாக அன்று தமிழர்கள் பயன்படுத்தியது வாழை இலையையும் மட்டையையுமே.

குறைமாதக் குழந்தைகளைக் காப்பாற்றி, வாழவைத்த காரணத்துக்காகவே வாழவைத்த தெய்வம் என்று வாழைமரம் என்ற பெயரை தமிழர்களே வைத்தார்கள்.

பல காய்கள் சேர்ந்த குலையை ஈன்று பாதுகாக்கிறது வாழை. பெண்ணானவள் மக்களைப் பெற்றுக் கொடுத்து மனிதகுலத்தைப் பாதுகாக்கின்ற மாதிரியாகத்தான் வாழையின் பங்களிப்பும்.

பெண்ணாகவே வாழையைப் பார்த்தார்கள் நம் முன்னோர்கள். ஒரு குடும்பம் சிறந்தோங்குவது பெண்ணால்தான். தாழ்ந்து சிதறுவதும் பெண்ணால்தான். வாழையும் அப்படித்தான்.

வாழை என்ற சொல் அழியாமல் நெடுகிலும் வாழ்ந்துவருதல் என்பதுதான் பொருள்.

வாழைக்குப் பக்கத்தில் கன்றுகள் வரும். அதனால் மூல வாழைக்கு தாய் வாழை என்று பெயர். குலை போட்டவுடன் குலையை வெட்டுவார்கள். பிறகு மரத்தை வெட்டிவிடுவார்கள். பலனைப் பெற்றுக்கொண்டு பலன் கொடுத்தவனையே கெடுத்துவிடுவது மனித இயல்புதானே.

ஆனால், வாழைக் கன்று இதற்கெல்லாம் மிரளுவதில்லை. என் தாய் உதவி செய்ததால் உருக்குலைந்தாள். நான் மற்றவர்களுக்கு உதவமாட்டேன் என்று பின்வாங்காது வாழைக்கன்று.

உதவிசெய்த எனக்கும் கேடு வரலாம். வந்தாலும் பரவாயில்லை. நான் என் தாயைப் போல் உதவிசெய்யத்தான் செய்வேன். அதாவது இலைகளைக் கொடுப்பேன்.

என்னையும் அவர்கள் அழிக்கலாம். என்னை அவர்கள் அழிப்பதற்குள் எனக்கொரு சிசு என் காலடியில் முளைக்கும். என் மரபை யாராலும் அழிக்கவே முடியாது.

இப்படி சொல்கிறது வாழை. சொல்லியது மட்டுமா பல்கிப் பல்கிப் பெருகி வளர்கிறது வாழை.

வாழையை குமரி என்றும் கன்னி என்றும் சும்மாவா சொன்னார்கள்.

''குமரி வாழைக்
குருந்தும் விரித்து
அமுதம் உண்க
அடிகள் ஈங்கென...''

என்று படம் பிடித்துக் காட்டுகிறார் இளங்கோவடிகள்.

குலை தள்ளிய வாழையைக் குலவாழை என்றும் குலை தள்ளாத வாழையைக் குமரி வாழை, கன்னி வாழை என்றும் சொல்வது மரபு.

வாழையின் புகழைப்பற்றி இப்படியும் பாடுகிறார் ராமலிங்க சுவாமி.

''வாழையடி வாழை என
வந்த திருக்கூட்டம்''

நமது தமிழ் மூதாதையர்கள் வாழையை பெண்ணாகவே பார்த்தார்கள். ஒரு குடும்பம் சிறந்தோங்குவது பெண்ணால்தான். தாழ்ந்து சிதறுவதும் பெண்ணால்தான். வாழையும் அப்படித்தான்.

வாழ வைப்பதும் வாழை ,தாழ வைப்பதும் வாழை என்று நம் முன்னோர்கள் அறிவு பூர்வமாக - நிதர்ஷனமாக சொன்னார்கள்.

**மு.ப.கயிலைநாதன்**

---

# இராவணன் கேட்ட தட்சணை

இராமனின் பாதம் பட காத்திருந்தது அந்த புத்தம் புதிய சேது. காரியம் முடிந்த களைப்பில் ஓய்வெடுத்துக்கொண்டிருந்த வானர சேனையை பெருமையோடு நோக்கினான் ராமன்.

இச்சிறப்புமிக்க சேது பாலத்தை ஆரம்பித் துவைக்க சிவபூஜைக்கு ஏற்பாடுசெய்ய வேண்டும். வேண்டியவற்றை தயார்செய்யுமாறு பணித்தார்.

இராமனின் விருப்பமறிந்த ஜாம்பவான் இத்தகைய சேதுவை ஆரம்பித்து, சிவபூஜை செய்துவைக்க மிகச்சிறந்த பண்டிதர் அவசியம் என்றுரைத்தார்.

அப்படி யாரேனும் அருகே உள்ளனரா என்ற இராமனின் கேள்விக்கு, இராவணன் ஒருவனே என்று தயக்கத்துடன் பதிலளித்தார் ஜாம்பவான். பதிலைக் கேட்ட இராமனின் இதழோரம் புன்னகை அரும்பியது.

பிறகென்ன யோசனை. நமது வேண்டுகோளுடன் அனுமனை அனுப் புங்கள். இப்பூஜையை சிறப்புற நடத்தித் தர அப்பண்டிதரையே வேண்டி வரவழைத்து வாருங்கள் என்றார்.

விரோதியின் தேசத்தை அடையும் வழிக்கு அவனை வைத்தே பூஜையா? இது நடக்குமா? அதிர்ச்சியில் ஆழ்ந்தனர் சுக்ரீவனும் அவனின் சேனைகளும்.

இராமனின் விருப்பமறிந்த வாயுமைந்தனை தடுக்க முடியுமா? இமைப்பொழுதில் இலங்கை அரண்மனையில் நின்றார். அரக்கர்கள் சூழ்ந்தனர், இலங்கையை தீக்கிரையாக்கியவன் திரும்பி வந்துள்ளானே?

அரக்கர்களே சண்டையிட வரவில்லை. சிவபூஜை செய்துவைக்க உத்தமமான சிவபக்தன் இராவணனை நாடி வந்துள்ளேன்.

தன் முன்னால் நிற்கும் அனுமனின் கோரிக்கையை கேட்டு வியந்தது இராவணனோடு அவனது சபையும். இது சூழ்ச்சி என்றனர் சபையோர்.

சூழ்ச்சியால் தங்களை வெல்ல இயலுமோ? தயைகூர்ந்து எங்கள் வேண்டுகோளுக்கு செவிசாய்க்க வேண்டும் என்றார் அனுமன்.

அச்சமும் ஆவேசமும் திகைப்பும் கூடி எழுந்துநின்று அனுமனை நோக்கி கூச்சலிட்டவர்களை கையமர்ச்செய்து, இந்த வேள்வியை நடத்தித்தர ஒப்புக்கொண்டான் சிறந்த சிவபக்தனான இராவணன்.

வேத சாஸ்திரங்களை கரைத்துக் குடித்த இப்பண்டிதனுக்கு எப்படி இப்படி ஒரு கீழ்த்தரமான எண்ணம் ஏற்பட்டது என பூஜை நடத்தித்தர வந்த இராவணனை பார்த்து இராமனும், சங்கு சக்கரங்கள் மட்டும் இவனது கரங்களில் இருந்தால் விஷ்ணுவாகத்தான் இவன் தோன்றுவான் என இராவணனும் எண்ணினர்.

பூஜை ஏற்பாட்டில் ஏதேனும் குறை இருந்தால் பகிரவும் என்ற இராமனின் கோரிக்கைக்கு, தசரத மைந்தா! ஏற்பாடுகள் நேர்த்தியாக உள்ளன. ஆனால், துணைவியின்று கிரஹஸ்த்தன் செய்யும் எந்தக் காரியத்தையும் சாஸ்திரங்கள் அங்கீகரிப்பதில்லை என்று பதிலளித்தார் இலங்கேஸ்வரன்.

தாங்கள்தான் வேள்வியை சிறிதும் குறைவின்றி நடத்தித்தர வேண்டும் என்றார் இராமன்.

சிறிதுநேரம் சிந்தனையில் ஆழ்ந்த இராவணன், பூஜைக்காக சீதாவை (பூஜை முடியும் வரை உங்கள் இருவருக்கும் இடையே எந்த பேச்சுவார்த்தையும் கூடாது,



மேலும், பூஜை முடிந்த மறுகணமே சீதையை அழைத்துச் சென்று விடுவேன் என்ற நிபந்தனையுடன்) வரவழைத்தார்.

சொல்லொணா வியப்பில் ஆழ்த்தும் இப்பூஜையை நடத்திக்கொடுத்தற்காக தட்சணையை தயைக்கூர்ந்து தெரியப்படுத்த வேண்டும் என்று கைக்கூப்பியவண்ணம் பண்டிதரான இராவணனிடம் வினவினார் இராமன். அதற்கு தணிந்த குரலில், இராமபிரானுக்கு மட்டுமே கேட்கும்படி இராவணன் பதிலளித்தான்.

"என்னை பண்டிதராய் மதித்து சிவபூஜை செய்ய அழைத்தமைக்கு நன்றி. மேலும், சிவபூஜைக்கு நான் தட்சணை வாங்குவதில்லை. தட்சணை தராததால் பலன் கிட்டாது என்று நீ எண்ணக்கூடும். யுத்தத்தில் ஒருவேளை நான் தோல்வியுற்று என் உயிர் பிரிய நேர்ந்தால் அத்தருணத்தில் நீ என் அருகில் இருக்கவேண்டும். இது மட்டும்தான் நான் எதிர்பார்க்கும் தட்சணை" என்றான் சகல வேதங்களையும் சாஸ்திரங்களையும் கற்றுத் தேர்ந்த இலங்கேஸ்வரன்.

# 6 ஆயிரம் டெஸ்ட் ஓட்டங்களை கடந்தார் அஸார் அலி



பாகிஸ்தான் டெஸ்ட் கிரிக்கெட் அணியின் தலைவரும், ஆரம்ப துடுப்பாட்ட வீரருமான அஸார் அலி டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் துடுப்பாட்டத்தில் தனது 6,000 ஓட்டங்களை பூர்த்திசெய்தார்.

இங்கிலாந்து மற்றும் சுற்றுலா பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இருதரப்புத் தொடரின் முதல் தொடரான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் தற்சமயம் நடைபெற்றுவருகிறது. முதல் இரண்டு போட்டிகளும் நிறைவுபெற்ற நிலையில், முதல் போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றிபெற இரண்டாவது போட்டி மழை காரணமாக வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இந்நிலையில், டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டியான மூன்றாவது டெஸ்ட் போட்டி தற்சமயம் நடைபெற்றுவருகிறது. போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடி முதல் இன்னிங்ஸில் 8 விக்கெட் இழப்புக்கு 583 ஓட்டங்களுடன் இன்னிங்ஸை இடைநிறுத்திக்கொண்டது.

பாகிஸ்தான் அணி பதிலுக்கு முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடும்போது ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய அணித்தலைவர் அஸார் அலி 43 ஓட்டங்களை கடந்த வேளையில் டெஸ்ட் அரங்கில் 6,000 ஓட்டங்களை பூர்த்திசெய்தார். 2010ஆம் ஆண்டு டெஸ்ட் அறிமுகம் பெற்ற அஸார் அலி, பாகிஸ்தான் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இதுவரையில் 6,098 ஓட்டங்களுடன் ஐந்தாவது இடத்தில் காணப்படுகிறார்.

பாகிஸ்தான் அணியின் முதல் இன்னிங்ஸில் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய அணித்தலைவர் அஸார் அலி இறுதிவரை ஆட்டமிழக்காது 141 ஓட்டங்களை குவித்தமை குறிப்பிடத்தக்கது.

# UEFA சம்பியன்ஸ் லீக்
## ஆறாவது தடவையாக சம்பியனான பேயர்ன் முனிச்





EFA சம்பியன்ஸ் லீக் தொடரின் இறுதிப் போட்டியில் பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் கழகத்தை 1-0 என்ற கணக்கில் வீழ்த்திய பேயர்ன் முனிச் கழகம் சம்பியன்ஸ் லீக் வரலாற்றில் 6ஆவது தடவையாக சம்பியன் பட்டத்தை தட்டிச்சென்றது.

காற்பந்து உலகில் இரசிகர்களால் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட 2019-20ஆம் ஆண்டுக்கான யு.ஈ.எவ்.ஏ. சம்பியன்ஸ் லீக் காற்பந்து தொடர் போர்த்துக்கல்லில் நடைபெற்றது. இந்தத் தொடரில் நேற்று நடைபெற்ற இறுதிப்போட்டியில் 5 தடவைகள் சம்பியன் பட்டம் வென்ற ஜேர்மனியைச் சேர்ந்த பேயர்ன் முனிச் கழகத்தை எதிர்த்து முதல்முறையாக இறுதிப் போட்டிக்குள் நுழைந்த பிரான்ஸைச் சேர்ந்த பாரீஸ் செயின்ட் ஜெர்மைன் (பி.எஸ்.ஜி) கழகம் மோதியது.

போட்டி ஆரம்பமாகிய முதலே இரு அணிகளும் கோல் பெற தீவிர முயற்சிகளை மேற்கொண்டனர். இரு அணிகளுக்கும் கோல் பெற அதிக வாய்ப்புகள் கிடைத்தபோதும் அவற்றை தவறவிட்டன. இதனால் ஆட்டத்தின் முதல் பாதி கோல்கள் எதுவுமின்றி முடிவடைந்தது. இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமாகியதும் கோல் பெற வேண்டும் என இரு அணிகளும் தீவிரமாக விளையாடின.

இந்நிலையில், போட்டியின் 59ஆவது நிமிடத்தில் பேயர்ன் முனிச் வீரர் கிங்ஸ்லி கமன் முதல் கோல் அடிக்க ஆட்டம் 1-0 என்ற கோல் கணக்கில் பேயர்ன் முனிச் முன்னிலை பெற்றது. இதன் பின்னர் ஆட்டம் சூடுபிடிக்கத் தொடங்கியது.

பாரீஸ் செயின்ட் ஜெர்மைன் வீரர்கள் தாங்களும் எப்படியாவது கோல் பெறவேண்டும் என தீவிர முயற்சிகளை மேற்கொண்டனர். ஆனால், எதிரணி வீரர்கள் இறுதிவரை கோல் பெற சந்தர்ப்பம் கொடுக்கவில்லை. 90 நிமிடங்கள் முடிவடைந்ததும் மேலும் 5 நிமிடங்கள் வழங்கப்பட்டன. அதிலும் பாரீஸ் செயின்ட் ஜெர்மைன் கழகத்தால் பதில் கோல் பெற முடியவில்லை.

இதனடிப்படையில் பாரீஸ் செயின்ட் ஜெர்மைனை 1-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி பேயர்ன் முனிச் 6ஆவது முறையாக யு.ஈ.எவ்.ஏ. சம்பியன்ஸ் லீக் கிண்ணத்தை தட்டிச்சென்றது. பேயர்ன் முனிச் 1974, 75, 76, 2001, 2013 மற்றும் 2020 ஆகிய வருடங்களில் இவ்வாறு கிண்ணத்தை சுவீகரித்தது.

விளையாட்டு

thamilansports@yahoo.com

கிருத்தி – அகீல்

# கலிஸ், ஸ்தாலேகர், அப்பாஸ் ஆகியோருக்கு Hall of Fame கௌரவம்

முன்னாள் அவுஸ்திரேலிய மகளிர் கிரிக்கெட் அணியின் தலைவியும், தற்போதைய கிரிக்கெட் வர்ணனையாளருமான லிஸா ஸ்தாலேகர், முன்னாள் தென்னாபிரிக்க கிரிக்கெட் சகலதுறை வீரர் ஜெக் கலிஸ்



மற்றும் முன்னாள் பாகிஸ்தான் வீரர் ஷஹீர் அப்பாஸ் ஆகியோர் சர்வதேச கிரிக்கெட் பேரவையின் 2020ஆம் ஆண்டுக்கான 'ஹோல் ஒஃப் பேஃம்' பட்டியலில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

'ஹோல் ஒஃப் பேஃம்' விருது எனப்படுவது சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒரு உயர்ந்த பட்டமாகும். கிரிக்கெட் விளையாட்டுக்கு பல்வேறு பங்களிப்புகள், சாதனைகள் புரிந்த வீர, வீராங்கனைகள் தெரிவு செய்யப்பட்டு குறித்த பட்டியலில் இணைக்கப்பட்டு கௌரவவிக்கப்பட்டு வருகின்றனர். இது பட்டமாக இல்லாவிட்டாலும் கூட சர்வதேச கிரிக்கெட் சபையின் 'ஹால் ஒஃப் பேஃம்' பட்டியலில் வீரர்கள் இணைவது மிகப்பெரிய மரியாதையாகக்கூட கிரிக்கெட் வீரர்கள் மத்தியில் கருதப்படுகிறது.

சர்வதேச கிரிக்கெட் சபையானது 2009ஆம் ஆண்டு அறிமுகம் செய்த 'ஹோல் ஒஃப் பேஃம்' பட்டியலில் இதுவரை 93 வீர, வீராங்கனைகள் இடம்பெற்றுள்ளனர்.

சர்வதேச கிரிக்கெட் அரங்கிலிருந்து ஓய்வு பெற்று ஐந்து ஆண்டுகள் கடந்த பின்னர் தகுதியானவர்களுக்கு இந்த கௌரவம் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

இலங்கை காற்பந்து சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் எவ்.எவ்.எஸ்.எல். தலைவர் கிண்ண காற்பந்து தொடர் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது.

நேற்று முன்தினம் இரண்டு காலிறுதிப் போட்டிகள் நடைபெற்றன. முதல் போட்டியில் ஜாவா லேன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து டிபண்டர்ஸ் காற்பந்து கழகம் மோதியது.

போட்டியின் முதல் பாதி ஆட்டத்தில் ஜாவா லேன் வீரர்கள் அதிக ஆதிக்கம் செலுத்தினாலும், கோல்களை பெற முடியவில்லை. முதல் பாதி ஆட்டம் கோல்கள் எதுவுமின்றி சமநிலையில் முடிவுற்றது. இரண்டாம் பாதி ஆட்டத்திலும் ஜாவா லேன் கழகம் ஆதிக்கம் செலுத்தினாலும் எதிரணியினர் சமபலத்துடன் எதிர்த்து நின்றதன் காரணமாக கோல்கள் பெற முடியவில்லை.

இந்நிலையில், போட்டியின் இறுதி விசில் அடிக்கப்பட்ட வேளையில் இரு அணிகளாலும் கோல்கள் பெறவில்லை. இதனடிப்படையில் வெற்றியாளரை தீர்மானிப்பதற்காக பெனால்டி வாய்ப்பு வழங்கப்பட்டது. குறித்த வாய்ப்பில் 3-1 என்ற கோல்கள் கணக்கில் ஜாவா லேன் கழகம் வெற்றிபெற்று முதல் அணியாக அரையிறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றது.

இதேவேளை, நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது காலிறுதிப் போட்டியில் ப்ளு ஈகில்ஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் நியூ ஸ்டார் விளையாட்டுக் கழகங்கள் பலப்பரீட்சை நடத்தின. போட்டியின் 31ஆவது நிமிடத்தில் நியூ ஸ்டார் கழகம் சார்பாக மொஹமட் அனஸ் கோல் ஒன்றினை அடித்தார். இதனுடன் முதல்பாதி முடிவில் நியூ ஸ்டார் கழகம் 1-0 என்ற அடிப்படையில் முன்னிலை பெற்றது.

மீண்டும் இரண்டாம் பாதி ஆட்டத்தில் போட்டியின் 54ஆவது நிமிடத்தில் மொஹமட் அனஸ் மற்றுமொரு கோலை அடிக்க நியூ ஸ்டார் கழகத்தின் கோல் 2 ஆக உயர்வடைந்தது. தொடர்ந்து

# மொஹமட் அனஸின் கோலால் அரையிறுதிக்குள் நுழைந்த நியூ ஸ்டார்



போட்டியின் 59ஆவது நிமிடத்தில் ப்ளு ஈகில்ஸ் கழகத்திற்காக துமிந்தவினால் முதல் கோல் பெறப்பட்டது. இறுதியில் மொஹமட் அனஸ் அடித்த இரண்டு கோல்களின் உதவியுடன் நியூ ஸ்டார் கழகம் 2-1 என்ற அடிப்படையில் வெற்றிபெற்று இரண்டாவது அணியாக அரையிறுதிக்குத் தகுதிபெற்றது.

# அட்டாளைச்சேனையில் உதைபந்தாட்ட அணிக்கான சீருடை அறிமுகம்

(எஸ்.எம்.அறூஸ்)

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் உதைபந்தாட்டத்துறையை முன்னேற்ற மடையச் செய்வதற்கான வேலைத்திட்டத்தை சோபர் விளையாட்டுக் கழகம் ஆரம்பித்துள்ளது. அந்தவகையில் இளம் உதைபந்தாட்ட வீரர்களைக் கொண்டு சோபர் ஜூனியர் அணி உருவாக்கப்பட்டுள்ளது.

புதிய அணிக்கான சீருடை அறிமுகமும், உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் மாலை அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. சோபர் ஜூனியர் உதைபந்தாட்ட அணியின் பயிற்றுவிப்பாளர் எம்.எம்.ஏ.சியாம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எச்.பி.அனீஸ், அம்பாறை மாவட்ட மெய்வல்லுனர் பயிற்றுவிப்பாளர் எஸ்.எல்.தாஜுதீன், சிரேஷ்ட உதைபந்தாட்ட வீரர் எம்.ஜே.எம்.சறூக், அனுசரணையாளர்களான எம்.சஹீல், சிராஜ், சோபர் விளையாட்டுக் கழகத்தின் ஆலோசகர் எம்.ஏ.சீ.ஹாரீத் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

இங்கு ஜூனியர் அணிக்கான சீருடை அறிமுகம் செய்துவைக்கப்பட்டதுடன், சகல வீரர்களுக்கும் அதிதிகளால் உதைபந்தாட்ட உபகரணங்களும் வழங்கப்பட்டன. இதன்பின்னர் இடம்பெற்ற நட்புறவு உதைபந்தாட்டப் போட்டியில் சோபர் ஜூனியர் உதைபந்தாட்ட அணியும், இறக்காமம் உதைபந்தாட்டக் கழக ஜூனியர் அணியும் கலந்துகொண்டன.

போட்டி நிறைவில் இரண்டு அணிகளும் 1-1 என்ற கோல்கள் அடிப்படையில் சமநிலை பெற்றபோதும், பெனால்டி முறையில் 4-1 என்ற கோல்கள் வித்தியாசத்தில் இறக்காமம் உதைபந்தாட்டக் கழக ஜூனியர் அணி வெற்றி பெற்றது.



அக்கரைப்பற்று 'ரோயல் நைட்ஸ்' *(Royal Knights)* விளையாட்டுக் கழகத்தின் கடினப் பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியும், போட்டியாளர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் மற்றும் சீருடை கையளிக்கும் நிகழ்வு, கழகத்தின் முகாமையாளரும் பிரபல தொழிலதிபருமான ஜனாப் ஜெரீனினால் அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டதுடன், சீருடையும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில், விசேட அதிதியாக பிரபல கால்பந்து வீரர் ஜனாப் ஹனீபா, கழகத்தின் நிர்வாகிகள், அங்கத்தவர்கள் அனைவரும் கலந்து சிறப்பித்தனர்.









Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7